# ஆண்டறிக்கை

# 2023

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

இலக்கம் 42, நவம் மாவத்தை, கொழும்பு 02.

## ""உங்களது முதன்மை தீவு" – இலங்கையின் தேசிய ஏற்றுமதி தரப்பெயர்

இன்றைய போட்டி நிறைந்த உலகளாவிய சந்தையில், இலங்கை தனது ஏற்றுமதித் துறைக்கு பலமான தேசிய வர்த்தக தரப்பெயரை தாபிப்பது அதற்கு மிகவும் முக்கியமானதாகும். ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் நன்கு வடிவமைக்கப்பட்ட ஊக்குவிப்புப் பிரச்சாரமானது சர்வதேச சந்தைகளில் இலங்கையின் பிரசன்னத்தை மேம்படுத்தி, உயர்தர உற்பத்திகளின் நம்பகமான மூலமொன்றாக அதை நிலைநிறுத்த முடியும்.

இந்தத் தேவையை அங்கீகரித்து, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது (ஏ.அ.ச) இலங்கைப் பங்குதாரர்களை சர்வதேச கொள்வனவாளர்களுடன் இணைக்கின்ற ஒரு சீரான வர்த்தக தரப்பெயர் அடையாளத்தின் கீழ் நாட்டின் ஏற்றுமதிகளை முழுமையாக மேம்படுத்துவதற்காக தேசிய ஏற்றுமதி தரப்பெயர் முன்னெடுப்பை ஆரம்பித்தது.

அதன்பிரகாரம், ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது இலங்கையின் தேசிய ஏற்றுமதி வர்த்தக தரப் பெயராக "உங்களது முதன்மை தீவு" என்பதை விருத்திசெய்து, பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த வர்த்தக தரப்பெயர் இலங்கையை அதன் நிலையான மற்றும் உண்மையான உற்பத்திகளுக்கான அறியப்பட்ட ஒரு முக்கியமான ஆதார இடமாக தனித்துவத்தை பறைசாற்றுகின்றது. இலங்கையின் தனித்துவமான பலம் மற்றும் திறன்களை முன்னிலைப்படுத்துவதன் மூலம், "உங்களது முதன்மை தீவு" உலகளாவிய சந்தை தேவைகளை பூர்த்தி செய்வதையும் சர்வதேச வர்த்தக அரங்கில் ஒரு முக்கிய செயற்பாட்டாளராக நாட்டின் நற்பெயரை மீளவலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த விரிவான வர்த்தக தரப்பெயர் உபாயமுறை மூலம், இலங்கை தனது ஏற்றுமதி செயல்திறனை மேம்படுத்துவதற்கும், உலகளாவிய சந்தையில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுவதற்கும் இந்த துடிப்பான துறைக்கு பங்களிக்கும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கும் பொருளாதாரத்திற்கும் நன்மைகளை தக்கவைக்கவும் விழைகின்றது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது ஏற்றுமதி வர்த்தகத்துடன் தொடர்புடைய பிரதான பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் நாட்டின் ஏற்றுமதித் துறைக்கான குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கும் வகையில், 2022 முதல் 2026 வரையிலான ஆண்டுகளுக்காக இலங்கையின் தேசிய ஏற்றுமதி வர்த்தக தரப்பெயருக்கான உந்துவாசகம், இலாஞ்சனைகள், மற்றும் ஊக்குவிப்புத் திட்டத்தை வெற்றிகரமாக இறுதிப்படுத்தியுள்ளது. "உங்களது முதன்மை தீவு", என்ற இலங்கையின் தேசிய ஏற்றுமதி வர்த்தக தரப்பெயரானது உயர்தர, நிலையான மற்றும் தனித்துவமான உற்பத்திகளுக்கான உண்மையான தயாரிப்புகளுக்கான முதன்மை ஆதார இடமாக நாட்டை நிலைப்படுத்துவதற்கான சீரான உபாயமுறையொன்றை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்த வர்த்தக தரப்பெயர் அடையாளமானது, இலங்கையை அதன் தனித்துவமான சாரத்தை பாதுகாத்து, உலகளாவிய தரத்தை பூர்த்தி செய்யும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை வலியுறுத்துகின்றது.

"உங்களது முதன்மை தீவு", என்ற பதாகையின் கீழ், இலங்கை உலகளாவிய சந்தைக்கு உயர்தர உற்பத்திகளின் அநேகமானவற்றை காட்சிப்படுத்துகிறது. இவற்றில் ஆடை, சிலோன் தேயிலை, வாசனை திரவியப் பொருட்கள், தேங்காய் உற்பத்திகள், உணவு மற்றும் பானங்கள், மீன்பிடி பொருட்கள், இறப்பர் பொருட்கள், பீங்கான் மற்றும் செரமிக் பொருட்கள், படகு மற்றும் கப்பல் கட்டுதல் மற்றும் மின்சார மற்றும் இலத்திரனியல் பொருட்கள் ஆகியவை அடங்கும். இதற்கு மேலதிகமாக, இலங்கையானது தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் மற்றும் சேவை வசதி வழங்கல் போன்ற சேவைசார் துறைகளில் சிறந்து விளங்கி, அதன் சர்வதேச ஈர்ப்பை மேலும் மேம்படுத்துகிறது.

ஒவ்வொரு துறைக்குமான தனித்துவமான வர்ண தொனிப்பொருளுடனான விசேட இலாஞ்சனைகள் வடிவமைக்கப்பட்டு அவை சீரமைக்கப்பட்ட தேசிய ஏற்றுமதி வர்த்தக தரப்பெயருடன் ஊக்குவிக்கப்படுகின்றன. இந்த முன்னெடுப்பானது 2023 நவம்பர் 23 ஆம் திகதியன்று ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளின் போது, அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த வர்த்தக தரப்பெயரின் சர்வதேச அங்குரார்ப்பண அறிமுகம் இங்கிலாந்து லண்டன் நகரில் 2024 ஜூன் மாதம் நடைபெற்ற புடவை மற்றும் ஆடை வீதிக் கண்காட்சியின்போது இடம்பெற்றது.

"உங்களது முதன்மை தீவு" மூலம், இலங்கையின் ஏற்றுமதித் துறையானது, விதிவிலக்கான திறமை, நிலைத்ததன்மை மற்றும் நம்பகத்தன்மையுடன் சர்வதேச கேள்வித்தன்மைகளை பூர்த்தி செய்வதற்கான அதன் தயார்நிலையை வெளிப்படுத்துகிறது. இந்த வர்த்தக தரப்பெயரானது இணையற்ற தரம், தனித்துவமான தயாரிப்புகள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சேவைகள் அனைத்தையும் உண்மையான நம்பகத்தன்மையுடன் வழங்குவதற்கான அர்ப்பணிப்பைக் குறிக்கிறது.

வர்த்தக ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது வர்த்தக தரப்பெயர் வீடியோக்கள், துறை சார்ந்த விடய ஆய்வு வீடியோக்கள், கைநூல்கள், துண்டுப் பிரசுரங்கள், வரவேற்பு மேசை கைநூல்கள் மற்றும் பவர்பொயிண்ட் முன்வைப்புகள் உள்ளிட்ட வர்த்தக தரப்பெயர் உத்தரவாதங்கள் திரட்டொன்றை விருத்தி செய்துள்ளது. இந்த விடயங்கள் நிலைத்த தன்மை, திறன் மற்றும் நம்பகத்தன்மையை வலியுறுத்துவதன் மூலம் இலங்கையின் ஏற்றுமதி துறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, இதன் மூலம் உலக அளவில் இலங்கையின் ஏற்றுமதிகளின் நேர்மறையான புகழுருவை மேம்படுத்துகிறது.

# உள்ளடக்கம்


| | | பக்கம |
|---|---|---|
| | உள்ளடக்கம் | 1 |
| | தலைவரின் வாழ்த்துச் செய்தி | 3 |
| | அறிமுகம் | 4 |
| | தாபனத் தகவல்கள் - பணிப்பாளர் சபை | 5 |
| | - சிரேஷ்ட முகாமைத்துவ பணியாளர் சபை | 7 |
| | கூட்டாண்மை ஆளுகை அறிக்கை | 8 |
| | கணக்காய்வுக் குழு அறிக்கை | 13 |
| | அபாய பகுப்பாய்வு | 17 |
| | நிதி அறிக்கை 2014 இலிருந்து 2023 வரையான நிதிசார் முக்கிய குறிப்புகள் | 20 |
| | ஏற்றுமதி செயற்சாதனை - 2023 | 23 |
| **1.** | **ஏற்றுமதி செயலாற்றுகை - சனவரி - டிசம்பர் 2023** | 24 |
| | 1.1 2023 ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதிகளின் கட்டமைப்பு | 25 |
| | 1.2 இலங்கையின் மாதாந்த ஏற்றுமதிகள் வியாபாரம் - 2020- 2023 | 25 |
| | 1.3 துறை வாரியான ஏற்றுமதி செயலாற்றுகை - 2022 மற்றும் 2023 | 26 |
| | 1.4 சேவைகளின் ஏற்றுமதி - 2023 | 27 |
| | 1.5 இலங்கையின் பிரதான 15 ஏற்றுமதி பயணமுடிவிடங்கள் | 27 |
| | 1.6 சுதந்திர வர்த்தக பங்காளர்களுக்கான ஏற்றுமதிகள் (இந்தியா மற்றும் பாகிஸ்தான்) | 28 |
| | 1.7 இலங்கையின் ஏற்றுமதி பிராந்தியங்கள் | 28 |
| **2.** | **2023 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்** | 29 |
| | 2.1 சந்தை அபிவிருத்தியும் தரப்பெயரிடலும் | 29 |
| | 2.1.1 வர்த்தக கண்காட்சி பங்கேற்பு - சர்வதேசம் | 29 |
| | 2.1.2 வர்த்தக கண்காட்சி பங்கேற்பு - உள்ளூர் | 36 |
| | 2.2 பீ 2 பீ (வியாபாரத்துடன் வியாபார) நிகழ்ச்சித்திட்டங்கள் | 36 |
| | 2.3 GI தரப்பெயரிடல் / வர்த்தக பெயர்முத்திரைகள்/ ஜீஐ(புவிசார் சுட்டி) | 37 |
| | 2.4 சந்தை நுண்ணாய்வு | 39 |
| | 2.5 சீனாவிற்கான இலங்கை தயாரிப்புகளுக்கான சந்தை அனுமதி | 39 |
| | | |

| | | பக்கம |
|---|---|---|
| **3** | **திறன் கட்டியெழுப்புகை / ஏற்றுமதியாளர்களின் பயிற்சி** | 41 |
| | 3.1 SME உணவு மூலப்பொருள் உற்பத்தியாளர்கள்/ஏற்றுமதியாளர்கள் இறக்குமதி ஊக்குவிப்பு மேசை ஜேர்மனியுடன் தொடர்பு கொண்டு ஐரோப்பிய ஒன்றிய சந்தை நுழைவு வசதி | 41 |
| | 3.2 கூட்டாண்மை நிறுவன கடப்பாடுகள் தொடர்பான ஜேர்மனியின் புதிய சட்டம் குறித்த வெபினார் தொடர்கள் | 41 |
| | 3.3 ஏனைய வெபினார்கள்/ கருத்தரங்குகள் / செயலமர்வுகள | 42 |
| **4** | **உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்** | 42 |
| | 4.1 இலங்கையில் நிலையான சேதன விவசாய முறைமையின் அபிவிருத்திக்கான வசதி | 42 |
| | 4.2 தேசிய பொதியிடல் நிலையத்தை (தே.பொ.நி) மீண்டும் செயல்படுத்துதல் | 45 |
| **5** | **ஏற்றுமதிக்கான SME அபிவிருத்தியை எளிதாக்குதல்** | 45 |
| **6** | **சனாதிபதி ஏற்றுமதி விருதுகள்** | 45 |
| **7** | **ஏற்றுமதி தொடர்பான வெளியீடுகள்** | 45 |
| **8** | **ஏற்றுமதியாளர்கள் மன்றம்** | 45 |
| **9** | **மின் சந்தைதளம் - இலங்கை தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் இணையவழி விளம்பரம்** | 46 |
| **10** | **குறுங்கால மற்றும் நடுத்தரகாலத்தில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளின் சுருக்கம் (2022 -2024)** | 47 |
| **11** | **2024 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் எதிர்காலத் திட்டங்கள்** | 50 |
| **12.** | **2023 நிதி வெளியீடுகள** | 51 |
| | 2023.12.31 ஆம் திகதியன்று நிதி நிலமைகள் தொடர்பான வெளிப்பாடுகள் | 52 |
| | 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான வெளிப்பாடுகள் | 53 |
| | 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்து ஆண்டிற்கான உரிமை மாற்ற வெளிப்பாடுகள் | 54 |
| | நிதிப் பாய்ச்சல் வெளிப்பாடுகள் | 55 |
| | பொதுவான தகவல்கள மற்றும் கணக்கீட்டுக் குறிப்புக்கள் | 56 |
| | நிதி வெளியீட்டுக் குறிப்புக்கள் | 54 |
| **13.** | **கணக்காய்வாளரின் அறிக்கை - 2023** | 73 |

# தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் ஆசிச் செய்தி



இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது (இ.ஏ.ச.) சட்டவாக்க ஆணையொன்றின் கீழ் நாட்டின் முதன்மையான வர்த்தக ஊக்குவிப்பு அமைப்பாக (வ.ஊ.ம.) தொழிற்படுகின்றது. உலகளாவிய வர்த்தகம் தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் மத்திய அமைப்பு என்ற வகையில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை நாட்டின் ஏற்றுமதி துறையை முன்னேற்றுவதில் உந்து சக்தியாக இருந்து முக்கிய பங்கை ஆற்றி வருகின்றது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது அதன் தொடக்கத்தில் இருந்தே ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், ஏற்றுமதிகளுக்கான உகந்த சூழலொன்றை உருவாக்குவதன் மூலம் ஏற்றுமதியாளர் சமூகத்தை ஆதரவளிப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. எமது தேசியப் பொருளாதாரத்தின் சிறிய அளவின் பின்னணியில், ஏற்றுமதி வளர்ச்சி நிலைபேறானதாக இருக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும். இதை அடைவதற்கு, அதிகரித்து வரும் உலகமயமாக்கல் மற்றும் ஒருங்கிணைப்புக்கு மத்தியில், நமது போட்டித்தன்மை அனுகூலங்களை பயன்படுத்தி, இலங்கையின் ஒப்பீட்டு நன்மைகளுக்கான போட்டி பலமாக மாற்ற வேண்டும்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை (SMEs) மற்றும் ஸ்டார்ட்அப்களின் அபிவிருத்தி மூலம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை விரிவுபடுத்துதல், பெறுமதி கூட்டப்பட்ட துறைகளின் பங்கை அதிகரித்தல் மற்றும் விசேடமான இடங்களை மையமாகக் கொண்டு எமது சந்தைகளை பன்முகப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இலங்கையை வளமான நிலைக்கு உயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். ஏற்றுமதியை ஊக்குவிப்பதன் மூலமும், வளர்ச்சிக்கான ஊக்கியாகச் செயல்படுவதன் மூலமும், இந்த மாற்றத்தில் ஏ.அ.ச. முக்கிய பங்கு வகிக்கிறது.

எங்களின் மூலோபாய தூண்களில், ஏற்கனவே உள்ள ஏற்றுமதியாளர்கள் தங்கள் சந்தைகளை விரிவுபடுத்துவதற்கு உதவுதல், புதிய ஏற்றுமதி பொருட்களை அறிமுகப்படுத்துதல், புதிய சந்தைகளில் பல்வகைப்படுத்துதல், திறன் கட்டியெழுப்புகையினை மேம்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி-நோக்கிலான வெளிநாட்டு முதலீட்டை ஈர்த்தல் ஆகியவை அடங்கும். இந்த முன்னெடுப்புகள் நமது பலத்தை அதிகரிக்கவும் இலக்கு அந்நிய செலாவணி வருவாயை அடையவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நாம் 2024 க்குள் செல்லும்போது, சர்வதேச எதிர்வுகூறல்கள் மிகவும் சாதகமான வியாபார சூழலைக் கட்டியம்கூறுகின்றன. எதிர்காலத்தைப் பற்றி நான் நம்பிக்கையுடன் இருப்பதோடு இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் காண்போம் என்றும் நம்புகிறேன்.

இறுதியாக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்ததற்காக அரசாங்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் சபையின் மதிப்புமிக்க பங்களிப்புகளுக்காக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அனைத்து பங்குதாரர்களுக்கும் அவர்களின் ஆதரவிற்காக் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். நிறுவனத்தின் இலக்கை அடைவதற்கான உறுதியான அர்ப்பணிப்பு மற்றும் தியாகம் என்பவற்றுக்காக ஏ.அ.ச. இன் முகாமைத்துவம் மற்றும் பணியாளர்களுக்கும் பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

இலங்கையின் பொருளாதாரத்தின் மிக முக்கியமான துறையாக ஏற்றுமதித் துறையானது தற்போது மாறியுள்ளதுடன், நாம் தொடர்ந்தும் பெறுபேறுகளை வழங்குவதுடன் சர்வதேச வர்த்தக அரங்கில் புதிய அடைவுகளை ஈட்டுவதற்கு மற்றுமொரு வருடத்தை எதிர்பார்க்கின்றோம்.

கலாநிதி கிங்ஸ்லி பெர்னார்ட்

**தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

## அறிமுகம்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது ஏற்றுமதிகளின் அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்புக்கான இலங்கையின் முதன்மை நிறுவனமாக 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை எற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இலங்கை எற்றுமதி அபிவிருத்தி சபையானது 2023 ஆம் ஆண்டளவில் வர்த்தக மற்றும் சேவை ஏற்றுமதிகளிலிருந்து 18.8 பில்லியன் வெளிநாட்டு செலாவணி வருமானத்தை ஈட்டும் நோக்கத்துடன் இலங்கையின் ஏற்றுமதிகளை அபிவிருத்திசெய்து ஊக்குவிக்கும் ஒரு புதிய உபாயமுறையை கையாண்டது. இதனூடாக அரசாங்கத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நோக்கங்களுக்கு பங்களிப்பு செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது கொள்கை ஆலோசகராக, கண்காணிப்பாளராக, ஊக்குவிப்பாளராக, வசதியளிப்பாளராக, அறிவு வழங்குநராக தேசிய ஏற்றுமதி இலக்குகளை அடைவதற்கு புதிய உபாயமுறையொன்றை அமுல்படுத்துவதில் அதன் பொறுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

### நோக்கு

பிரத்தியேகமான உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான முன்னோடி ஏற்றுமதி மத்திய நிலையமாக இலங்கையை நிலைப்படுத்தல்

### செயற்பணி

உபாயமுறையிலான ஒத்துழைப்பின் மூலம் இலங்கையின் ஏற்றுமதிகளை பூகோள ரீதியாக போட்டித்தன்மைகொண்டதாக மாற்ற வசதியளித்தல்.

### ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பணிகள்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்புக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அரச நிறுவனம் என்ற வகையில் பின்வரும் பணிகளை நாம் நிறைவேற்றுகின்றோம்.

- **வசதியளிப்பாளர்** - ஏற்றுமதி அபிவிருத்தியின் கேந்திர நிலையமாக சேவையாற்றல், அனைத்து பங்குதாரர்களுடனும் இணைந்து ஏற்றுமதி அபிவிருத்தி நடவடிக்கைகளை இலகுபடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல்.

- **மேம்படுத்துபவர்** - இலங்கையின் உற்பத்திகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கு உற்பத்தி, திட்டமிடல், வர்த்தகக் குறியீடு, சந்தை அபிவிருத்தி மற்றும் சந்தை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

- **அறிவை வழங்குபர்** - ஏற்றுமதி வியாபாரத்தின் சகல துறைகள் தொடர்பிலும் ஆலோசனை சேவைகளையும் தகவல்களையும் வழங்குதலும் ஏற்றுமதியாளர்களுக்கு இற்றைப்படுத்தப்பட்ட சந்தை புலனாய்வுகளை வழங்குதலும்.

- **கண்காணிப்பாளர்** - பூகோள மற்றும் உள்நாட்டு வியாபார சூழலை மதிப்பீடு செய்தல் மற்றும் ஏற்றுமதி செயலாற்றுகையை கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஏற்றுமதி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- **கொள்கைசார் ஆலோசகர்** - ஏற்றுமதிகளுக்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கு தேசிய ஏற்றுமதி அபிவிருத்திக் கொள்கை பற்றி அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குதல்.

## நிறுவனத் தகவல்கள்

### பணிப்பாளர் சபை – 2023

| | | | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1 | திரு சுரேஸ் டி மெல்<br>கலாநிதி. கிங்ஸ்லி பெர்ணாட் | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் | 11.12.2020<br>03.04.2023 | 31.03.2023<br>இது வரை |
| 2 | திரு.இந்திர மல்வத்த | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 03.04.2023 | இது வரை |
| 3 | திரு. ஜகத் வெர்னான்டோ | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 03.04.2023 | இது வரை |
| 4 | திரு ஷிரேந்ர லோரன்ஸ் | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 03.04.2023 | இது வரை |
| 5 | திரு அனுஷ்கா விஜேசிங்க | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 03.04.2023 | 07.11.2023 |
| 6 | திரு கே. ஏ விமலேந்திராஜா<br><br>பணிப்பாளர் நாயகம் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம் | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 02.03.2022 | இது வரை |
| 7 | திரு வி.எம்.டி.டி. விக்ரமசிங்க. | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 05.01.2023 | இது வரை |
| 8 | திருமதி ஏ.எச்.எஸ் பரீதா<br><br>பணிப்பாளர் நாயகம் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 14.09.2020 | இது வரை |
| 9 | திரு.ஐ.சமிந்த பதிராஜா<br><br>மேலதிக செயளாளர்- கைத்தொழ்ல் அமைச்சு | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 02.03.2023 | இது வரை |
| 10 | திருமதி காந்தி குணவர்தன<br><br>மேலதிக செயளாளர்- அபிவிருத்தி வர்த்தக அமைச்சு | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 03.05.2023 | இது வரை |
| 11 | திருமதி ரேனுகா எம் வீரகோன்<br><br>பதில் பணிப்பாளர் நாயகம் இலங்கை முதலீட்டு சபை | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 05.05.2022 | இது வரை |

| | | | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 12 | திரு கே.என் குமாரி சோமரத்ன<br><br>மேலதிக செயளாளர் (அபிவிருத்தி) துறைமுக மற்றும் விமான சேவை அமைச்சு | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 14.12.2022 | இது வரை |
| 13 | திரு சுனில் கலகம<br><br>மேலதிக செயளாளர் (அபிவிருத்தி) முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 14.12.2022 | இது வரை |
| 14 | கலாநிதி.இ.ஆர்.எஸ்.பி<br>மேலதிக செயளாளர்<br>விவசாய தொழில்நுட்ப அமைச்சு | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | 14.12.2022 | இது வரை |

## சிரேஷ்ட முகாமைத்துவ பணிப்பாளர் சபை 2023

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் | திரு சுரேஸ் டி மெல் (31.03.2023 வரை) கலாநிதி. கிங்ஸ்லி பெர்ணாட(03.04.2023 இலிருந்து) |
| 2. | பணிப்பாளர் நாயகம் | திருமதி. பி.வி.எ.எம். பத்தேகமகே |
| 3. | மேலதிக பணிப்பாளர் நாயகம் - அபிவிருத்தி | திரு. எஸ்.ஆர்.பி.இந்ரகீர்த்தி |
| 4. | மேலதிக பணிப்பாளர் நாயகம் - நிதி மற்றும் நிருவாகம் | திருமதி. பி.வி.எ.எம். பத்தேகமகே |
| 5. | பணிப்பாளர் - சந்தை அபிவிருத்தி | திருமதி அநோமா பிரேமதிலக |
| 6 | பணிப்பாளர் - பிராந்திய அபிவிருத்தி | திருமதி சேபாலிகா ஜயவர்தன |
| 7. | பணிப்பாளர் - கொள்கை மற்றும் திட்டமிடல் மூலேபாயம் | திருமதி ஓ.எம்.சீ. குமுதினி |
| 8. | பணிப்பாளர் - முதலீட்டு சேவைகள் | திரு எல்.வை.ஆர்.ஐ கொடிகார |
| 9. | பணிப்பாளர் - நிதி | திரு கே.டி. பெரேரா |
| 10. | பணிப்பாளர் - விவசாய ஏற்றுமதி | திரு ஜே.எஸ்.பதுகமே (2022.03.03 தொடக்கம்) |
| 11. | பதில் பணிப்பாளர் - தகவல் தொழில்நுட்பம | திரு டி.கே.டி.எஸ் சிசில் |
| 12. | பதில் பணிப்பாளர் - கைத்தொழில் | திருமதி மனோஜா திசாநாயக்க (2022.01.03 தொடக்கம்) |
| 13. | பதில் பணிப்பாளர் - மனித வள முகாமைத்துவம் | திரு யூ அக்மீமன |
| 14. | பதில் பணிப்பாளர் - வர்த்தக அனுசரணை மற்றும் வர்த்தக தகவல்கள் | திருமதி அசினி *வீரவர்*தன (2022.04.01 தொடக்கம்) |
| 15. | சட்ட உத்தியோகத்தர் | திருமதி டி.டி. விஜேரத்ன |
| 16. | உள்ளக கணக்காய்வாளர் | திருமதி நில்மினி ரணசிங்ஹ |
| 17. | கணக்காய்வாளர் | கணக்காய்வாளர் நாயகம் |
| 18. | வங்கியாளர்கள் | இலங்கை வங்கி<br>சம்பத் வங்கி<br>தேசிய அபிவிருத்தி வங்கி |
| 19. | பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | இலக்கம் 42. நவம் மாவத்தை கொழும்பு 02. |
| 20 | முாகாண அலுவலகங்கள் | **தென் மாகாண அலுவலகம்**<br>முதல் தளம், இல.5A,.சி.எ.ஆரியதிலக மாவத்த மாதர. |
| | | **மத்திய மாகாணம்**<br>675, 3ம் **தளம்**, வில்லியம் கோபாலவ மாவத்த கண்டி |
| | | **வடமேல் மாகாணம்**<br>2ம் தளம் G6 கட்டிடம், இல.42, மிகிந்து மாவத்த குருணாகல. |
| | | **வட மாகாண அலுவலகம்**<br>NDHA கட்டிடம், வன அலுவலக பாதை, சுண்டிக்குலி யாழ்ப்பாணம். |

## கூட்டாண்மை ஆளுகை அறிக்கை

### 01. அறிமுகம்

1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (ஸ்டுநுனு) என்பது இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்பதற்கான முதன்மையான அமைப்பாகும்.

இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்புக்கு பொறுப்பான அரச நிறுவனமாக, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (நுனுடீ) பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது:

- வசதி வழங்குநர் - ஏற்றுமதி அபிவிருத்தியின் மையப் புள்ளியாக பணியாற்றுதல், அனைத்து பங்குதாரர்களுடனான ஏற்றுமதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக'கு வசதியளித'தல' மற்றும் ஒருங்கிணைத்தல்
- ஊக்குவிப்பாளர்- இலங்கையின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்காக தயாரிப்பு, வடிவமைப்பு, வர்த்தக நாமம், சந்தை அபிவிருத்தி மற்றும் சந்தை ஊக்குவிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- அறிவு வழங்குநர் - ஏற்றுமதி வணிகத்தின் அனைத்து அம்சங்கள' மற்றும் இற்றைப்படுத்திய சந்தை நுண்ணறிவு பற்றிய ஆலோசனை சேவைகள் மற்றும் தகவல்களை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்குதல்
- கண்காணிப்பாளர் - உலகளாவிய மற்றும் உள்ளூர் வணிகச் சூழலை மதிப்பீடு செய்தல் மற்றும் ஏற்றுமதி செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும் ஏற்றுமதி இலக்குகளை அடைய பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- கொள்கை ஆலோசகர் - ஏற்றுமதிக்கு உகந்த சூழலை உருவாக்க தேசிய ஏற்றுமதி அபிவிருத்திக் கொள்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (நுனுடீ) அதன் அனைத்துச் செயற்பாடுகளினதும' வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நெறிமுறையான நடத்தை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக, கூட்டாண்மை ஆளுகையின் உயர் தரங்களைப் பேணுவதற்கு உறுதிபூண்டுள்ளது. பங்குதாரர்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதற்கும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் இந்தக் கொள்கைகளை நிலைநிறுத்த பணிப்பாளர் சபையும் சிரேட்ட முகாமைத்துவமும் அர்ப்பணிப்புடன் உள்ளன.

### 02. பணிப்பாளர் சபை

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபையானது நிறுவனத்திற்கு மூலோபாய வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையை வழங்குவதற்கு பொறுப்பாகவுள்ளது. பலதரப்பட்ட பின்னணிகள் மற்றும் நிபுணத்துவம் கொண்ட பொது மற்றும் தனியார் துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தனிநபர்களை சபை உள்ளடக்கியுள்ளதோடு, சமநிலையான மற்றும் சுயாதீனமான முடிவெடுக்கும் செயல்முறையை உறுதி செய்கிறது. சபையானது முக்கியக் கொள்கைகள், வரவு செலவு மற்றும் செயல்திறன் அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்கும் அங்கீகரிப்பதற்கும் வழக்கமாகக் கூடுகிறது, இது நிறுவனத்தின் மூலோபாய நோக்கங்களுடன் இணங்கிச்செல்வதை உறுதி செய்கிறது.

**அ) பணிப்பாளர் சபையின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள்**
**சபையானது பின்வருவனவற்றுக்கு பொறுப்பாகவுள்ளது:**

- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் மூலோபாய வழிகாட்டல்கள் மற்றும் நோக்கங்களை அமைத்தல்.
- செயற்திட்டம், உபாயமுறைகள் மற்றும் கொள்கைகளின் அமுலாக்கத்தை கண்காணித்தல்.
- நிதி செயல்திறன் மற்றும் இடர் முகாமைத்துவ மேற்பார்வை.
- சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல்.
- சிரேட்ட முகாமைத்துவத்தினை நியமித்தல் மற்றும் செயல்திறனை மதிப்பீடு செய்தல்.

## 03. நிர்வாக வழிகாட்டல்கள் கையேடு மற்றும் குழுக்கள்

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின' நிர்வாக வழிகாட்டல்கள் கையேடு ஒரு விரிவான வழிகாட்டியாக செயல்படுவதோடு, ஊழியர்கள், பணிப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு முக்கியத் தகவல் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின' கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், அதன் நடத்தை விதிகள் மற்றும் நெறிமுறைகள், அத்துடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் அல்லது அதற்குள் வேலை செய்வதற்கு தரநிலைகள் மற்றும் நடைமுறைகளைக் கட்டளையிடும் பிற நிறுவனக் கொள்கைகள் பற்றிய தெளிவான வழிகாட்டுதலை வழங்குகிறது. சபை அதன் உள்ளக செயல்பாடுகளை மேற்பார்வையிட பின்வரும் முக்கிய குழுக்களை நிறுவியுள்ளது:

1) **முகாமைத்துவக் குழு:** பணிப்பாளர்கள் சபையால் அமைக்கப்பட்ட மூலோபாய திசையை செயல்படுத்துவதற்கும், நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கும் முகாமைத்துவக் குழு பொறுப்பாகவுள்ளது.

2) **கணக்காய்வுக் குழு:** நிதி அறிக்கை, உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளை மேற்பார்வையிடுகிறது.

3) **பெறுகை குழுக்கள்:** பெறுகைக் குழுக்கள் என்பன பெறுகை விதிமுறைகள்/ வழிகாட்டுதல்களுக்கு இணங்குவதை உறுதி செய்து பெறுகை செயல்முறையை மேற்பார்வையிடுவதற்கும், நிறுவனத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் பொறுப்பாக உள்ளன. பெறுகை செயல்முறையை அதன் தன்மையின் அடிப்படையில் மேற்பார்வையிட, திணைக்கள பெறுகை குழு, ஆலோசனை பெறுகை குழு மற்றும் சிறிய பெறுகை குழு என மூன்று பெறுகை குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

4) **பயிற்சிக் குழு:** பயிற்சித் தேவைகளைக் கண்டறிதல், உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சித் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அதிகாரிகளை நியமித்தல், பயிற்சித் நிகழ்ச்சித்திட்டங்களை விருத்திசெய்தல் மற்றும் ஊழியர்களின் தொடர்ச்சியான கற்றல் மற்றும் மேம்பாட்டை உறுதி செய்வதற்கான அவர்களின் செயல்திறனை மதிப்பிடுதல் ஆகியவற்றுக்கு பயிற்சிக் குழு பொறுப்பாகும்.

5) **இடமாற்றக் குழு:** ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் இடமாற்றக் குழு, நிறுவனத்திற்குள் பணியாளர் இடமாற்றங்களுக்கான கோரிக்கைகளை மதிப்பிடுவதற்கும் அங்கீகாரமளிப்பதற்கும் பொறுப்பாகவிருப்பதோடு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின தொழில்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் போது நியாயமான மற்றும் வெளிப்படையான செயல்முறைகளை உறுதி செய்வதற்கும் பொறுப்பாகவுள்ளது.

6) **மருத்துவக் குழு**: மருத்துவ உதவித் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஊழியர்களுக்கு வழங்கப்படும் நன்மைகளை அளிப்பதற்கான செயல்முறையை இந்தக் குழு மேற்பார்வை செய்கிறது.

## 04. ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவி உயர்வுக்கான திட்டம்

ஆட்சேர்ப்புத் திட்டமானது நியாயமான மற்றும் வெளிப்படையான தேர்வு செயல்முறையை உறுதி செய்து புதிய பணியாளர்களை பணியமர்த்துவதற்கான அளவுகோல்கள் மற்றும் நடைமுறைகளை விபரிக்கின்றது. மறுபுறத்தில், பதவி உயர்வு திட்டமானது தகுதி மற்றும் செயல்திறனின் அடிப்படையில் தற'போதைய ஊழியர்களை உயர் பதவிகளுக்கு பதவிஉயர்த்துவதற்கான அளவுகோல்கள் மற்றும் செயல்முறையை வரையறைசெய்கின்றது.

## 05. வெளிப்படைத்தன்மை மற்றும் தகவல'களை வெளிப்படுத்தல்

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது வெளிப்படைத்தன்மை தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு பல்வேறு வழிமுறைகளுடாக பங்குதாரர்களுடன் ஒழுங்குமுறையாக தொடர்பு கொள்கிறது. ஆண்டு அறிக்கைகள், நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயலாற்றுகை புதுப்பிப்புகள் வெளியிடப்பட்டு பொதுமக்களுக்குக் கிடைக்கச்செய்யப்படுகின்றன. இந்த நிறுவனம் www.srilankabusiness.com என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தைபேணுவதோடு, அதன் செயல்பாடுகள், கொள்கைகள் மற்றும் ஆளுகை கட்டமைப்பு பற்றிய தகவல்களுடன் பேணப்படுகின்றது.

## 06. விசாரணை மையம் /உதவிக் கருமபீடம்

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின' உதவிக்கருமபீடம் , உலக வர'த'தக அமைப'பு (றுவுழு) வர்த்தக வசதி ஒப்பந்தத்திற்கு இணங்க, வினவல்கள் மற்றும் சிக்கல்களுக்கு சரியான நேரத்தில் மற்றும் பயனுள்ள தீர்வுகளை வழங்கும், ஏற்றுமதி, வசதிகள் அல்லது பிற ஆதரவுத் தொழிற்பாடுகள் தொடர்பான உதவி, வழிகாட்டுதல் மற்றும் கோரிக்கை சேவைகளைப் பெற வாடிக்கையாளர்களுக்கான தொடர்பு மையமாக செயல்படுகிறது.

## 07. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் மூலம் கூட்டாண்மை-மட்டத்திலான பிரதிநிதித்துவம்

கூட்டாண்மை மட்டத்திலான பிரதிநிதித்துவம் மூலம் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதன் பங்குதாரர்களுடன் தொடர்புடைய தரப்பு உறவுகளைப் பேணுகிறது, இது நிறுவனத்தின் மூலோபாய திசை, சாதனைகள் மற்றும் மதிப்பு முன்மொழிவு ஆகியவற்றின் வினைத்திறனுள்ள ஒத்துழைப்பை கொண்டிருக்கின்றது. இலங்கையில் ஏற்றுமதியை ஊக்குவித்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் முக்கிய பங்கை வலியுறுத்தும் வகையில், அரசாங்க அமைப்புகள், கைத்தொழில் பங்காளிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட பல்வேறு பங்குதாரர்களை நோக்கி இந்த தகவல் தொடர்பாடல் உள்ளது.

## 08. முகவராண்மைகளுக்கிடையிலான ஒத்துழைப்புகள்

### அ) தேசிய மட்டம்:

2021 ஜுலை 15 ஆம் திகதி முதல் 5 ஆண்டுகளுக்காக, இருபத்தி நான்கு (24) ஆலோசனைக் குழுக்கள் தற்போது செயல்படுகின்றன. இந்த ஆலோசனைக் குழுக்கள் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 10(1) இன் பிரகாரம், உற்பத்திகள் மற்றும் சேவைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதோடு, ஏற்றுமதி வர்த்தகத்தின் தொழில்பாட்டு அம்சங்களுக்கு தீர்வுகளை வழங்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு தொழிற்படுகின்றன.

ஆலோசனைக் குழுக்களின் உறுப்பினர்கள் ஏற்றுமதித் துறைகள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், தனியார் துறை சங்கங்கள், நிபுணர்கள், தொடர்புடைய அரசு நிறுவனங்கள் மற்றும் நிரல் அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் - சம்பந்தப்பட்ட தயாரிப்புத் துறைகளில் அனுபவம் உள்ளவர்கள், சம்பந்தப்பட்ட துறைகள் தங்கள் நிபுணத்துவத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பங்களிப்பு செய்ய விரும்புபவர்கள் ஆகியோரை பிரதிநித்துவம் செய்யும் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஆலோசனைக் குழுக்களில் உள்ள தனியார் மற்றும் பொதுத்துறையில் ஈடுபாடுள்ள மற்றும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய முன்மொழிவுகளை உருவாக்குவதற்கும் அவற்றைச் செயல்படுத்துவதில் திறமையானதாக மாற்றுவதற்கும் ஒரு சூழலை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பின்வரும் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளை உள்ளடக்கியதாக ஆலோசனைக் குழுக்கள் தொழிற்படுகின்றன.

1. ஆடை
2. ஆயுர்வேதம், மூலிகைப் பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள்
3. படகு மற்றும் கப்பல் கட்டுதல்
4. தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த பொருட்கள்
5. நிர்மாண சேவைகள்
6. கல்வி சேவைகள்
7. மின்னியல் மற்றும் இலத்திரனியல் கூறுகள்
8. ஏற்றுமதி உற்பத்தி கிராமங்கள்
9. இரத்தினங்கள், வைரங்கள் மற்றும் நகைகள்
10. தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் (ICT) /வியாபார நடவடிக்கைகளின் முகாமைத்துவம் (மீஆ)
11. மின் பொறியியல் நடவடிக்கைகள்
12. பணி அமைப்பு
13. கடல் மற்றும் கடல்சார் பொறியியல் நடிவடிக்கை
14. கனிம அடிப்படையிலான தயாரிப்புகள்
15. தேசிய தரகட்டுப்பாட்டு உள்கட்டமைப்பு
16. சேதன பொருட்கள்
17. அலங்கார மீன்வகை
18. மருந்துப் பொருட்கள்
19. பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் பானங்கள்
20. பிராந்திய அபிவிருத்தி

| | |
|---|---|
| 21. இறப்பர் , இறப்பர் சார்ந்த பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் | 22. கடல் உணவு மற்றும் மீன் வளர்ப்பு துறை |
| 23. வாசனைதிரவியங்கள் மற்றும் செறிவூட்டல்கள் | 24. வர்த்தக ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக தகவல் |

**ஆ) சர்வதேச மட்டம்:**

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள், இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதரகங்கள், சர்வதேச வர்த்தக சம்மேளனங்கள் மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு நிறுவனங்கள் (வீமுௗ) ஆகியவற்றுடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபை (நுனுடீ) கூட்டுறவு ஒத்துழைப்புகளை தாபித்துள்ளது.

**முடிவுரை**

முடிவாக, கூட்டாண்மை ஆளுகைகளின் மிக உயர்ந்த தராதரத்தை பேணுவதற்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றது. நிறுவனத்தின் செயல்பாடுகளின் அனைத்து அம்சங்களிலும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நெறிமுறை நடத்தை ஆகியவற்றை ஊக்குவிப்பதில் பணிப்பாளர் சபை மற்றும் சிரேட்ட முகாமைத்துவம் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றது.

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## கணக்காய்வுக் குழு அறிக்கை - 2023

**அறிமுகம்**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 41 இன் பிரகாரம், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது பணிப்பாளர் சபையின் உப குழுவொன்றாக கணக்காய்வுக் குழுவை தாபித்தது. கணக்காய்வுக் குழுவானது பொது திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் உட்பட பணிப்பாளர் சபையின் 03 நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்களை கொண்டமைந்துள்ளதோடு நல்லாட்சிக்கான அரசாங்க தொழில்முயற்சிகளின் வழிகாட்டியின் பத்தி 7.4.1 இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு மீளாய்வின் கீழான காலத்தில் கணக்காய்வுக் குழுவிற்கு திறைசேரி பிரதிநிதி தலைமை வகித்தார்.

மேற்கூறிய வழிகாட்டுதல்களின்படி, கணக்காய்வுக் குழுவானது குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறையாவது கூடவேண்டுமென்பதோடு முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இல. DMA/01-2019 இற்கு அமைவாக வருடாந்தம் குறைந்தபட்சம் 04 கூட்டங்களையாவது நடாத்துதல் வேண்டும். 2023 ஆம் ஆண்டில், நான்கு (04) கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள், கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவதானிப்பாளராக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் மற்றும் நிறைவேற்றுத் தரமற்ற சபை உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டது.

**கணக்காய்வுக் குழு கூட்டங்களின் விபரங்கள் - 2023**

| காலாண்டு | திகதி | உறுப்பினர்கள் மற்றும் அவதானிப்பாளர்கள் |
|---|---|---|
| 1வது காலாண்டு | 2023 மே 18 ஆம் திகதி | <u>**சமூகமளித்த உறுப்பினர்கள்**</u><br>திரு.கே.ஏ.விமலேந்திரராஜா தலைவர் (திறைசேரிப் பிரதிநிதி)<br>திருமதிஏ.எச்.எஸ்.பரீதா - நிறைவேற்றுத் தரமல்லாத சபை உறுப்பினர்<br><br><u>**சமூகமளிக்காத உறுப்பினர்கள்**</u><br>திருமதி நிலகசி குணசேகர நிறைவேற்றுத் தரமல்லாத சபை உறுப்பினர்<br><br><u>**அவதானிப்பாளர்**</u><br>திருமதி. எம்.பி ஜயதிலக கணக்காய்வு அத்தியட்சகர் |
| 2வது காலாண்டு | 2023 ஜூலை 13 ஆம் திகதி | <u>**சமூகமளித்த உறுப்பினர்கள்**</u><br>திரு.கே.ஏ.விமலேந்திரராஜா தலைவர் (திறைசேரிப் பிரதிநிதி)<br>திருமதிஏ.எச்.எஸ்.பரீதா - நிறைவேற்றுத் தரமல்லாத சபை உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| | | **<u>சமூகமளிக்காத உறுப்பினர்கள்</u>**<br>திருமதி அனுஸ்கா விஜேசஜங்க நிறைவேற்றுத் தரமல்லாத சபை உறுப்பினர்<br><br>**<u>அவதானிப்பாளர்</u>**<br>திருமதி. எம்.பி ஜயதிலக கணக்காய்வு அத்தியட்சகர் |
| 3வது காலாண்டு | 2023 அக்டோபர் 20, ஆம் திகதி | **<u>சமூகமளித்த உறுப்பினர்கள்</u>**<br>திரு.கே.ஏ.விமலேந்திரராஜா<br>தலைவர் (திறைசேரிப் பிரதிநிதி)<br><br>திருமதிஏ.எச்.எஸ்.பரீதா - நிறைவேற்றுத் தரமல்லாத சபை உறுப்பினர்<br><br>திருமதி கே.என். சோமரத்ன நிறைவேற்றுத் தரமல்லாத சபை உறுப்பினர்<br><br>**<u>அவதானிப்பாளர்</u>**<br>திருமதி. எம்.பி ஜயதிலக கணக்காய்வு அத்தியட்சகர் |
| 4வது காலாண்டு | 2023 டிசம்பர் 21 ஆம் திகதி | **<u>சமூகமளித்த உறுப்பினர்கள்</u>**<br>திரு.கே.ஏ.விமலேந்திரராஜா<br>தலைவர் (திறைசேரிப் பிரதிநிதி)<br><br>திருமதிஏ.எச்.எஸ்.பரீதா - நிறைவேற்றுத் தரமல்லாத சபை உறுப்பினர்<br><br>**<u>சமூகமளிக்காத உறுப்பினர்கள்</u>**<br>திருமதி கே.என். சோமரத்ன நிறைவேற்றுத் தரமல்லாத சபை உறுப்பினர்<br><br>**<u>அவதானிப்பாளர்</u>**<br>திருமதி. டுப்ளியு.எஸ். விமலவீர கணக்காய்வு அத்தியட்சகர் |

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக, நல்லாட்சி மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை இலக்கம் DMA/01-2019 க்கான அரசாங்க தொழில்முயற்சி வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கெல்லைக் அமைவாக கணக்காய்வுக் குழு தனது கடமைகளையும் பணிகளையும் மேற்கொண்டது.

## முன்னேற்றம்

மீளாய்வின் கீழான ஆண்டில், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு செயல்முறைகளில் மேம்படுகளை ஏற்படுத்துவதில் கணக்காய்வுக் குழு முக்கியப் பங்காற்றியதோடு, மற்றும் நிறுவனத்தின் நிதிசார் முகாமைத்துவ நடைமுறைகளை கணிசமாக மேம்படுத்திய பல முக்கிய பரிந்துரைகள், பணிப்புரைகள் மற்றும் முன்மொழிவுகளைச் செய்தது.

- வருடாந்த உள்ளக கணக்காய்வுத் மேம்படுத்துவதற்கான திட்டத்தை குழு மீளாய்வு செய்து, மதிப்பீடு செய்து, பரிந்துரைகளை வழங்கி, நிறுவன நோக்கங்களுடன் அதன் செயல்திறன் மற்றும் நிலைப்பாட்டையும் உறுதி செய்கிறது.
- கணக்கீட்டு தராதரங்களுடன் வருடாந்த நிதிசார் கூற்றுக்களின் இணக்கப்பாட்டையும நிதிசார் அறிக்கையிடலின் சரியானதன்மையை மேம்படுத்துவதையும் கணக்காய்வுக் குழு உறுதி செய்தது. முழுமையான மீளாய்வு மற்றும் ஆலோசனைகள் மேம்பட்ட நிதிசார் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கு பங்களித்துள்ளன.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு வினாக்கள், உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் விலகல்களை சரிசெய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை குழு மீளாய்வு செய்து மதிப்பீடுசெய்ததுடன் மற்றும் தொடர்ச்சியான மேம்பாடு மற்றும் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்தது.
- சபையின் நிலையான சொத்துகளைப் பதிவுசெய்து பராமரிக்கும் போது பிழைகள் மற்றும் தவறுகளைத் தவிர்ப்பதற்காக நிலையான சொத்து தொடர்பான நடைமுறை கையேட்டைத் தயாரிப்பதற்கான கணக்காய்வுக் குழுவின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் பெறப்பட்டன. அதன்படி, கையகப்படுத்தல், அகற்றல், மதிப்பீடு போன்றவற்றிற்கான தொடர்புடைய சுற்றறிக்கைகளைப் பின்பற்றி நடைமுறை கையேடு தயாரிக்கப்பட்டது.
- கணக்காய்வுக் குழு ீடு 1 மற்றும் ீடு 3 தர ஊழியர்களுக்கு வருடத்திற்கு ஒரு சோடி காலணிகளை வழங்குவதற்கு எந்த ஆட்சேபனையும் கொண்டிருக்கவில்லை, மாறாக முகாமைத்துவம் இரண்டு சோடி காலணிகளை வழங்க பிரேரித்திருந்தது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் இயல்பிலான நிறுவனமொன்றின் ீடு தர ஊழியர்களுக்கு இரண்டு காலணிகளை வழங்குவதற்கான ஒழுங்குமுறை விதிகள் எதுவும் இல்லை என கணக்காய்வுக் குழு அவதானித்தது. எவ்வாறாயினும், முகாமைத்துவத்தின் விளக்கத்தை பரிசீலித்த கணக்காய்வு குழு, மாத சம்பளம் மற்றும் பிஎல் தர ஊழியர்களின் வீட்டுக்கு எடுத்துசெல்லும் சம்பளத்தை போன்ற சில காரணிகளை கருத்தில் கொண்டு அவர்களது கடமைகளுடன் ஒப்பிட்டு ீடு தர ஊழியர்களுக்கு 2023 முதல் ஒரே ஒரு சோடி காலணிகளை வழங்க பணிப்பாளர் சபை பரிந்துரைத்தது. ீடு தர ஊழியர்களுக்கு ஒரு சோடி காலணிகளை வழங்குவதற்கான செலவு, திறைசேரி நிதியில் இருந்து அல்லாமல், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஈட்டப்பட்ட வருமானத்தில் இருந்து செலுத்தப்படும் என்பதும் குறிப்பிடப்பட்டது.
- சந்தை அணுகல் ஆதரவு திட்டத்தின் கீழ் மோனாலிசா தயாரிப்புகள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 40 வீத முற்பண கொடுப்பனவு தொகையான ரூபா 2.0 மில்லியனிலிருந்து

தொகையான ரூபா.1.8 மில்லியன் மீதியை மீட்டெடுக்க கணக்காய்வுக் குழு அறிவுறுத்தியதோடு ஏற்றுமதி அபிவிருத்தி சபை முகாமைத்துவத்தினால் பரிந்துரைக்கப்பட்ட 100 வீத மேலதிக கட்டணத்தில் 25 வீத தள்ளுபடி செய்யவதற்கும் ஆலோசனை வழங்கியது. வேண்டும் (மோனாலிசா நிறுவனம் ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடம் 100 வீத மேலதிக கட்டணத்தை தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்தது.ம்) நீதிமன்ற தீர்ப்பின் திகதியிலிருந்து 2023 நவம்பர் 10 ஆம் திகதியிலிருந்து இரண்டு வருடங்களினுள் மொத்தம் ரூபா 3.3 மில்லியனை (ரூபா 1.8 மில்லியன் தொகையான முற்பன கொடுப்பனவு மற்றும் ரூபா 1.5 மில்லியன் வரையான 75 வீத மேலதிக கட்டணம்) மீட்டெடுப்பதற்கும் அத்தகைய பணத்தை மீட்டெடுப்பதற்கு எடுக்கக்கூடிய காலத்தை கவனத்திற்கொண்டும் இது அறிவுருத்தப்பட்டுள்ளது. நிறுவனம் 2 ஆண்டுகளுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்தத் தவறினால், ஒப்பந்தத்தின்படி நிறுவனம் 100 வீத மேலதிக கட்டணம் செலுத்த வேண்டும். மேற்படி அனைத்து விடயங்களும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது என கணக்காய்வுக் குழு தெரிவித்துள்ளது.

- ஏற்றுமதி அபிவிருத்தி சபை முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்ட தரவுகள் மற்றும் விளக்கங்களை கருத்திற்கொண்டதன் பின்னர், ஏ.அ.சபைக்கான ரூபா 15,000/- ஆடை முற்பணத்தின் கொடுப்பனவுக்காக பிரேரணையை சமர்ப்பிக்க கணக்காய்வுக் குழு இணங்கியது. இந்த ஆடை முற்பணம் ஊழியர்களின் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்படுவதால், இந்த ஆடை முற்பணம் ஏ.அ.ச. அனைத்து ஊழியர்களுக்கும் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றதா அல்லது நிறைவேற்றுத்தரமற்ற ஊழியர்களுக்கு மற்றும் வழங்கப்படுகின்றதா என்பதை தீர்மானிக்கும்படி சபைக்கு கணக்காய்வுக்குழு சிபாரிசு செய்தது.
- கணக்காய்வுக் குழு காலாண்டு நிதி செயல்திறனைக் கண்காணித்ததோடு, செலவு-வினைத்திறன் தொடர்பாக கவனம் செலுத்தி, வீணான செலவினங்களை அகற்றுவதற்கான வாய்ப்புகளைக் கண்டறிந்தது.
- குழு காலாண்டு செயல்திறன் அறிக்கைகளை மீளாய்வு செய்ததோடு, எத்தனை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் எற்றுமதியாளர்களாக மாறியுள்ளனர், எத்தனைபேர் தமது பொதியிடல் தராதரங்களை மேம்படுத்தியுள்ளனர், எத்தனைபேர் தமது உற்பத்தி தரங்களை மேம்ப:ட்தியுள்ளனர் போன்றவை உள்ளிட்ட செயல்திறன் மேம்பாடு மற்றும் அறிக்கை தயாரிப்பு நடைமுறைகளுக்கான நுண்ணறிவு மற்றும் பரிந்துரைகளை வழங்கியது.

**கே.ஏ. விமலேந்திரராஜா**
**தலைவர் - கணக்காய்வுக் குழு**
**(பணிப்பாளர் நாயகம் - வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு)**

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## அபாய பகுப்பாய்வு

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது (EDB) சிக்கலான மற்றும் பல்பரிமான உலகளாவிய சூழலுக்கு மத்தியில் இலங்கையின் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் உறுதி பூண்டுள்ளது. எமது முயற்சிகள் வாய்ப்புகளை அதிகரிப்பதில் கவனம் செலுத்தும் அதே வேளையில், எங்களது செயல்பாடுகள் மற்றும் நோக்கங்களை பாதிக்கக்கூடிய பல்வேறு அபாயங்கள் இருப்பதை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். இந்த அபாய பகுப்பாய்வு பிரதான அபாயங்கள் மற்றும் தணிப்பு உத்திகளை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**உள்ளக தொழில்பாட்டு அபாயங்கள**

**1. மனித வள பற்றாக்குறை:**
அலுவலர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்வது அல்லது பிற நாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்கின்ற தற்போதைய போக்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபை வேலைத் திட்டத்தை செயல்படுத்துவதில் அபாயமொன்றை ஏற்படுத்துகிறது. இதை நிவர்த்தி செய்ய, பணிகளை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதை உறுதிசெய்ய தேவையான ஆட்சேர்ப்புகளை உபாயமுறை ரீதியாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை திட்டமிட வேண்டிய தேவை உள்ளது.

**2. நிதிசார் தங்கியிருப்புநிலைமை:**
ஏற்றுமதி அபிவிருத்தி சபை யானது பொதுத் திறைசெரியிலிருந்து இருந்து ஒதுக்கப்படும் நிதியை நம்பியிருப்பதன் காரணமாக அதன் வளர்ச்சி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் நிதிசார் அபாயத்தை எதிர்கொள்கிறது. இந்த அபாயத்தினை நிதியிடல் மூலங்களை பன்முகப்படுத்துவதற்காக தனியார் துறை, சாத்தியமான நன்கொடையாளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை வளர்ப்பதன் மூலம் தணிக்கப்பட முடியும்.

**ஏற்றுமதிக் கைத்தொழில் அபாயங்கள்**

**1. சந்தை அபாயம்:**

உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மைகள், புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் மாறிவரும் நுகர்வோர் விருப்பங்கள் என்பன இலங்கை ஏற்றுமதிக்கான கேள்வியை பாதிக்கலாம். ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது இந்த அபாயத்தைக் குறைக்க சந்தைப் போக்குகளை உன்னிப்பாகக் கண்காணித்து, ஏற்றுமதி இடங்களை பல்வகைப்படுத்தி மற்றும் சந்தைசார் நுண்ணறிவை மேம்படுத்தும்.

**2. வர்த்தகக் கொள்கை அபாயம்:**

தீர்வைகள் மற்றும் தீர்வை அல்லாத தடைகள் உள்ளிட்ட, வர்த்தகக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளில் ஏற்படும் மாற்றங்கள், ஏற்றுமதி போட்டித்தன்மையில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது தொடர்புடைய பங்குதாரர்களுடன் ஈடுபட்டு, ஆதரவு பிரச்சாரங்களை நடாத்தி மற்றும் சாத்தியமான எதிர்மறை தாக்கங்களைத் தணிக்க கொள்கை வழிகாட்டுதலை வழங்கும்.

## 3. விநியோகச் சங்கிலி அபாயம்:

மூலப்பொருள் பற்றாக்குறை, போக்குவரத்து இடையூறுகள் மற்றும் புவிசார் அரசியல் சிக்கல்கள் உள்ளிட்ட விநியோகச் சங்கிலியில் ஏற்படும் தடங்கல்கள் ஏற்றுமதி உற்பத்தி மற்றும் விநியோகத்தைப் பாதிக்க முடியும். வழங்கல் மூலங்களை பல்வகைப்படுத்தவும், பொருள்வழங்கல் வினைத் திறனை மேம்படுத்தவும், விநியோகச் சங்கிலி அபாயங்களைக் குறைக்கவும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பின்பற்றவும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது ஏற்றுமதியாளர்களுடன் இணைந்து தொழிற்படும்.

## 4. நிதிசார் அபாயம்:

நாணய மாற்று விகிதங்கள் , வட்டி விகிதங்கள் மற்றும் கடன் அபாயங்களில் ஏற்படும் தளம்பல்கள் ஏற்றுமதியாளர்களின் நிதிசார் நிலைத்தன்மையை பாதிக்கமுடியும். ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது ஆலோசனை சேவைகளை வழங்குதல், ஹெட்ஜிங் வழிமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் நிதிசார் அபாயங்களைத் தணிப்பதற்கான நிதியடலுக்கான அணுகலுக்கு வசதியளித்தல் போன்றவற்றை ஏற்பாடுசெய்யும்.

## 5. இணக்க அபாயம்:

தரநிலைத் தரநிலைகள், சுற்றுச்சூழல் ஒழுங்குவிதிகள் மற்றும் தொழிலாளர் சட்டங்கள் உள்ளிட்ட ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடன் இணங்காத விடயங்கள் நற்பெயருக்கு சேதம் விழைவித்தல் மற்றும் சட்டச் சிக்கல்களை ஏற்படுத்தலாம். ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது இணக்க அபாயங்களைக் குறைக்க திறன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சித்திட்டங்கள், கணக்காய்வுகளை நடாத்துதல் போன்றவற்றுக்கு ஏற்பாடுகளை செய்து சிறந்த நடைமுறைகளையும் ஊக்குவிக்கும்.

## 6. தொழில்நுட்ப அபாயம்:

துரித தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் டிஜிட்டல் சீர்குலைவுகள் என்பனவும் இலங்கை ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையை பாதிக்கலாம். ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதை ஊக்குவித்து, டிஜிட்டல் பயிற்சி திட்டங்களை வழங்கி, மற்றும் தொழில்நுட்ப அபாயங்களைக் குறைக்க தொழில்நுட்ப தீர்வுகளுக்கான அணுகலுக்கும் வசதியளிக்கும்.

## 7. இயற்கையான அனர்த்த அபாயம்:

இலங்கை வெள்ளம் மற்றும் வறட்சி உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளக்கூடியதாக இருப்பதால் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட முடியும். ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது தொடர்புடைய முகவர்களுடன் ஒத்துழைத்து, அனர்த்த தயார்நிலைத் திட்டங்களை விருத்திசெய்து, இயற்கை அனர்த்த அபாயங்களைத் தணிக்க பாதிக்கப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு உதவியை வழங்கலாம்.

8. **அரசியல் அபாயம்:**

அரசியல் ஸ்திரமின்மை, ஒழுங்குமுறை மாற்றங்கள் மற்றும் வர்த்தக மோதல்கள் ஏற்றுமதி தொழிற்பாடுகளை பாதிக்கலாம். ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது அரசியல் முன்னேற்றங்களைக் கண்காணித்து, அபாய மதிப்பீடுகளை வழங்கி, அரசியல் அபாயங்களை முகாமைசெய்வதில் ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவளிக்கும்.

இந்த அபாயங்கள் இருந்தபோதிலும், ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவளிப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு அபாயங்களைத் தணிக்க நிலையான ஏற்றுமதி வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கான செயலூக்கமான நடவடிக்கைகளை தொடர்ந்து செயல்படுத்தும்.

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

## நிதி அறிக்கை ( 2014 இலிருந்து 2023 வரை)

### பின்னணி

1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு இயங்கிவருகின்ற சட்டப்பூர்வ நிறுவனமாக, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் (EDB) அர்ப்பணிப்பு நிலையானதாக உள்ளது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையின்' நிதிப் பிரிவானது முகாமைத்துவ மற்றும் பணிப்பாளர் சபையுடன் கலந்தாலோசித்து நிதி முகாமைத்துவ செயல்பாடுகளை மேற்கொள்கின்றது.

நிதிசார் நிலை அறிக்கை, விரிவான வருமானம், ஒப்புரவில் மாற்றங்கள், பணப் பாய்ச்சல், மற்றும் குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய நிதிசார் கூற்றுக்கள், சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் தராதரங்களுடன் (IFRS) இயைந்து செல்கின்ற இலங்கை கணக்கீட்டு தராதரங்களுக்கு (SLFRS மற்றும் LKASs) அமைவாக மிகவும் நுணுக்கமாக தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த தராதரங்கள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் நிதித் தகவலின் நிலைத்தன்மையையும் ஒப்பீட்டையும் உறுதிசெய்து, அதன் நிதிச் செயலாற்றுகை பற்றிய தெளிவான புரிதலை வழங்குகிறது.

தொடர்புடைய குறிப்புகளின் கீழ் பொருத்தமானதாகக் கருதப்படுகின்ற நியாயமான பெறுமதி தொடர்பான வெளிப்பாடுகள் தவிர, ஏற'றுமதி அபிவிருத'திச' சபையானது அதன் நிதிசார் அறிக்கைகளுக்கான வரலாற்று செலவு அடிப்படையை கடைபிடித்துள்ளது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அவற்றின் இயல்பு அடிப்படையிலும் அவற்றின் ஒப்பீட்டு திரவத்தன்மை, நிதிசார் நிலைமையின் தெளிவை மேம்படுத்துதல் அடிப்படையிலும் வகைப்படுத்தப்படுகின்றன.

இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் புதிய தராதரங்கள், திருத்தங்கள் மற்றும் தற்போதைய தராதரங்களுக்கான பொருள்விளக்கங்கள் வெளியிடப்பட்டாலும், அவற்றின் தாக்கம் நிதி அறிக்கைகளில் இதுவரை மதிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும், இந்த தராதரங்கள், பொருள்விளக்கங்கள் மற்றும் திருத்தங்கள் என்பன நடைமுறைக்கு வரும்போது அதன் நிதிநிலை அறிக்கைகளுக்கு பொருத்தமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதை ஏற'றுமதி அபிவிருத'திச' சபையானது பின்பற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது.

நிதிசார் அறிக்கைகளை தயாரிப்பதானது தீர்ப்பு, மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தின் ஊகங்கள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டதாக அமைகின்றது என்பதை கவனத்தில் கொள்ளல் முக்கியமானதாகும். இந்த காரணிகள் தொடர்பான நிச்சயமற்ற தன்மை எதிர்காலத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புகளின் அளவுகளில் சீராக்கங்களுக்கு வழிவகுக்கும். ஏற'றுமதி அபிவிருத'திச' சபையானது சபையின் உண்மையான நிதி நிலையை பிரதிபலிக்கின்ற அதன் நிதிசார் அறிக்கையிடலை உறுதிப்படுத்தும் அணுகுமுறையில் விழிப்புடன் உள்ளது,

## 2014 இருந்து 2023 வரையான நிதிசார் முக்கிய குறிப்புகள்

**வருமானம்** ரூ.மில்

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திறைசேரி நிதிகள் | 518.0 | 462.8 | 364.5 | 352.6 | 529.9 | 466.9 | 343.9 | 489.2 | 351.5 | 363.8 |
| அபிவிருத்தி செயற்பாடுகள் மீதான ஏற்றுமதியாளர்களின் பங்களிப்பு | 68.6 | 84.0 | 64.9 | 60.0 | 57.4 | 89.3 | 45.4 | 21.5 | 119.0 | 233.5 |
| GIZ | - | - | - | - | - | - | - | - | - | 8.1 |
| பங்கிலாப வருமானம் | 38.0 | 54.1 | 42.9 | 60.2 | 40.2 | 34.8 | 38.6 | 40.3 | 90.7 | 58.2 |
| ஏனைய வருமானம் | 32.7 | 22.8 | 50.0 | 31.9 | 20.8 | 22.6 | 12.5 | 19.2 | 18.9 | 50.8 |
| **மொத்தவருமானம்** | **657.2** | **623.6** | **522.2** | **504.6** | **648.2** | **613.6** | **440.4** | **570.3** | **580.0** | **714.4** |

**செலவினம்** ரூ.மில்.

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 334.3 | 361.3 | 338.9 | 373.8 | 400.6 | 402.3 | 370.5 | 372.7 | 357.0 | 400.3 |
| மூலதன/அபிவிருத்தி செலவினம் | 300.3 | 245.6 | 208.0 | 227.4 | 255.8 | 199.8 | 66.7 | 109.7 | 145.8 | 317.9 |
| **மொத்த செலவினம்** | **634.6** | **606.9** | **546.9** | **601.1** | **656.5** | **602.2** | **437.2** | **482.4** | **502.8** | **718.2** |

**விரிவான வருமானம்** ரூ.மில்

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | 657.2 | 623.6 | 522.2 | 504.6 | 648.2 | 613.6 | 440.4 | 570.3 | 580.0 | 714.4 |
| செலவினம் (மீண்டெழும்/அபிவி | 634.6 | 606.9 | 546.9 | 601.1 | 656.5 | 602.2 | 437.2 | 482.4 | 502.8 | 718.2 |
| குறைபாட்டுக்கான ஏற்பாடு | - | - | - | - | - | - | - | (0.4) | (137.4) | 2.6 |
| **குறை/மிகை** | **22.6** | **16.7** | **(24.7)** | **(96.5)** | **(8.2)** | **11.4** | **3.2** | **87.9** | **214.7** | **(6.4)** |
| நிதியல்லாத கொடுக்கல்வாங்கல்கள் | | | | | | | | | | |
| இணை கம்பனிகளின் இலாபநட்ட பங்கு | 83.1 | 53.4 | 70.5 | 76.2 | (91.2) | 55.3 | 70.8 | 123.4 | 4.2 | 90.2 |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | - | - | - | - | - | - | 95.5 | (6.1) |
| **மொத்த விரிவான வருமானம** | **105.8** | **70.1** | **45.8** | **(20.3)** | **(99.4)** | **66.7** | **74.0** | **211.3** | **314.4** | **77.7** |

**நிதிசார் நிலைமை** **ரூ.மில்**

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஆதனங்கள்** | | | | | | | | | | |
| நடைமுறையல்லாத ஆதனங்கள் | 993.3 | 1,062.4 | 1,124.0 | 1,189.2 | 1,106.1 | 1,142.1 | 1,206.3 | 1,334.7 | 1,555.3 | 1,634.6 |
| நடைமுறை ஆதனங்கள் | 238.7 | 269.0 | 215.5 | 194.1 | 206.1 | 191.7 | 182.8 | 115.9 | 175.5 | 275.1 |
| **மொத்த ஆதனங்கள்** | **1,232.0** | **1,331.4** | **1,339.5** | **1,383.3** | **1,312.2** | **1,333.8** | **1,389.0** | **1,450.7** | **1,730.8** | **1,909.7** |
| **ஒப்புரவும் பொறுப்புகளும்** | | | | | | | | | | |
| ஒப்புரவு பங்களிப்பு | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 |
| செலவு மீதான திரட்டப்பட்ட வருமானம் | 1,026.3 | 1,092.3 | 1,114.2 | 1,093.3 | 1,010.8 | 1,064.9 | 1,138.7 | 1,241.8 | 1,554.4 | 1,632.0 |
| **மொத்த ஒப்புரவு** | **1,036.3** | **1,102.3** | **1,124.2** | **1,103.3** | **1,020.8** | **1,074.9** | **1,148.7** | **1,251.8** | **1,564.4** | **1,642.0** |
| **கிடைக்கப்பெற்ற மானியங்கள்** | | | | | | | | | | |
| அரசாங்க மானியங்கள் | 13.2 | 38.8 | 44.3 | 49.7 | 54.4 | 56.1 | 60.5 | 62.8 | 65.0 | 78.7 |
| அரசாங்க மானியங்கள் | (3.9) | (7.2) | (11.4) | (16.7) | (22.7) | (29.5) | (36.5) | (43.9) | (50.0) | (56.4) |
| | **9.4** | **31.6** | **33.0** | **33.0** | **31.7** | **26.6** | **23.9** | **18.9** | **14.9** | **22.3** |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | | | | | | | | |
| ஏற்பாடுகளும் ஏனைய பொறுப்புகளும் | 26.5 | 29.2 | 30.5 | 19.4 | 52.4 | 57.4 | 22.7 | 37.1 | 58.4 | 175.4 |
| ஓய்வூதிய நன்மைகள் | 84.4 | 93.2 | 88.1 | 90.0 | 79.0 | 75.4 | 77.3 | 68.2 | 27.8 | 34.0 |
| பிற செலுத்த வேண்டியவை | 75.5 | 75.1 | 63.8 | 137.5 | 128.3 | 99.4 | 116.4 | 74.7 | 65.4 | 36.0 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புகள்** | **186.4** | **197.5** | **182.3** | **246.9** | **259.7** | **232.3** | **216.4** | **179.9** | **151.5** | **245.4** |
| **மொத்த ஒப்புரவு பொறுப்புகள்** | **1,232.0** | **1,331.4** | **1,339.5** | **1,383.3** | **1,312.2** | **1,333.8** | **1,389.0** | **1,450.7** | **1,730.8** | **1,909.7** |

**1 - 11**

# ஏற்றுமதி செயலாற்றுகை

# 2023

## 01. ஏற்றுமதி செயலாற்றுகை - சனவரி - டிசம்பர் 2023

இலங்கை சுங்கத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் நேரொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2023 சனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்குள் இலங்கையின் வர்த்தக ஏற்றுமதிகள் 9.12% ஆக வீழ்ச்சியடைந்து அமெரிக்க டொலர் 11,910.7 மில்லியனாக குறைந்துள்ளது. குறிப்பாக புடவை மற்றும் ஆடை, இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள், தெங்கு மற்றும் தெங்கு சாார்ந்த உற்பத்தி துறைகளில் பிரதானமாக ஐரோப்பிய ஒன்றிய மற்றும் ஐக்கிய அமெரிக்க சந்தைகளில் ஏற்றுமதி உற்பத்திகளுக்கான குறைவான கேள்வி, உற்பத்தி செலவுகளில் எற்பட்ட அதிகரிப்பு உள்ளிட்ட உள்ளக மற்றும் வெளியக காரணிகள் காரணமாக வியாபார ஏற்றுமதிகளில் வீழ்ச்சி ஏற்பட்டது.

2023 – சனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்கான மொத்த ஏற்றுமதி வருமானம் அ.டொ 15.1 பில்லியன்களை பதிவுசெய்ததோடு இதில் அ.டொ. 11.91 பில்லியன் வர்த்தக ஏற்றுமதியையும் அ.டொ. 3.19 பில்லியன் சேவைகள் ஏற்றுமதிகளையும் உள்ளடக்கியுள்ளது. இது 2022 சனவரி முதல் டிசம்பர் வரையான பெறுமதிகளுடன் ஒப்பிடும்போது 0.74 வீத அதிகரிப்பாகும்.



## 1.1 2023 ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதிகளின் கட்டமைப்பு




## 1.2. இலங்கையின் மாதாந்த ஏற்றுமதிகள் வியாபாரம் - 2020 - 2023




**மூலம் : இலங்கை மத்திய வங்கி , இலங்கைச் சுங்கம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை**

## 1.3. துறை வாரியான ஏற்றுமதி செயலாற்றுகை - 2022 மற்றும் 2023

| உற்பத்தி | ஏற்றுமதி ஜன –ஆகஸ் 2022 (அ.டொ.மி.) | ஏற்றுமதி சனவரி – ஆகஸ்ட் 2023 (அ.டொ.மி.) | வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|
| பிடவை மற்றும் ஆடை | 5,933.52 | 4,864.53 | -18.02 |
| தேயிலை | 1,258.81 | 1,309.90 | 4.06 |
| இறப்பர் சார்ந்த உற்பத்தி | 1,018.40 | 930.24 | -8.66 |
| தென்னை சார்ந்த உற்பத்தி | 817.09 | 708.70 | -13.27 |
| வைரம், மாணிக்கக்கல் மற்றும் ஆபணரம் | 399.77 | 388.16 | -2.90 |
| மின்னியல் மற்றும் இலத்திரனியல் கூறு | 483.65 | 486.66 | 0.62 |
| வுாசனைதிரவியம் மற்றும் அத்தியாவசிய எண்ணெய் | 370.30 | 397.78 | 7.42 |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 426.39 | 427.97 | 0.37 |
| கடல் உணவு | 269.02 | 262.24 | -2.52 |
| அழங்கார மீன்கள் | 21.74 | 26.38 | 21.34 |
| மரக்கறி | 27.80 | 29.19 | 5.00 |
| பழவகை | 38.78 | 43.26 | 11.55 |
| ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் | 92.42 | 91.30 | -1.21 |
| மலர் மற்றும் இலைகள் | 14.66 | 15.01 | 2.39 |
| படகு உற்பத்திகள் | 17.40 | 78.50 | 351.15 |
| கனிய எண்ணெய் உற்பத்தி | 283.23 | 372.04 | 31.36 |
| ஏனைய வர்த்தக ஏற்றுமதி | 1,633.42 | 1,478.84 | -9.46 |
| **மொத்த வர்த்தக ஏற்றுமதி** | **13,106.40** | **11,910.70** | **-9.12** |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் /வியாபார செயன்முறை முகாமைத்துவ சேவைகள் (ICT/ BPM) | 1,112.4 | 1,226.87 | 10.29 |
| நிர்மாணச் சேவைகள் | 9.1 | 354.80 | 3,819.63 |
| நிதிச் சேவைகள் | 91.7 | 64.00 | -30.24 |
| போக்குவரத்து மற்றும் வழங்கல் சேவைகள் | 675.8 | 1,549.69 | 129.29 |
| மொத்த சேவைகள் ஏற்றுமதி | **1,889.0** | **3,195.36** | **69.15** |
| **மொத்த வர்த்தகப் பண்டம் மற்றும் சேவைகள் ஏற்றுமதி** | **14,995.4** | **15,106.06** | **0.74** |

### 1.4 சேவைகளின் ஏற்றுமதி - 2023

2023 ஜனவரி –டிசம்பர் காலத்திற்கான சேவை ஏற்றுமதிகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி அமெரிக்க டொலர் 3,195.36 மில்லியன் ஆகும் என்பதுடன், இது 2022 ஆம் ஆண்டின் நேரொத்த காலத்துடன் நோக்கும்போது 69.15 வீத அதிகரிப்பாகும். ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் மதிப்பிடப்பட்ட சேவை ஏற்றுமதிகள், ஐசிஎம் பீபிஎம், நிர்மாணம், நிதிசார் சேவைகள் போக்குவரத்து மற்றும் பெறுகைகளை உள்ளடக்குகின்றது.

### 1.5 இலங்கையின் பிரதான 15 ஏற்றுமதி பயணமுடிவிடங்கள்

பின்வரும் அட்டவணை 2023 மற்றும் சனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்குள் இலங்கையின் முக்கிய 15 ஏற்றுமதி பயண முடிவிடங்களை சுட்டிக்காட்டுகின்றது. வர்த்தக ஏற்றுமதியில் சுமார் 70% ஆன அளவு இந்த 15 சந்தைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளமை தெரியவருகின்றது.

முக்கிய 10 ஏற்றுமதி சந்தைகளில், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இத்தாலி, யூஏஈ மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் 2023 காலப்பகுதியில் மிகுந்த செயலாற்றுகையை காட்டுகின்றன.

இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையான ஐக்கிய அமெரிக்காவுக்கான வர்த்தக ஏற்றுமதிகள் 2023 இல் 23 வீதமாக இருந்தது. இலங்கையின் மிகப்பரிய ஏற்றுமதி தளமான ஐக்கிய அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகள் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் 16.91 வீதத்தினால் வீழ்ச்சியடைந்து அ.டொ 2,758.57 மில்லியனாக இருந்தது. இந்த வர்த்தக ஏற்றுமதிகளின் வீழ்ச்சியானது குறிப்பாக புடவை மற்றும் ஆடை, இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள், தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த பொருட்களுக்கான கேள்வி குறைவடைந்தமை உள்ளூர் பொருளாதார நிலைமைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி நிலைமையாகும்.

| | நாடு | ஏற்றுமதிகள் 2022 (அ.டொ. மில்) | ஏற்றுமதிகள் 2023 (அ.டொ.மில்) | வளர்ச்சி % (22-23) | ஏற்றுமதிப் பங்கு (மூ) 2023 |
|---|---|---|---|---|---|
| 1 | ஐக்கிய அமெரிக்க | 3,319.85 | 2,758.57 | -16.91 | 23.16 |
| 2 | ஐக்கிய இராச்சியம் | 966.04 | 846.16 | -12.41 | 7.10 |
| 3 | இந்தியா | 854.88 | 829.70 | -2.95 | 6.97 |
| 4 | ஜேர்மனி | 744.57 | 587.40 | -21.11 | 4.93 |
| 5 | இத்தாலி | 640.18 | 679.05 | 6.07 | 5.70 |
| 6 | நேதர்லாந்து | 428.27 | 343.47 | -19.80 | 2.88 |
| 7 | கனடா | 361.44 | 293.21 | -18.88 | 2.46 |
| 8 | ஐ.அ.எ | 345.82 | 357.09 | 3.26 | 3.00 |
| 9 | பேல்ஜியம் | 307.68 | 221.45 | -28.03 | 1.86 |
| 10 | பிரான்ஸ் | 257.52 | 304.95 | 18.42 | 2.56 |
| 11 | அவுஸ்திரேலியா | 254.40 | 226.51 | -10.96 | 1.90 |
| 12 | சின் | 253.11 | 257.73 | 1.83 | 2.16 |
| 13 | ஜப்பான் | 226.30 | 188.76 | -16.59 | 1.58 |
| 14 | புங்களாதேசம் | 217.54 | 173.87 | -20.07 | 1.46 |
| 15 | மேக்சிகோ | 190.30 | 182.77 | -3.96 | 1.53 |
| | ஏனையவை | 3,738.50 | 3,660.01 | -2.10 | 30.73 |
| | **மோத்தம்** | **13,106.40** | **11,910.70** | **-9.12** | **100.00** |

**மூலம்** : இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை

**1.6 சுதந்திர வர்த்தக பங்காளர்களுக்கான ஏற்றுமதிகள் (இந்தியா மற்றும் பாகிஸ்தான்)**

மொத்த வர்த்தகப் பண்ட ஏற்றுமதியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான நாடுகளுக்கான ஏற்றுமதிகள் 7.2 வீதமாக இருந்ததோடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் இது 3.21 வீதத்தால் வீழ்ச்சியடைந்து அ.டொ. 904.39 பெறுமதியை காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் பாகிஸ்தான நாடுகளுக்கான ஏற்றுமதிகள் முறையே 2.95 வீதம் மற்றும் 6.06 வீதத்தரினால் விழ்ச்சியடைந்தது. இந்தியாவுக்கான ஏற்றுமதிகளில் எதிர்மறைற செயலாற்றுகையானது விலங்கு உணவு (12.92 வீதம்) ஏற்றுமதியில் குறைவடைந்ததோடு பாகிஸதானுக்கான எதிர்மறை செயலாற்றுகை இறப்பர் தார்களின் குறைவான ஏற்றுமதிகளும் ஏனைய தடைகளும் காரணமாக அமைந்தது.

**1.7 இலங்கையின் ஏற்றுமதி பிராந்தியங்கள்**

பின்வரும் அட்டவணை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆண்டில் பிராந்திய ரீதியாக ஏற்றுமதிகளின் ஒப்பீட்டை காட்டுகின்றது.

| பிராந்தியம் | ஏற்றுமதிகள் 2022 (அ.டொ.மி.) | ஏற்றுமதிகள் 2023 (அ.டொ.மி.) | % வளர்ச்சி (22-23) | ஏற்றுமதிப் பங்கு 2023 விகிதம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 3,319.85 | 2,758.57 | -16.91 | 23.16 |
| ஐரோப்பிய சமூகம் (ஐக்கிய இராச்சியம் தவிர) | 3,038.59 | 2,711.93 | -10.75 | 22.77 |
| தெற்காசிய நாடுகள் | 1,261.36 | 1,192.75 | -5.44 | 10.01 |
| மத்திய கிழக்கு நாடுகள் (சைப்ரஸ் மற்றும் எகிப்து தவிர) | 998.34 | 995.00 | -0.33 | 8.35 |
| ஆசியன் நாடுகள | 374.13 | 327.95 | -12.34 | 2.75 |
| ஆபிரிக்க நாடுகள் | 301.91 | 324.79 | 7.58 | 2.73 |
| சீஐஎஸ் நாடுகள | 248.85 | 239.87 | -3.61 | 2.01 |
| ஏனையன | 3,563.37 | 3359.84 | -5.71 | 28.21 |
| **மொத்த வர்த்தக ஏற்றுமதிகள்** | **13,106.40** | **11,910.70** | **-9.12** | 100.00 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

இலங்கையின் மொத்த வர்த்தக ஏற்றுமதியில் 24% வகைகூறுகின்ற ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 காலப்பகுதிக்யில் 10.75% இனால் குறைவடைந்துள்ளதோடு இது ஆண்டுவாரியாக அ.டொ. 2,711.93 மில்லியன் பெறுமதியானதாக உள்ளது.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 காலப்பகுதிக்குள் சிறந்த ஐந்து ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கான ஏற்றுமதிகள் இத்தாலி அ.டொ.மி. 679.05 (6.07% இனால் அதிகரித்துள்ளது) ஜேர்மனி அ.டொ.மி. 587.4 (21.11% இனால் குறைந்தள்ளது), நெதர்லாந்து அ.டொ.மி. 343.47 (19.8%

இனால் குறைந்துள்ளது), பிரான்ஸ் அ.டொ.மி. 304.95 (18.42% இனால் அதிகரித்துள்ளது) மற்றும் பெல்ஜியம் அ.டொ.மி. 221.45. (28.03% இனால் குறைந்துள்ளது) ஆக இருந்தது.

2023 காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கை ஏற்றுமதிகளின் வீழ்ச்சியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது பொருளாதார நிலைமைகள், கேள்வி தளம்பல்கள், வர்த்தக கொள்கைகள், வெளியக செல்வாக்குகள், நுகர்வோர் தெரிவுகளில் மாற்றம் மற்றும் வழங்கல் சங்கிலியில் சீர்குலைவுகள் என்பன காரணமாக அமைந்தன.

## 02. 2023 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

### 2.1 சந்தை அபிவிருத்தியும் தரப்பெயரிடலும்

#### 2.1.1 வர்த்தக கண்காட்சி பங்கேற்பு - சர்வதேசம்

- **துபாயில் கல்ப் பூட் (வளைகுடா உணவு) 2023 கண்காட்சி**

ஐக்கிய அரபு அமீரக துபாயில் உள்ள உலக வர்த்தக நிலையத்தில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது 2023 பெப்ரவரி 20 முதல் 24 வரை நடைபெற்ற கல்ப் பூட் (வளைகுடா உணவு) GULFOOD 2023 கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்பை ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்தது. GULFOOD என்பது உலகின் மிகப்பெரிய உணவு மற்றும் பான கண்காட்சிகளில் ஒன்றாகும், இது சுமார் 5,000 கண்காட்சியாளர்களையும் 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 100,000 பார்வையாளர்களையும் இணைக்கிறது.

GULFOOD 2023 இல் இலங்கையின் பங்குபற்றுதலின் நோக்கம் இலங்கையின் உணவு மற்றும் குளிர்பான தயாரிப்புகளை முக்கியமாக மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் தெற்காசியா (MEASA) பிராந்தியத்தில் காட்சிப்படுத்துவதும் மேம்படுத்துவதும் ஆகும். 28 நிறுவனங்கள் (9 சி.ந. தொ மற்றும் லங்கா பழங்கள் மற்றும் காய்கறிகள் சங்கம் உட்பட) குடிபானம் மற்றும் உணவு, வாசனைத்திரவியங்கள், தேங்காய், மசாலா, தயாரிப்புகளை காட்சிப்படுத்தும் நிகழ்வில் வெற்றிகரமாக பங்கேற்றன.

இதுவரை செயல்படுத்தப்பட்ட பொருட்கட்டளைகளின் பெறுமதி சுமார் 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் பேச்சுவார்த்தையில் உள்ள கட்டளைகள் பெறுமதி 8.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்..

மேலும், கேர்.்.போர், லுலு, வெட்ஸோன் எக்-கோர்மெட் குட்னஸ், பிளாண்ட் பேஸ், எர்த் எசென்ஸ் மற்றும் டிராபிகல் போன்ற தரப்பெயருடைய சில பங்கேறபு கம்பனிகள் தமது தரப்பெயர்களை அங்காடிகளுக்கு அறிமுகப்படுத்த முடியுமாக இருந்தது.

இலங்கை ஏற்றுமதியாளர்களால் காட்சிப்படுத்தப்பட்ட சைவ/இயற்கை தயாரிப்புகளில் கொள்வனவாளர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். எ.கா: சைவ வடை, தேங்காய் பால் ஒரு பானமாக, பழச்சாறு, தேங்காய் வெல்லம், இளம் பலாப்பழம் போன்றவை. மேலும் பங்கேற்பாளர்களில் பெரும்பாலோர் புதிய சந்தை வாய்ப்புகளைப் பெறவும், புதிய பொதியிடல் போக்குகளைப் பற்றிய அறிவை அதிகரிக்கவும், ஏற்கனவே உள்ள கொள்வனவாளர்களுடன் உறவுகளை வலுப்படுத்தவும் முடியுமாக இருந்தது.

## ஜேர்மனியில் பையோபெக் 2023 கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்பு





இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக சர்வதேச சேதன உணவுச் சந்தைக்கு நம்பகமான மற்றும் உயர்தர வழங்குநர் என்ற பெரும் ஆற்றலை வெளிப்படுத்தி, இலங்கை, இயற்கை சான்றளிக்கப்பட்ட விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்து, உலகெங்கிலும் உள்ள நுகர்வோர் மத்தியில் சிறந்த நற்பெயரைப் பேணுகிறது.

கைத்தொழிலில் இலங்கையின் சிறந்த நிலையை மேம்படுத்துவதற்கான தனது முயற்சிகளைத் தொடர்ந்து முன்கொண்டுசெல்லும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது ஜேர்னியின் இறக்குமதி ஊக்குவிப்பு மேசை (IPD) உடன் இணைந்து, ஜேர்மனியின் நியூரம்பெர்க்கில் 2023 பெப்ரவரி 14 முதல் 17 வரை இடம்பெறும் உலகின் முன்னணி வர்த்தக கண்காட்சியான BIOFACH 2023 இல் 13 இலங்கை நிறுவனங்கள் (7 SMEகள் உட்பட) பங்கேற்பதை ஆதரித்துள்ளது. நான்கு புதிய SME ஏற்றுமதியாளர்கள் முதல் முறையாக நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதோடு இணைந்ததாக, இரண்டு நிறுவனங்கள் பீ 2 பீ கூட்டங்களில் பங்கேற்க வசதி செய்யப்பட்டது. இலங்கையின் கண்காட்சிப் பெவிலியனில் வாசைன திரவிய பொருட்கள், தேங்காய் சார்ந்த பொருட்கள், தேநீர், புதிய பழங்கள் மற்றும் காய்கறிகள், பானங்கள், மூலிகை பொருட்கள் மற்றும் உலர் பழங்கள் போன்ற சான்றளிக்கப்பட்ட சேதன விவசாய உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டன. கண்காட்சியில் 412 மேற்பட்ட வர்த்தக சந்திப்புகள் இடம்பெற்றன.

சுமார் 2.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான உறுதிப்படுத்தப்பட்ட வியாபார கட்டளைகள் பெறப்பட்டதோடு மற்றும் சுமார் 5.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வியாபார பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருகின்றன. ஆகஸ்ட் வரை நிறைவேற்றப்பட்ட கட்டளைகளின் பெறுமதி அ.டொ. 0.185 மில்லியன் ஆகும்.

மேலும், பயோபெக் கண்காட்சியின் போது சேதன விவசாய உற்பத்திகளை தயாரிக்கும் 7 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கம்பனிகளுக்கு ஒரு கல்வி சுற்றுலா ஏற்பாடுசெய்யப்பட்டதோடு சேதன விவசாய உற்பத்திகள் தொடர்பான சர்வதேச சந்தை குறித்த விழிப்புணர்வைப் பெற ஒரு கல்வி சுற்றுலா ஜீஜஇஸட் நிறுவனத்துடன் இணைந்து 2023 பிப்ரவரி 12 முதல் 24 வரை ஜெர்மனி மற்றும் நெதர்லாந்தில் கண்காட்சிக்கு பின்னரான கல்விச் சுற்றுலா இடம்பெற்றது. பங்கேற்பாளர்கள் ஐரோப்பிய ஒன்றிய நிறுவனங்களுடன் நேரடி தொடர்புகளை உருவாக்கி, பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளுடன் ஜெர்மன் சந்தையில் நுழைவதற்கான பொதியிடல் தேவைப்பாடு, சான்றுப்படுத்துகை மற்றும் பிற சந்தை அணுகல் தேவைகள் ஆகியவற்றில் தங்கள் திறனை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு கிடைத்தது.

தற்போது, 7 இலங்கை நிறுவனங்களில் 4 நிறுவனங்கள் ஐரோப்பிய ஒன்றிய கொள்வனவாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

- **ஜப்பான் தகவல் தொழிநுட்ப வாரம்**

இன்டெக்ஸ், ஒசாகா நகரில் இடம்பெறும் ஜப்பான் தகவல் தொழில்நுட்ப வாரம் 2023 கண்காட்சியில் 8 இலங்கை நிறுவனங்களின் பங்கேற்பை ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்ததோடு 2023 ஜனவரி 18 முதல் 20 வரை மற்றும் வியாபார சந்திப்புகளும் இடம்பெற்றன.

நிகழ்வுக்கு முன்னதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை பிரதிநிதிகளுக்கு சந்தை அறிவு பரிமாற்ற அமர்வை நடத்தியது மற்றும் டோக்கியோவில் உள்ள இலங்கை தூதரகம் 2023 ஜனவரி 16 ஆம் திகதியன்று டோக்கியோ மற்றும் ஒசாகாவில் வியாபார பொருத்தம் உருவாக்கும் கூட்டங்களை எளிதாக்கியது. டோக்கியோவின் மினாடோ-குவில் உள்ள சின் ஓபன் லேப்பில் டோக்கியோ பீ 2 பீ கூட்டங்கள் நடைபெற்றன. சுமார் 50 B2B கூட்டங்களை உள்ளடக்கிய நிகழ்வில் 30 ஜப்பானிய நிறுவனங்கள் கலந்து கொண்டன.

B2B நிகழ்வுகளின் போது, மொத்தம் 101 வியாபார சந்திப்புகள் வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டன.

மேலும், ஒசாகா வர்த்தக சம்மேளனத்தின் ஆதரவுடன் 8 இலங்கை நிறுவனங்களுக்காக ஒசாகாவில் உள்ள கௌரவ துணைத் தூதரகத்தால் 2023 ஜனவரி 18ஆம் தேதி இதேபோன்ற வியாபார பொருத்தப்பாடு கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. நிறைவேற்றப்பட்ட வியாபார கட்டளைகளின் பெறுமதி சுமார் US$ 20,000 ஆகும் மற்றும் சுமார் US$. 450,000 பெறுமதியான கட்டளைகள் பேச்சுவார்த்தையில் உள்ளது.

பங்கேற்பாளர்கள் கிளவுட் அடிப்படையிலான பிஓஎஸ், ஸ்மார்ட் கிரிட் மிடில்வேர், ஹெல்த் கேர் சிஸ்டம், ஏபிஜ மானிடைசர் மற்றும் ஏபிஜ திரட்டி, சேவை மாற்றம் தீர்வு, மொபைல் பயன்பாடு மற்றும் கணினி விளையாட்டுகள் போன்ற புதிய தயாரிப்புகள்/மென்பொருள் பயன்பாடுகளை மத்திய ஜப்பானுக்கு அறிமுகப்படுத்த முடிந்தது.

- **தகவல்தொழிநுட்ப வசந்தம் லக்சம்பர்க்**

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது 03 புதிய ஸ்டார்ட் அப்கள் மற்றும் 05 புதிய SMEகள் உட்பட 8 இலங்கை தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்கேற்பை ICT Spring Europe மற்றும் பெல்ஜியம், லக்சம்பேர்க் மற்றும் பிராங்பேர்ட்டில் 2023 ஜூன் 26 ஆம் திகதி முதல் ஜூலை 01 ஆம் திகதி வரை வியாபார / நெட்வொர்க்கிங் கூட்டங்களில் ஏற்பாடு செய்துள்ளது.

நிகழ்வுக்கு முன்னதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை, பிரதிநிதிகளின் மென் திறன்களை வளர்ப்பதற்காக, ஐரோப்பிய ஒன்றிய சந்தை தகவல், லக்சம்பர்க் வியாபார கலாச்சாரம், நெறிமுறைகள் மற்றும் சந்தைப்படுத்தல் பொருட்களை தயாரித்தல் ஆகியவற்றில் முன் கண்காட்சி செயலமர்வொன்றை நடத்தியது.

இந்த நிகழ்வு மூன்று நாடுகளில் வியாபார ஊக்குவிப்பு நிகழ்வுகள் / வியாபார சந்திப்புகளை உள்ளடக்கியது. ICT Spring Europe வர்த்தக கண்காட்சி லக்சம்பர்க்கில் ஜூன் 29 மற்றும் 30 ஆந் திகதிகள் வரை நடைபெற்றது. கண்காட்சிக்கு முன்னதாக, பிரஸ்ஸல்ஸில் உள்ள இலங்கை தூதரகம், பிரஸ்ஸல்ஸில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் பிரதிநிதிகளுக்கு வியாபார

சந்திப்புகளை ஏற்பாடு செய்திருந்தது. அதுமட்டுமின்றி, இலங்கை தூதரகம், ஜெர்மனியில் உள்ள ஒரு இலங்கைப் பிரஜையுடன் Frankfurt இல் பங்குபெறும் நான்கு நிறுவனங்களுக்கு (Enhanzer, Huex, SLT, Arimac) வியாபார சந்திப்புகளை ஏற்பாடு செய்தது. மேற்கண்ட நிகழ்வுகளின் போது மொத்தம் 83 வியாபாரக் கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றில், 10 பெல்ஜிய தகவல் தொழிநுட்ப நிறுவனங்களுடன் பிரஸ்ஸல்ஸில் 12 சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஒரு நிறுவனம் சுமார் அ.டொ.2,500 பெறுமதியான உறுதிப்படுத்தப்பட்ட வியாபார கட்டளைகளைப் பெற்றுள்ளது. அமெரிக்க டொலர் 31,300 மதிப்பிலான கட்டளைகளை மூன்று நிறுவனங்கள் பெற்றுள்ளன. மற்ற நிறுவனங்கள் பின்தொடர்தல் வேலைகளில் ஈடுபட்டுள்ளன மற்றும் அடுத்த 06 மாதங்களுக்குள் வியாபாரங்கள் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கண்காட்சியின் போது, புதிய தயாரிப்புகள் / மென்பொருள் பயன்பாடுகளை ஐரோப்பிய ஒன்றிய சந்தையில் அமிர்சிவ் டெக்னாலஜி தயாரிப்புகள் (AR/ VR/ சிமுலேசன்), கேமி∴பிகேசன் (கேமிங்), செயல்முறை ஆட்டோமேசன், டிஜிட்டல் செயல்முறை ஆட்டோமேசனுக்கான கிளவுட் ஈஆர்பி இயங்குதளம், நிகழ் நேர உற்பத்தி திட்டமிடல் அமைப்பு, பிளாக் செயின் அடிப்படையிலான கார்பன் ரெஜிஸ்ட்ரி, டிஜிட்டல் பேங்கிங் பிளாட்∴பார்ம், பாட் காஸ்ட் லிஸ்டர் , ஸ்மார்ட் டிஜிட்டல் வியாபார அட்டை, செயற்கை நுண்ணறிவு செயல்படுத்தப்பட்ட பங்கு வர்த்தக தயாரிப்பு தொகுதிகள், செயல்திறன் சந்தைப்படுத்தல், வியாபார நுண்ணறிவு மற்றும் தரவு பகுப்பாய்வு, mCash Fintech தளம், Telco மென்பொருள்மயமாக்கல் ஆகியவற்றை பங்கேற்பாளர்களினால் அறிமுகப்படுத்த முடிந்தது. மேலும் பங்கேற்பாளர்கள் பெல்ஜியம், பிராங்பர்ட், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய புதிய சந்தைகளுக்கு செல்லவும் முடிந்தது.

மேலும் பங்கேற்பாளர்கள் தொடர்புடைய பங்குதாரர்கள் மற்றும் அரசாங்க அலுவலர்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் வாய்ப்பு கிட்டியதோடு, அந்த நாடுகளிலுள்ள ஆரம்ப மட்ட சூழல் முறைமையையும் புரிந்துகொள்ள முடியுமாயிருந்தது.

மேலும் பங்கேற்பாளர்கள் லக்கசம்போர்க்கில் வாழும் இலங்கை கம்பனி உரிமையாளர்களை சந்திப்பதற்கான வாய்ப்பை பெற்றதோடு முன்னணி வியாபாரங்களை அடையாளங்கண்டு அதில் பங்காளராக இருப்பதற்கு ஆர்வமுடையவாகளாக இருந்தனர்.

- **ஸ்வீடனில் சில்லறை தொழில்நுட்ப கண்காட்சி 2023 மற்றும் டென்மார்க்கில் வியாபார சந்திப்புகள்**

ஸ்வீடனில் உள்ள Gothenburg & Stockholm இல் 2023 மே 29 ஆந் திகதி முதல் யூன் 01 ஆந் திகதி வரை நடைபெற்ற **சில்லறை தொழில்நுட்ப எக்ஸ்போ கண்காட்சி** 2023 மற்றும் வியாபார நெட்வொர்க்கிங் கூட்டங்களில் இலங்கையின் 9 தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்கேற்பதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்ததோடு டென்மார்க்கின் கோபன்ஹேகனில் இலங்கை நாட்டு அறிக்கை வெளியிடுதல் மற்றும் நெட்வேகிங் கூட்டங்களையும் ஏற்பாடு செய்தது.

இந்நிகழ்வுக்கு முன்னதாக, ஸ்டாக்ஹோமில் உள்ள இலங்கை தூதரகத்தின் உதவியுடன் பிரதிநிதிகளுக்கு சந்தை அறிவு பரிமாற்ற அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

வியாபார சந்திப்புகள் மற்றும் நெட்வொர்க்கிங் நிகழ்வுகளின் போது, கோபன்ஹேகன், கோதன்பர்க் மற்றும் ஸ்டாக்ஹோம் ஆகிய மூன்று நகரங்களில் 119 வியாபாரம் முதல் வியாபார சந்திப்புகள் வரை ஏற்பாடு செய்யப்பட்டன. மூன்று நிறுவனங்கள் சுமார் அ.டொ.0.741 மில்லியன் பெறுமதியான வியாபார கட்டளைகளை பெற்றுள்ளன, மேலும் ஆண்டுக்கு அ.டொ 1.062 மில்லியன் கட்டளைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஏனைய நிறுவனங்கள் பின்தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதோடு மற்றும் அடுத்த 06 மாதங்களுக்குள் வியாபாரங்கள் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டென்மார்க் வாடிக்கையாளர்களிடையே இலங்கையின் திறன்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2023 மே 30 ஆம் திகதி அன்று டென்மார்க்கில் இலங்கை தகவல் தொழில்நுட்பத் தொழில்துறை பற்றிய இலங்கை நாட்டு அறிக்கை வெளியிடப்பட்டது.

கண்காட்சியின் போது, பங்கேற்பாளர்கள் புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தி டென்மார்க் மற்றும் ஸ்வீடனுக்குள் நுழைய முடிந்தது. உணவக முகாமைத்துவ தீர்வு, ERP மென்பொருள், செயற்கை புலனாய்வு அடிப்படையிலான டிஜிட்டல் மாற்றம் தீர்வு, நிறுவன பயன்பாடுகள், மின்னனு வர்த்தகம், மொபைல் பயன்பாடு, செயற்கை புலனாய்வு தீர்வுகள், Fintech சார்ந்த மொபைல் வாலட், டெல்கோ பயன்பாடு, வாடிக்கையாளர் பராமரிப்பு தீர்வு, மொபைல் மற்றும் இணைய பயன்பாடுகள் போன்ற புதிய தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், நோர்டிக் சந்தையில் புதிய மென்பொருள் பயன்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன

மேலும், பங்கேற்பாளர்கள் நோர்டிக் சந்தையைப் பற்றிய நேரடி நுண்ணறிவுகளைப் பெற்றதோடு, இலங்கை தூதரகம், ஆசியா ஹவுஸ் மற்றும் சில உள்ளூர் பங்காளிகளுடன் வலுவான உறவை ஏற்படுத்தினர். சுவீடன் சந்தையின் நடத்தை, அதன் குடிமக்கள் மற்றும் கலாச்சாரம், தரப்பெயர் மேம்பாடு மற்றும் தரப்பெயர் வேறுபாடு பற்றிய அறிவையும் அவர்கள் பெற்றனர்.

- **தாய்பெக்ஸ் அனுகா 2023**

2023 மே 23 முதல் 27 வரை தாய்லாந்தில் நடைபெறும் Thaifex 2023 கண்காட்சியில் 05 புதிய/SMEகள் உட்பட 08 இலங்கை உணவு மற்றும் பானங்கள் உற்பத்தி/ஏற்றுமதி நிறுவனங்கள் பங்குபற்ற ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்துள்ளது. இதோடு இணைந்ததாக தாய்லாந்து, சீனா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து கொள்வனவாளர்ககளுடன் 26 B2B சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

பங்குபற்றும் நிறுவனங்கள அமெரிக்க டொலர் 1.73 மில்லியன் மதிப்புள்ள 26 உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகளைப் பெற்றுள்ளன, மேலும் அமெரிக்க டொலர் 2.77 மில்லியன் மதிப்புள்ள கட்டளைகள் பெற பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

மேலும், பங்கேற்பாளர்கள் ஆசியா பசுபிக் பிராந்தியத்தில் ஆரோக்கியமான ஆயத்த உணவு மற்றும் சிற்றுண்டித் தொழிற்துறையானது இலங்கையின் உணவு மற்றும் குடிபான கம்பனிகள் நம்பிக்கைக்குரிய வாய்ப்புகளுடன் வேகமாக வளர்ந்து வரும் பிராந்தியமாக இருப்பதை அவதானிக்க முடிந்தது. கிழக்கு ஆசிய சந்தையில் ஹலால் சான்றிதழுக்கான தேவை அதிகரித்து காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆசிய கொள்வனவாளர்கள் (சீனா, ஜப்பான், தாய்லாந்து, இந்தியா) ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அவுஸ்திரேலிய கொள்வனவாளர்களையும் சந்திக்க இது ஒரு நல்ல தளமாக இருந்தது. இலங்கை ஏற்றுமதியாளர்களால் காட்சிப்படுத்தப்பட்ட சைவ உணவு மற்றும் சுத்தமான வர்த்தக பெயர் தயாரிப்புகளில் கொள்வனவாளர்கள் ஆர்வம் காட்டினர்.

- **SIAL கனடா 2023**

2023 மே 9 முதல் 11 வரை கனடாவின் டொராண்டோவில் நடைபெற்ற SIAL Canada 2023 கண்காட்சியில் 08 புதிய / சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உட்பட 12 இலங்கை கண்காட்சியாளர்களின் பங்கேற்புக்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபை . ஏற்பாடுகளை செய்துள்ளது.

பங்கேற்பாளர்களுக்கான முன்கூட்டிய செயலமர்வு நடைபெற்றதுடன் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை சமூக வலைத்தளங்களுடாக முன் விளம்பர நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

கண்காட்சியின் போது, 3 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உட்பட ஆறு புதிய நிறுவனங்கள் கனடா சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், பங்கேற்பாளர்கள் பெறுமதி சேர்க்கப்பட்ட தேங்காய் கர்னல் தயாரிப்புகள், கறுவாப்பட்டை, சைவ உணவுப் பொருட்கள், உணவுப் பொருட்கள், குறைந்த சர்க்கரை பொருட்கள், இயற்கை பொருட்கள், சாப்பிடத் தயாராக உள்ள பொருட்கள் மற்றும் நுகர்வோர் பொதிகளுக்கான புதிய போக்குகளை அடையாளம் காண முடிந்தது. கனேடிய உணவகங்களில் இலங்கை மிளகுக்கான சந்தை வாய்ப்புகளும் அடையாளம் காணப்பட்டன. வரையறுக்கப்பட்ட செத்சுவ ஆயுள்வேத வைத்தியசாலை தனியார் நிறுவன கூட்டு முயற்சிகளுக்கு இரண்டு வாய்ப்புகளைப் பெற்றது. பிரணஜீவா காப்ஸ்யூல் தயாரிப்பை நனோ தொழில்நுட்பமாக மாற்றுவதற்கு கனேடிய நிறுவனத்துடன் ஒத்துழைத்து, கனடா மற்றும் அமெரிக்காவில் உள்ள புதிய செயற்பாட்டாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியது.

பங்கேற்பாளர்கள் கனடா இலங்கை வர்த்தக மாநாட்டின் உறுப்பினர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது.

அ.டொ. 81,000 மில்லியன் பெறுமதியான உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகள் பெறப்பட்டன, மேலும் மொத்தம் அ.டொ.540,700 கட்டளைகள் பெறுவதற்கு பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. ஆயுர்வேத உணவு சப்ளிமெண்ட்ஸ் தொடர்பான இரண்டு கூட்டு முயற்சிகளுக்கான கலந்துரையாடல்களும் தொடங்கப்பட்டுள்ளன.

- **சிறிய மற்றும் நடுத்தர சர்வதேச தொழில்முயற்சி கண்காட்சி (CISMEF) 2023**

2023 ஜூன் 27 முதல் 30 ஆம் திகதி வரை சீனாவின் குவாங்சோவில் நடைபெற்ற CISMEF கண்காட்சியில் வாசனைத்திரவியங்கள், இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்ள், தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த தயாரிப்புகள், ஆடை, தேயிலை மற்றும் வாழ்க்கை முறை தயாரிப்பு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 24 இலங்கை நிறுவனங்களின் பங்கேற்பை ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்தது.

உடனடி விற்பனையின் பெறுமதி - இரத்தினங்கள் மற்றும் நகைகள், வாழ்க்கை முறை தயாரிப்புகள், தேநீர் போன்ற பொருட்களுக்கு அடொ. 40,700, இரத்தினங்கள் மற்றும் நகைகள், தும்பு, வாழ்க்கை முறை தயாரிப்புகள், தேநீர் மற்றும் பெறப்பட்ட 25 விசாரணைகளுக்கு அ.டொ.291,500 பெறுமதியான உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகள் பெற பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

நிகழ்வின் போது, பங்கேற்பாளர்கள் மற்ற நாடுகளில் இருந்து பங்குபற்றிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுடன் தொடர்புகொள்வதன் மூலம் உலகளாவிய வர்த்தகச் சூழல் குறித்த தங்கள் அறிவை மேம்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றனர்.

மேலும், 07 புதிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் பங்கேற்பாளர்கள் சீன சந்தை வாய்ப்புகள் மற்றும் அவர்களின் தற்போதைய தயாரிப்பு வரம்பில் தேவையான மேம்பாடு, தரம் மற்றும் வடிவமைப்பு மற்றும் சந்தை தேவைகளை பூர்த்தி செய்ய சரியான விலையுடன் நேரடியாக தகவல்களைப் பெற முடிந்தது.

- **சியோல் உணவு மற்றும் ஹோட்டல் சோ**

தென் கொரியாவின் சியோலில் 2023 மே 30 முதல் ஜூன் 2 வரை சியோல் உணவு மற்றும் ஹோட்டல் கண்காட்சியில் 03 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுடன் 05 புதிய நிறுவனங்கள்

உட்பட 06 இலங்கை கண்காட்சியாளர்களின் பங்கேற்பை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்தது மற்றும் பேச்சுவார்த்தையின் கீழ் அ.டொ 50,000 பெறுமதியான கட்டளைகளை பெற முடிந்தது . M/S Gain Holdings (Pvt) Ltd மற்றும் Southern cinnamon (Pvt) Ltd ஆகியவை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மூலம் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் முதல் முறையாக பங்கேற்றன.

பங்கேற்பாளர்கள் தனிப்பட்ட கண்காட்சியாளர்களால் நடத்தப்பட்ட சமூக ஊடக பிரச்சாரங்கள் மூலம் தென் கொரியாவில் (இலங்கை மளிகைப் பொருட்கள் / முந்திரி / கித்துல் பொருட்கள் போன்றவை) இன சந்தையில் தங்கள் தயாரிப்புகளை அறிமுகப்படுத்த முடிந்தது. மூன்று (3) பீ 2 பீ கூட்டங்களும் நிகழ்வுக்குப் பிறகு கூட்டு முயற்சிகளின் சாத்தியமான ஒத்துழைப்புக்கான நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

தென் கொரியாவில் வாசனை திரவியத் தொழிலுக்கு இரண்டு நிறுவனங்கள் தங்கள் பொருட்களை (அத்தியாவசிய எண்ணெய்கள்) வழங்குவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளன. இணைய வழி கடைக்கு கொரிய தரப்பிலிருந்து இரண்டு நிறுவனங்கள் பரீட்சார்த்த உத்தரவை உறுதிப்படுத்தியுள்ளன.

- **68 வது பேங்கொக் இரத்தினக்கல் மற்றும் ஆபரண சந்தையில் இலங்கை கூடம் (BGJF) (2023)**

68 வது பேங்கொக் இரத்தினக்கல் மற்றும் ஆபரண சந்தை 2023 இற்கான இலங்கையின் வியாபாரக் குழு ஏழு(7) இலங்கை கம்பனிகளை உள்ளடக்கியுள்ளது: ஏ.ஆர். ஜெம்ஸ் (பிறைவட்)லிமிட்டட், ஜெமெக்ஸ் லங்கா, குளோபல் ஜெம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட், ஜெம் பெரடைஸ், நெசுரல் செபயார் சிலோன் (பிறைவேட்) லிமிட்டட், மற்றும் சிலோன் பியுட்டி ஜெம்ஸ் ஆகிய 7 கம்பனிகளை உள்ளடக்கியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் செலவின் ஒரு பகுதி இலங்கை ஏற்றுமதி சபையினால் மீளளிக்கப்படுகின்றது. இலங்கை காட்சிக்கூடம் மிகவும் பெறுமதியான மற்றும் ஓரளவு பெறுமதியான இரத்தினக்கற்களையும் இரத்தினக்கல் பொதிக்கப்பட்ட ஆபரணங்களையும் காட்சிப்படுத்தியது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது 2017 இல் இருந்து தாய்லாந்து வர்த்தக நிலையம் சென்னையுடன் ஊக்குவிப்பு உடன்படிக்கையொன்றை செய்துகொண்டுள்ளதோடு, BGJF இல் இலங்கையின் பங்களிப்பை ஏற்பாடுசெய்துள்ளது. ஆதன் நீண்டகால பரஸ்பர புரிந்தணர்வின் அடிப்படையில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது இவ்வருடம் இலங்கை கண்காட்சிக்கூடத்தை நிர்மாணிக்க சிறந்த விகித்தில் விசேடமான இடமொன்றை பெற முடியுமாயிருந்தது.

68 வது பேங்கொக் இரத்தினக்கல் மற்றும் ஆபரண சந்தை-2023 இல் பங்குபற்றிய கம்பனிகள், இந்த கண்காட்சியானது பல்வேறுபட்ட வெளிநாட்டு கொள்வனவாளர்களிடமிருந்து அதிக கட்டளைகளைப் பெற இலங்கை இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்களுக்கு மிக்சிறந்த தளமொன்றை வழங்கியதாகவும் சர்வதேச சந்கையில் காணப்படுகினற புதிய போக்குகளை ஆராய்வதற்கும் வழியமைத்ததாக தெரிவிக்கின்றனர்.

#### 2.1.2 வர்த்தக கண்காட்சி பங்கேற்பு - உள்ளூர்

பின்வரும் உள்ளூர் வர்த்தக கண்காட்சிகளில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்கேற்புக்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்தது.

- **ஃபேசெட்ஸ் ஸ்ரீலங்கா இன்டர்நேசனல் ஜெம் என்ட் ஜுவல்லரி சோ 2023, 7 - 9 ஜனவரி 2023 –**

  10 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் விற்பனை மற்றும் கட்டளைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- **பாதணிகள் மற்றும் தோல்பொருள் கண்காட்சி 2023, 3-5 பெப்ரவரி 2023** - 07 சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்கேற்பு ஏற்பாடுசெய்யப்பட்டது. உடனடி விற்பனைகள் ரூபா 1.72 மில்லியன்.

- **ஜேஜரீஎப் - 2023 யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது, 3-5 மார்ச் 2023** - 10 சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்கேற்பு ஏற்பாடுசெய்யப்பட்டது. ஊடனடி விற்பனை ரூபா 1.45 மில்லியன் 06 கம்பனிகளுக்கான மறைமுக ஏற்றுமதி - ரூபா 10.45 மில்லியன் (ஐ.இரா, .ஐ.அமெ., கனடா, ஜேர்மனி, மற்றும் அவுஸ்திரேலியா)

- **"இலங்கையில் தயாரிக்கப்பட்டது" கண்காட்சி, மார்ச் 31 முதல் ஏப்ரல் 2, 2023 வரை** - NEDA, மாவட்ட செயலகத்தால் மற்ற அனைத்து பங்குதாரர்களுடன் நடத்தப்பட்ட கண்காட்சியில் ஏற்றுமதி அபிவிருத்தி சபை தகவல் கருமபீடம் ஏற்பாடு செய்யப்பட்டது.

- போட் சோ கூட்டு ஏற்பாடு – 2023

### 2.2 பீ 2 பீ (வியாபாரத்துடன் வியாபார) நிகழ்ச்சித்திட்டங்கள்

சந்தை இணைப்புகளை உருவாக்குதல் மற்றும் உடனடி வியாபார கட்டளைகளைப் பெறுதல் ஆகிய நோக்கங்களுடன், ஏற்றுமதி அபிவிருத்தி சபை வெளிநாட்டு கொள்வனவாளர்களுடன் சுமார் 55 பீ 2 பீ சந்திப்புகளை ஏற்பாடு செய்தது (தேங்காய் சார்ந்த -12, ஆயுர்வேதம் - 02, கடல் உணவு - 02, வெட்டு பூக்கள் மற்றும் தழைகள் - 01, தேநீர் - 01, பழங்கள் மற்றும் காய்கறிகள் -01, ஆடை -01, எலக்ட்ரானிக்ஸ் – 04, இரத்தினக்கல் மற்றும் நகை – 02, இறப்பர் சார்ந்த தயாரிப்புகள் – 02, லைட் இன்ஜினியரிங் -01, நிர்மாணம் – 06, கல்விச் சேவைகள் – 01, த.தொ மற்றும் வி.ஊ.மு -01 மற்றும் பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்கள் – 12).

**பீ 2 பீ சந்திப்புகளின் முடிவுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன**

- ஒரு நிறுவனம் 5 கிலோ கொயர் செங்கற்களுக்கு (20 அடி கொள்கலன்) அ.டொ 0.85 மில். பெறுமதியான கட்டளைகளை பெற்றுள்ளது.
- நான்கு இலங்கை ஏற்றுமதியாளர்கள் பூனாக்கிற்காக இந்திய வாங்குபவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். ஒரு நிறுவனம் அ.டொ. 0.35 மில் பெறுமதியான கட்டளைகளை பெற முடிந்தது.
- ஒரு தாய்வான் கொள்வனவாளருக்கு 8 உலர்ந்த தேங்காய் ஏற்றுமதி நிறுவனங்களை அறிமுகப்படுத்தியது.
- ஒரு இங்கிலாந்து கொள்வனவாளருக்கு 9 தேங்காய் நீர் உற்பத்தி செய்யும் ஏற்றுமதியாளர்களை அறிமுகப்படுத்தியது.

- ஐரோப்பிய ஒன்றிய மற்றும் ஐக்கிய இராச்சிய சந்தைகளில் கவனம் செலுத்தும் ஒரு நேபாள கொள்வனவாளருக்கு 04 மூலிகை மற்றும் ஆயுர்வேத நிறுவனங்களை அறிமுகப்படுத்தியது.
- சீன சந்தையில் இரண்டு கடல் உணவு ஏற்றுமதியாளர்களை அறிமுகப்படுத்தியது
- சீன சந்தையில் 03 இரத்தினக்கல் மற்றும் ஆபரண நிறுவனங்களை அறிமுகப்படுத்தியது
- நேபாளம், ஓமன், உகாண்டாவில் வியாபார நிகழ்ச்சித்திட்டங்கள் / கூட்டங்களை இணைக்க 04 கட்டுமான நிறுவனங்களுக்கு உதவியது.
- மொசாம்பிக் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட கட்டுமான நிறுவனங்களின் பங்கேற்புடன் மொசாம்பிக் வெபினார் மாநாட்டை நடத்தியது மற்றும் 4 இலங்கை கட்டுமான நிறுவனங்களை மொசாம்பிக்கில் உள்ள திட்டங்களுடன் இணைத்தது. மேலும், ஆர்வ விருப்பங்கங்களை சமர்ப்பிப்பதற்கான நிதி வசதிகளுடன் இலங்கை நிறுவனங்களிடையே மொசாம்பிக்கில் நடந்து வரும் 13 திட்டங்களின் விவரங்களை பகிர்ந்து கொண்டது.
- இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இந்தோனேசியாவின் நாளந்தா பௌத்தப் பல்கலைக்கழகத்துடன் இணையவழியூடாக விரிவுரையாளர்களாக (04 வெற்றிடங்கள், 18 விண்ணப்பங்கள்) இணைக்கப்பட்டுள்ளனர். ஒரு விண்ணப்பதாரி ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளார்.
- கனடாவில் உள்ள புலம்பெயர் இலங்கையர்களுக்கு 8 இலங்கை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை அறிமுகப்படுத்தியது. புலம்பெயர்ந்தோரின் ஆதரவுடன் மூன்று நிறுவனங்கள் வியாபார கலந்துரையாடல்களை ஆரம்பித்தன.
- பஹ்ரைனில் உள்ள இலங்கை தூதரகத்தின் வேண்டுகோளின் பேரில் ஏற்றுமதி அபிவிருத்தி சபை பெண் தொழில்முனைவோர் குழுவை பஹ்ரைனுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தது. 2023 மார்ச் 7 முதல் 11 வரை சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்த நிகழ்ச்சியில் 9 பெண் தொழில்முனைவோர் பங்கேற்று, பஹ்ரைனில் தொடர் கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகளை நடத்தினர். ஆறு நேர்மறையான தொடர்புகள் பெறப்பட்டுள்ளன, பஹ்ரைனில் ஒரு நிறுவனத்தை நிறுவுவதற்கான கூட்டு முயற்சி வாய்ப்பு மற்றும் 2 நிறுவனங்கள் ஏப்ரல் மாதத்தில் சாத்தியமான கொள்வனவாளர்களுக்கு மாதிரிகள் அனுப்பப்பட்டன.

### 2.3 தரப்பெயரிடல் / வர்த்தக பெயர்முத்திரைகள் / ஜிஐ (புவிசார் சுட்டி)

**சிலோன் கறுவாவுக்கான ஜி.ஐ**

புவிசார் சுட்டி சான்றளிக்கப்பட்ட பொருட்களாக இலங்கை கறுவா ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. புவிசார் சுட்டி கறுவாப்பட்டை கட்டுப்பாட்டு பொறிமுறையை நிறுவுவதற்கான செயன்முறை இடம்பெற்றுவருகின்றது. ஏற்றுமதி வேளாண்மைத் துறையுடன் இணைந்து பெறுமதிச் சங்கிலியின் உற்பத்தியாளர்கள், செயலிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 12 மாவட்ட சங்கங்கள் நிறுவப்பட்டன. சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ஜிஐ விவரக்குறிப்புகள் மற்றும் உள் கட்டுப்பாட்டு பொறிமுறையை எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. 385 பங்கேற்பாளர்களுக்கு கொழும்பு, பதுளை, காலி, மாத்தறை, கேகாலை, கண்டி, கம்பஹா, களுத்துறை, அம்பாந்தோட்டை மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட விவசாயி / செயலி பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. மாவட்ட சங்கங்கள் பயிற்சியை செயல்படுத்துவதற்கு பொறுப்பாகும் மற்றும் உறுப்பினர்களிடையே ஜிஐ விவரக்குறிப்புகள் மற்றும் உள் கட்டுப்பாடுகளை கடைபிடிக்கின்றன.

சிலோன் கறுவாப்பட்டை பாதுகாக்கப்பட்ட புவியியல் குறியீடு (ACCPGI) இலங்கைக்காக நிறுவப்பட்ட விவரக்குறிப்புக்கு இணங்க விநியோகச் சங்கிலியில் மூன்று நிலை கட்டுப்பாடுகளை (சுய கட்டுப்பாடு, உள் கட்டுப்பாடு மற்றும் வெளிப்புற கட்டுப்பாடுகள்) செயல்படுத்தும் நோக்கத்துடன் கறுவாப்பட்டை ஜி.ஐ.மாவட்ட சங்கங்களின் செயற்குழு உறுப்பினர்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டது.

சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC) மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து ஏற்றுமதி அபிவிருத்தி சபை, 2023 ஆகஸ்ட் 04, அன்று ஹோட்டல் கிங்ஸ்பரியில் ACCPGI சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தை நடத்துவதற்கு உதவியது.

சிலோன் கறுவாப்பட்டை பாதுகாக்கப்பட்ட புவியியல் குறியீட்டு (ACCPGIA) சங்கத்தின் நிர்வாகக் குழுவிற்கான பயிற்சி கட்டுப்பாட்டு ஒன்றியத்துடன் இணைந்து ஏற்றுமதி அபிவிருத்தி சபை இல் இடம்பெற்றதுடன், செயற்குழு உறுப்பினர்கள் உள்ளக கணக்காய்வாளர்களாகச் செயற்படுவதற்கு வழிகாட்டும் புத்தகங்கள் உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டன.

ஏற்றுமதியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி மே மாதம் 26 ஆம் திகதி ஏற்றுமதி அபிவிருத்தி சபை வளாகத்தில் 35 பங்கேற்பாளர்களுடன் நடத்தப்பட்டது.

ACCPGI இல் அங்கம் வகிக்கும் மற்றும் பிற தகுதிகளை பூர்த்தி செய்யும் கறுவாப்பட்டை பங்குதாரர்கள், கறுவாப்பட்டை வெட்டு குயில்கள், கறுவாப்பட்டை தூள், கறுவாப்பட்டை இலை எண்ணெய் மற்றும் 100 வீத தூய்மையான கறுவாப்பட்டை பட்டை எண்ணெய் உள்ளிட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட சிலோன் கறுவாப்பட்டை பொதிகளில் "பீஜீஐ அடையாளத்தை" பயன்படுத்த விண்ணப்பிக்கலாம். சிலோன் கறுவாப்பட்டை இலங்கையில் வளர்க்கப்பட்டு, பதப்படுத்தப்பட்டு, உற்பத்தி செய்யப்படுகிறது.

கணக்காய்வு மற்றும் புவிசார் சுட்டி சான்றிதழ் கற்கையை நடத்த 10 விவசாயி பெறுமதி சங்கிலிகள் பீஜிஐ இணக்கப்பாட்டுக்காக மற்றும் 35 சாத்தியமான உற்பத்தியாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். சிலோன் கறுவாப்பட்டை மற்றும் மடகாஸ்கர் கறுவாப்பட்டையின் ஒப்பீட்டு நோக்கங்களுக்காக உயிரியல் மற்றும் இரசாயன பகுப்பாய்வுக்காக சீசெல்ஸின் உயர்ஸ்தாணிகர் ஆணையத்திடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட மடகாஸ்கர் கறுவாப்பட்டை மாதிரிகள் கோரப்பட்டன.

**தேசிய ஏற்றுமதி தரப்பெயர்**

இலங்கையின் ஏற்றுமதி உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான சர்வதேச அங்கீகாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும் இலங்கை உற்பத்திகள் மீதான கொள்வனவாளர்களின் கருத்தை மேம்படுத்தும் நோக்குடனும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது தேசிய ஏற்றுமதி தரப்பெயர் மற்றும் ஊக்குவிப்பு திட்டத்தை விருத்திசெய்துள்ளது.

தேசிய ஏற்றுமதி தரப்பெயரானது இலங்கையின் அதிமேதகு சனாதிபதியினால் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் 2023 நவம்பர் 23 ஆம் திகதியன்று இடம்பெற்ற சனாதிபதி ஏற்றுமதி விருது வழங்கல் வைபவத்தில் உத்தியோகபூர்மாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வானது தேசிய ஏற்றுமதி தரப்பெயருக்காக வடிவமைக்கப்பட்ட நாட்டு வீடியொவொன்றை ஆரம்பித்ததன் மூலம் முக்கியமானதாக அமைந்தது.

## 2.4 சந்தை நுண்ணாய்வு

- 48 சந்தை அறிக்கைகள் இறுதி செய்யப்பட்டு ஏற்றுமதி அபிவிருத்தி சபை . இணையதளத்தில் வெளியிடப்பட்டது. ாவவிள:.:.:.ஹறற.எசடையமெயடிரளைநெளள.உழஅ.:.நழிழசவநசள.:.அயசமநவ-ிசழகடைநள.:. (துருக்கி, ஈரான், ரஸ்யா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஈராக், இஸ்ரேல், சவுதி அரேபியா, ஜோர்டான், கத்தார், குவைத், லெபனான், ஓமன், பஹ்ரைன், சைப்ரஸ், லிபியா, தென்னாப்பிரிக்கா , கென்யா, எகிப்து, எத்தியோப்பியா, நைஜீரியா, சீ'ல்ஸ், தான்சானியா, மொசாம்பிக், கானா, மொராக்கோ, இந்தோனேசியா, மலேசியா, பாகிஸ்தான், ஹாங்காங், சீனா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் மற்றும் சிங்கப்பூர், ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரியா, இத்தாலி, பெல்ஜியம் , நெதர்லாந்து, போலந்து, ஸ்லோவாக்கியா. ஹங்கேரி, ருமேனியா ரூ நேபாளம்)
- ஜப்பானுக்கான ஆடைத் துறையில் சந்தை ஆராய்ச்சி செய்யப்பட்டு, தொழில்துறையினரிடையே பரப்பப்பட்டது. கனடாவில் சந்தை ஆராய்ச்சி இறுதி கட்டத்தில் உள்ளது மற்றும் அவுஸ்திரேலியாவில் சந்தை ஆராய்ச்சி தயாராகி வருகிறது.
- IFC இன் உதவியின் கீழ் Euromonitor International உடன் பெறுமதி சேர்க்கப்பட்ட கறுவாப்பட்டை தயாரிப்புகள் குறித்த சந்தை ஆய்வு நடத்தப்பட்டது.
- "உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளுடன் (GVCs) இணைப்பதில் இலங்கையின் மின்னணு மற்றும் மின்சாரத் துறை ஏற்றுமதியாளர்களுக்கான சவால்கள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்" குறித்த ஆராய்ச்சி ஆய்வு நிறைவு பெற்றது.
- சுவிஸ் இறக்குமதி ஊக்குவிப்பு திட்டத்தின் (SIPPO) உதவியுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட ஜவுளி/ஆடைகள், மீன் மற்றும் கடல் உணவு, பதப்படுத்தப்பட்ட உணவுக்கான சுவிஸ் மற்றும் ஐரோப்பிய சந்தையில் உள்ள வாய்ப்புகள் குறித்த மூன்று சந்தை ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. வெபினாருக்குப் பிறகு, சந்தை ஆய்வு அறிக்கைகளின் கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சி ஆய்வுகளை நடத்திய ஆலோசகர்களின் பங்கேற்புடன் மூன்று வெபினார்கள் மூலம் ஏற்றுமதியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் பரப்பப்பட்டன. ஏற்றுமதி அபிவிருத்தி சபை இணையதளத்தில் ஆய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- "விவசாயப் பொருட்களுக்கான சந்தை நுழைவுத் தேவைகள்" - சீனா, ஜப்பான், அவுஸ்திரேலியா, ரஸ்யா மற்றும் அமெரிக்கா" பற்றிய ஒரு அறிக்கை. முடிக்கப்பட்டு ஏற்றுமதி அபிவிருத்தி சபைஇணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.

## 2.5 சீனாவிற்கான இலங்கை தயாரிப்புகளுக்கான சந்தை அனுமதி

- **கறுவாப்பட்டை**

  சீன சந்தைக்கு கறுவாப்பட்டையை ஏற்றுமதிசெய்வதற்கு தற்போதுள்ள தடைகளை அகற்றுவதற்கு தேவையான நடைமுறைகளை இறுதிப்படுத்துவதற்காக சீன மக்கள் குடியரசின் சுங்கத்தின் பொது நிர்வாகம் (GACC) மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சுடன் 2023 செப்டம்பர் 11 அன்று பெய்ஜிங்கில் உள்ள இலங்கை தூதரகத்தில் இருந்து இறுதி அங்கீகாரம் பெறப்பட்டது. பெருந்தோட்ட அமைச்சு இராஜதந்திர நெறிமுறையில் கையெழுத்திட இணங்கியுள்ளது.

  அனைத்து தனிமைப்படுத்தல் சிக்கல்கள் குறித்து கலந்துரையாட 2023 செப்டம்பர 18 அன்று ஏற்றுமதி அபிவிருத்தி சபை . இல் தாவர தனிமைப்படுத்தல் திணைக்களத்தின் தலைவருடன் ஒரு சந்திப்பு இடம்பெற்றது.

முதல் கட்டத் தொழிற்சாலை விஜயத்திற்காக தகுந்த ஏற்றுமதியாளர்கள்/உற்பத்தியாளர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களை பெருந்தோட்ட அமைச்சுடன் பகிர்ந்து கொண்டனர்.

பிசிசி இலாஞ்சனைக்காக 5 புதிய கம்பனிகள் மதிப்பீடுசெய்யப்பட்டதோடு 3 இற்கு சிபாரிசு செய்யப்பட்டதோடு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட உள்ளன.

- **கடல் உணவு**

கடற்றொழில் நெறிமுறையானது கரடுமுரடான நீர்வாழ் பொருட்கள் துறைக்காக முன்மொழியப்பட்டதோடு GACC ஆனது, அதே இட ஆய்வு அல்லது வீடியோ சோதனை நடத்துவதற்கு முன் சீன நிபுணர்களால் முன்கூட்டியே மதிப்பீடு செய்யும் செயல்முறையை நடத்துவதற்கான ஒழுங்குறுத்துகை பொருட்கள் மற்றும் நிறுவன தகவல் தொடர்பான விவரங்களைக் கோரியுள்ளது.

பெய்ஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக, இலங்கையின் தகுதிவாய்ந்த அதிகாரியான மீன்பிடி மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தால் (DFAR) முறையாக நிரப்பப்பட்ட கேள்விக்கொத்து மற்றும் தகவல்களை விரைவில் GACC க்கு சமர்ப்பிக்க வேண்டிய தேவை உள்ளது.

இறுதி செய்யப்பட்ட நெறிமுறை ஏற்கனவே சிங்கள மொழிபெயர்ப்புடன் மீன்பிடி மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தால் GACC க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நெறிமுறையில் கையொப்பமிடுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2023 ஜனவரி 15 ஆம் திகதி அன்று அமைச்சினால் சீன தூதரகத்திற்கு அனுப்பப்பட்டது.

தொலைநிலை ஆய்வு திட்டம் மற்றும் வீடியோ ஆய்வு தொடர்பான பிற தகவல்கள் தூதரகத்திடம் இருந்து சம்பந்தப்பட்ட தரப்பினரை தற்காலிகமாக தயார் செய்ய கோரப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் பிற தொடர்புடைய தளங்கள் (மீன்பிடி துறைமுகங்கள், படகுகள், ஆய்வகங்கள் போன்றவை) கடற்றொழில் அமைச்சினால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

- **அன்னாசி**

சீனாவில் உள்ள இலங்கை தூதரகத்தின் உதவியுடன், சீன சந்தையை அணுகுவதற்கு வரி அல்லாத தடைகளை நீக்கி இலங்கை அன்னாசிப்பழத்திற்கான ஏற்றுமதி சந்தையை திறக்க ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு வசதி செய்யப்படுகிறது. இந்த நோக்கத்திற்காக, சீனா வர்த்தக அமைச்சர் / தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவைகள் (NPQS) மற்றும் பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியாளர்கள், பதனிடல்செய்வோர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஆகியோருடன் சந்திப்பு நடத்தப்பட்டது மற்றும் சீனத் தரப்பிலிருந்து தேவையான சில விளக்கங்கள் தூதரகத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக, பழங்கள் மற்றும் காய்கறிகள் சங்கத்துடன் கலந்தாலோசித்து, பழத்தோட்டங்கள் மற்றும் அன்னாசிப்பழத்திற்கான பொதியிடல் இல்லங்கள் பற்றிய தரவுத்தளத்தை தயாரித்தனர். NPQS இன் அதிகாரிகளுடன் இணைந்து 08 அன்னாசி தோட்டங்கள் மற்றும் நான்கு பொதியிடல் இல்லங்களுக்கான முன் ஆய்வு நிறைவு செய்யப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பழத்தோட்டங்கள் மற்றும் பொதி செய்யும் இல்லங்களுக்கான மின்னணு பொருட்கள் வீடியோ ஆய்வுக்காக சீன அதிகாரசபைக்கு (GACC) அனுப்பப்பட்டன.

## 3 திறன் கட்டியெழுப்புகை / ஏற்றுமதியாளர்களின் பயிற்சி

### 3.1 SME உணவு மூலப்பொருள் உற்பத்தியாளர்கள் / ஏற்றுமதியாளர்கள் இறக்குமதி ஊக்குவிப்பு மேசை (IPD) ஜேர்மனியுடன் தொடர்பு கொண்டு ஐரோப்பிய ஒன்றிய சந்தை நுழைவு வசதி

- Biofach 2023 இல் பங்கேற்க 4 நிறுவனங்களுக்கு வசதி செய்யப்பட்டது. 2 SME நிறுவனங்களுக்கு 60 வீத நிதி உதவி வழங்கப்பட்டது மற்றும் 4 நிறுவனங்களுக்கும் B2B சந்திப்புகள் நடத்தப்பட்டன.
- ஏற்றுமதி .அபிவிருத்தி சபையில் Biofach (08), SIAL கனடா (10), Thaifex (8) மற்றும் அனுகா(12) ஆகியவற்றில் பங்கேற்பவர்களுக்காக மூன்று (03) Pre fair செயலமர்வுகள் (PFW) நடத்தப்பட்டது.
- 30 பங்கேற்பாளர்களுக்கு கண்டியில் ஐரோப்பிய ஒன்றிய சந்தை நுழைவு குறித்த பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அடுத்த IPD மூலவளமிடல் பணிக்கு பரிந்துரைக்க 7 சாத்தியமான நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- ஜேர்மனியின் பெர்லினில் GIZ இன் உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்ட 'Flavour of Sri Lanka' நிகழ்வில் 8 SME நிறுவனங்கள் பங்கேற்றன.
- 2023 ஜூலை 11 முதல் 17 வரை மூலவளமிடல் பணி றுநடத்தப்பட்டதுடன் IPD நிகழ்ச்சித்திட்டத்திற்கு 6 புதிய நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.
- புதிய விண்ணப்பதாரர்களுக்காக IPD ஆல் மதிப்பீட்டுக் கூட்டங்கள் தொடங்கப்பட்டு 16 நிறைவடைந்தன.
- சர்வதேச வர்த்தக கண்காட்சிகளில் கவர்ச்சிகரமான நாட்டு கண்காட்சி கூடங்களை ஏற்பாடு செய்வது குறித்து 25 ஏற்றுமதி அபிவிருத்தி சபை அதிகாரிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

### 3.2 கூட்டாண்மை நிறுவன கடப்பாடுகள் தொடர்பான ஜேர்மனியின் புதிய சட்டம் குறித்த வெபினார் தொடர்கள்

- மார்ச்சு 21, 28 மற்றும் 30 ஆகிய திகதிகளில் ஏற்றுமதி அபிவிருத்தி சபை பயிற்சி பெற்ற அதிகாரிகளால் மூன்று மொழிகளில் வழங்குநர் சங்கிலியில் கூட்டாண்மை நிறுவன கடப்பாடுகள் தொடர்பான ஜேர்மனியின் புதிய சட்டம் குறித்த வெபினார் தொடர்கள் நடத்தப்பட்டது. மேலும், ஏற்றுமதி அபிவிருத்தி சபை . ஆனது 2023 ஏப்ரல் 25, ஆம் திகதியன்று Movenpick ஹோட்டலில் ஜேர்மனியின் .மற்றும் UNIDO உடன் இணைந்து ஜேர்மன் உரிய கடப்பாடுகள் சட்டம் குறித்த விழிப்புணர்வு அமர்வை ஏற்பாடு செய்தது.

### 3.3 ஏனைய வெபினார்கள் / கருத்தரங்குகள் / செயலமர்வுகள்

- இலங்கை ஆடைத் துறையின் தற்போதைய நிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் JAAF உடன் வெபினார் தொடரொன்றை ஏற்பாடு செய்ததோடு, அடையாளம் காணப்பட்ட சந்தைகள் (அவுஸ்திரேலியா,

கனடா, ஜப்பான், தென் கொரியா, ரஸ்யா மற்றும் மத்திய கிழக்கு) மூலம் பாரம்பரியமற்ற சந்தைகளில் இலங்கை ஆடைகளை மேம்படுத்துவதற்கு அவர்களின் ஆதரவைக் கோரியது.

- 69 ஏற்றுமதி நிறுவனங்களுக்காக 2023 ஆம் ஆண்டு மார்ச் 08 ஆம் திகதி ”விவசாய பொருட்கள் ஏற்றுமதியாளர்களுக்கான TIEP இன் கீழ் உள்ள வசதிகள்” குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது. ஐந்து நிறுவனங்கள் இலங்கை சுங்கத்தில் பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளன.
- வெளிநாடுகளில் இருந்து பங்கேற்பாளர்கள் உட்பட 40 பங்கேற்பாளர்களுக்கு இலங்கை மீன் வளர்ப்புத் துறையில் ஒரு வெபினார் நடத்தப்பட்டது.
- 38 இலங்கை கடல் உணவு மற்றும் மீன்வளர்ப்பு நிறுவனங்களுக்கு சீனாவிற்கு ஏற்றுமதி செய்யும் நடைமுறை குறித்த பயிற்சி அமர்வு நடத்தப்பட்டது.
- 105 பங்கேற்பாளர்களுக்கு ”கடற்பாசி பதனிடல் மற்றும் பெறுமதி சேர்ப்பு” குறித்த வெபினார் நடத்தப்பட்டது.
- 36 மாணவர்களின் பங்கேற்புடன் 163வது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடைமுறைகள் சான்றிதழ் பாடநெறி ஜூலை 08 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. பாடநெறி மூலம் கிடைத்த மொத்த வருமானம் ரூ. 1.1 மில்லியன் ஆகும்.
- சர்வதேச வர்த்தகத்தின் தொழிற்பாட்டு அம்சங்கள் குறித்த 94 வது பாடநெறி ஆகஸ்ட் 19 ஆம் தேதி 2023 40 மாணவர்களின் பங்கேற்புடன் தொடங்கப்பட்டது . பாடத்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட மொத்த வருமானம் ‘ரூ.1.3 மில்லியன் ஆகும்.
- பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் உள்ள இலங்கை தூதரகத்துடன் இணைந்து ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது, 2023 ஜூலை 20 ஆம் திகதி, ஐரோப்பிய ஆணைக்குழுவின் சர்வதேச சந்தையின் பொது பணிப்பாளர்கள் சபையின் ஆடைப் பிரிவின் உதவியுடன், நிலையான மற்றும் சுற்றறிக்கை ஆடை தொடர்பான ஐரோப்பிய ஒன்றிய மூலோபாயம் பற்றிய விளக்க அமர்வை ஏற்பாடு செய்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் 51 நிறுவனங்கள் பங்குபற்றியுள்ளன.

# 4 உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

## 4.1 இலங்கையில் நிலையான சேதன விவசாய முறைமையின் அபிவிருத்திக்கான வசதி

43 விவசாயிகள் / பதனிடுவோர் / உள்ளீடு தயாரிப்பாளர்கள் ஆகியோர் தேசிய சேதன தரத்தைப் பெறுவதற்கான திட்டத்தின் கீழ் உதவத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட 43 பயனாளிகளுக்கு சேதன முகாமைத் திட்டத்தில் மெய்நிகர் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது.

சர்வதேச சேதன தரநிலையை அறிமுகப்படுத்த 500 விவசாயிகள் உட்பட விவசாயிகள் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

கொழும்பில் தேசிய சேதன சான்றளிப்புச் சின்னத்தை அறிமுகம் செய்வதற்காக ஊடகவியலாளர் மாநாட்டை நடாத்தியதுடன், அதனைத் தொடர்ந்து 15 செய்திமடல்களை பிரசுரிக்கப்பட்டது.

GIZ இன் நிதியுதவி மற்றும் ITC இன் தொழில்நுட்ப உதவியுடன் பங்குதாரர் பதிவு அமைப்பு தானியங்கு தொடங்கப்பட்டது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக பங்குதாரர்களுக்கு எட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், www.nocu.lk என்ற இணையத்தளம் உருவாக்கப்பட்டு அதன் உத்தியோகபூர்வ வெளியீட்டு விழா 2023 செப்டம்பர் 22 ஆம் திகதியன்று இடம்பெற்றது. இந்த இணையத் தள விருத்தி இலங்கையில் உள்ள சேதன விவசாயத் துறையில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான திட்ட ஆதரவின் மூலம் செய்யப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் BMZ ஆகியவற்றால் கூட்டாக நிதியளிக்கப்பட்ட GIZ இலங்கையால் செயல்படுத்தப்பட்டது.

### 4.2 தேசிய பொதியிடல் நிலையத்தை (தே.பொ.நி) மீண்டும் செயல்படுத்துதல்

- இலங்கையில் உள்ளூர் உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவாக தேசிய பொதியிடல் நிலையம் **(தே.பொ.நி)** ஏற்றுமதி அபிவிருத்தி சபை வளாகத்தில் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளது. மேலும், உள்நாட்டு பொதியிடல் பொருட்களைப் பயன்படுத்தி உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட புதுமையான பொதியிடலை காட்சிப்படுத்த ஒரு பொதியிடல் வடிவமைப்பு காட்சி அலகு திறக்கப்பட்டுள்ளது. அங்குரார்ப்பண விழா 2023 ஆகஸ்ட் 15 அன்று ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் கௌரவ சனாதிபதியின், சிரேட்ட மேலதிக செயலாளர், கைத்தொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் தேசிய பொதியிடல் நிலையப் பணிப்பாளர் சபை அங்கத்தவாகள் ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.
- பொதியிடலின் வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த 10 நிபுணர்கள் அடையாளம் காணப்பட்டதோடு மற்றும் அவர்களின் சுயவிவரங்கள் சபை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.
- 2023 ஆம் ஆண்டு மார்ச் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் BMICH இல் நடைபெற்ற கைவினை சிலோன் கண்காட்சியில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைக்கான கைவினைப் பொதியிடல் குறித்து 150 நபர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- 2023 யூன் 08 ஆம் திகதியன்று வாசைனத்திரவிய துறைக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- 2023 யூன் 15 ஆம் திகதியன்று ஏற்றுமதி அபிவிருத்தி சபை திறந்த நாள் நிகழ்ச்சியில் பொதியிடல் குறித்த 08 விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தியது.
- ”கைத்தொழில் கண்காட்சி 2023” இல் பொதியிடல் குறித்த மெய்நிகர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- மாத்தறை மாவட்டத்தில் 43 சாத்தியமான ஏற்றுமதியாளர்கள் மற்றும் SME களுக்கு பொதியிடல் பற்றிய விழிப்புணர்வு அமர்வு நடத்தப்பட்டது.
- இலங்கை புகையிரத சேவையுடன் ஒருங்கிணைந்து போக்குவரத்தின் போது பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கான கலந்துரையாடல்களை ஆரம்பித்தது.

## 5 ஏற்றுமதிக்கான SME அபிவிருத்தியை எளிதாக்குதல்

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது புதிய ஏற்றுமதியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (NEDP) கீழ் தொடர்ச்சியான விழிப்புணர்வு செயலமர்வுகள், உற்பத்தியாளர் - ஏற்றுமதியாளர் இணைப்பு திட்டங்கள், தயாரிப்பு / விநியோக மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் ஏற்றுமதி சந்தையில் புதிய ஏற்றுமதியாளர்களை விருத்திசெய்தல் மற்றும் வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பிராந்தியங்களில் உள்ள தொழில்முனைவோருக்கான சந்தை வெளிப்பாடு திட்டங்களை நடத்தியது.

- 200 SME கள் அடையாளம் காணப்பட்டு தொடர்புடைய துறைகளின்படி வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2023 ஏப்ரல்-ஜூலை இல் 140 விவசாயம் சார்ந்த மற்றும் தொழில்துறை தயாரிப்பு சார்ந்த SME களுக்கான மதிப்பீட்டு நேர்காணல்கள் நடத்தப்பட்டன.
- 2023 ஏப்ரல் 27 மற்றும் 28 திகதிகளில் USAID, UNIDO & ITI உடன் இணைந்து 20 SME நிறுவனங்கள் பொதியிடல் மேம்பாடு குறித்து பயிற்சியை பெற்றன.
- 2023 மார்ச 28, ஏப்ரல் 4 மற்றும் ஏப்ரல் 27 ஆம் திகதிகளில் நடைபெற்ற "NQI சேவைகளுக்கான தேவையை உறுதி செய்யும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தரம்" - என்ற தலைப்பில் FAO உடன் இணைந்து UNIDO ஏற்பாடு செய்த செயலமர்வில் 43 பிராந்திய SME நிறுவனங்கள் (காலி, யாழ்ப்பாணம், கண்டி) பங்கேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
- ஜப்பானுக்கான ஏற்றுமதி கட்டளைகளை பூர்த்திசெய்ய சீஜென் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் உடன் வழங்கல் தளம் ஒன்றை உருவாக்க கோலபத் (பாக்கு இலை அடிப்படையிலான) அடிப்படையிலான தயாரிப்பைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வை நடத்தியது.
- 07 நிறுவனங்கள் மற்றும் இணைக்கப்பட்ட ஏற்றுமதியாளர்களின் பங்கேற்புடன் 2023 ஜூன் 2ஆம் திகதியன்று NWP/NCP இல் கைவினைப் பொருட்களுக்கான B2B கூட்டத்தை நடத்தியது.
- 2023 ஜூன் 15 ஆம் திகதி சாத்தியமான ஏற்றுமதியாளர்கள் / ஏற்றுமதிக்கு தயாராக உள்ள SME கள் / தொழில்முனைவோருக்கு ஒரு திறந்த நாள் பயிற்சி நிகழ்ச்சியில் நடத்தப்பட்டது இதில் சுமார் 900 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அடையாளம் காணப்பட்ட நபர்களைக் கொண்டு தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திறந்த நாள் திட்டத்தின் தொடர்ச்சியாக 13 SME நிறுவனங்கள் ஏற்றுமதியாளர்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.
- சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பிரிண்ட் கேயர் பிரைவேட் லிமிடெட் (ஸ்லிக்) உடன் இணைந்து 2023 மார்ச் 3, 15 மற்றும் 18 ஆம் திகதிகளில் பெண்கள் தலைமையிலான வியாபாரங்களுக்காக பின்வரும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தது.

- 54 பெண் தொழில்முனைவோருக்கு 2023 மார்ச் 3 ஆம் திகதியன்று பொதியிடல் மூலம் பிராண்டிங் மூலம் இரண்டு மணிநேர அறிவுப் பகிர்வு மெய்நிகர் செயலமர்வு நடத்தப்பட்டது.

- 14 பெண் தொழில்முனைவோருக்கு 2023 மார்ச் 15 ஆம் திகதியன்று நீதிபதிகள் குழுவிற்கு "பொதியிடல் மூலம் உங்கள் தயாரிப்புகளை பிரபலப்படுத்துவதற்கான அவர்களின் திட்டம்" பற்றிய விளக்கங்களை வழங்கினர்.

- ஏற்றுமதி அபிவிருத்தி சபை விருது வழங்கும் விழா மற்றும் மினி கண்காட்சி 2023 மார்ச் 18 ஆம் திகதியன்று நடைபெற்றது ஸ்லிக்கால் 6 வெற்றியாளர்களுக்குச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கு கிடைக்கக்கூடிய அச்சிடும் மற்றும் பொதியிடல் தீர்வுகள் பற்றிய முதல் அனுபவத்தை பெறுவதற்காக, களனியில் உள்ள Print care (Pvt) Ltd (Slick) க்கு 14 பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு ஒரு கள விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது. அனைத்து நிறுவனங்களும் வரியில்லா இறக்குமதி வசதி மூலம் தேவையான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ள சுங்கத்துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 6. சனாதிபதி ஏற்றுமதி விருதுகள்

அதிக எண்ணிக்கையான ஏற்றுமதியாளர்களின் பங்கேற்புடன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கௌரவ சனாதிபதியின் அனுசரணையில் 2023 நவம்பர் 23 ஆம் திகதியன்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஏற்பாடுசெய்யப்பட்ட 25 வது சனாதிபதி ஏற்றுமதி விருதுகள் வெற்றிகரமாக இடம்பெற்றது. விருது பெற்றவர்களுக்கு றுமதிமிக்க ச.ஏ.வி. கிண்ணமம் சான்றிதழும் வழங்கப்பட்டதோடு “விருது இலாஞ்சனையை” மூன்றுவருட காலத்திற்கு சந்தைப்படுத்தல் சாதனமொன்றாக பயன்படுத்தவும் அவர்களுக்கு சிறப்பு அனுமதி கிடைத்தது.

இந்த வருட விருது வழங்கல் வைபவமானது 2021/2022 மற்றும் 2022/2023 ஆகிய இரண்டு நிதிசார் வருடங்களுக்குமான நாட்டின் சிறந்த ஏற்றுமதியாளர்களாளக அங்கீகரிப்பதை நோக்கமாக கொண்டிருந்தது. விருதுகள் இரண்டு பிரதான வழங்கப்பட்டதோடு 13 முழுதுமளாவிய விருதுகளும் ஒவ்வொரு வருடத்திற்குமான 51 உற்பத்தி / சேவைகள் துறை விருதுகளும் வழங்கப்பட்டன. மேலும், தகைமையுள்ள துறைகளுக்கான திறமை விருதுகளும் விண்ணப்பதாரிகளின் செயலாற்றுகையின் அடிப்படையில் நடுவர்களினால் தீர்மானிக்கப்பட்டவாறு வழங்கப்பட்டன. விருது வழங்குவதற்கான தெரிவு உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவரின் தலைமையிலான சிறப்பு நிதிபதிகள் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டது.

புதிய அரசாங்க கொள்கை சட்டகத்திற்கு அமைவாக இலங்கையின் ஏற்றுமதிகளை விரிவாக்குவதற்காக புதிய உபாயமுறைகளை ஏற்றுமதி அபிவிருத்தி சபை அமுல்படுத்தியது. அதன்பிரகாரம், சந்தை பல்வகைமை, உற்பத்தி பல்வகைமை, புத்தாக்கம், பெறுமதி சேர்ப்பு, உலகத்திற்கு சுதேச தரப்பெயர்களை அறிமுகப்படுத்தல், ஏற்றுமதியில் நிலையான முன்னெடுப்புகள் பிராந்திய பெறுமதிச் சங்கிலியில் விருத்தி என்பன மேற்கொள்ளப்பட்டன.

## 7 ஏற்றுமதி தொடர்பான வெளியீடுகள்

- பிசினஸ் லங்கா சஞ்சிகை ”இலங்கையின் நீலப் பொருளாதாரத்தை சுற்றி பயணித்தல்” என்ற தொனிப்பொருளில் தொகுக்கப்படுகிறது.
- ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் “ஏற்றுமதி செயலாற்றுகை குறிகாட்டிகள் 2022” ஒரு புள்ளிவிவர வெளியீடு ஏற்றுமதி அபிவிருத்தி சபை இணையதளத்தில் இணையவழி கொள்வனவிற்கான அணுகலுடன் வெளியிடப்பட்டது.

## 8. ஏற்றுமதியாளர்கள் மன்றம்

வர்த்தக துறையில் நிலவுகின்ற தொழிற்பாட்டு மற்றும் கொள்கை விடயங்கள் தொடர்பான வியாபார சமூகம் மற்றும் ஏற்றுமதியாளர்கள் எதிர்கொள்ளும் குறிப்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பொதுவான தளமொன்றை வழங்குவதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஏற்றுமதியாளர்கள் மன்றமொன்றை ஏற்பாடுசெய்தது. 2023 நவம்பர் 2 ஆம் திகதியன்று முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகம தலைமையில் 23 வது ஏற்றுமதியாளர்கள் மன்றம் இடம்பெற்றது. அமர்வின்போது எட்டு தொடர்புடைய விடயங்கள் கலந்துரையாடப்பட்டதோடு அதைத் தொடர்ந்த நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

மேலும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை நிரல் முகவராண்மைகளுடன் இணைந்து எற்றுமதியாளர்கள் எதிர்கொள்கின்ற அரசிறை விடயங்களின் தீர்வுக்கு வசதியளித்து உலக

சந்தையில் போட்டித்தன்மையுடன் தொடர்ந்திருப்பதற்கு வலுவூட்டுகின்ற சுமுகமான சூழலொன்றை உருவாக்குவதே பிரதான நோக்கமாகும்.

**9. மின் சந்தைதளம் - இலங்கை தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் இணையவழி விளம்பரம்**

சந்தை அனுகலை அதிகரித்தல், பீ 2 பீ மற்றும் பீ 2 சீ கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் SME கள் மற்றும் தொழில்முனைவோர் மின் வர்த்தகத்தில் நுழைவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நோக்கத்துடன், ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது அதன் இணையதளமான www.srilankabusiness.com ஐ இலங்கை தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிக்கான தேசிய நுழைவாயிலாக மேம்படுத்தியுள்ளது.

**ஏற்றுமதி அபிவிருத்தி சபை சேவைகளை வழங்குவதில் செயல்திறனை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட பிற தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைகள்.**

- 2023 இல் PEA நுழைவாயலை விருத்திசெய்தமை. 2023 இன் PEA தயாரிப்புத் துறை மதிப்பீட்டிற்காக தயாரிக்கப்பட்ட அறிக்கை, PEA பயன்பாடுகளின் தரவை நிர்வகிப்பதற்கான SQL தரவுத்தளத்தை விருத்திசெய்தமை.
- நிகழ்வுகளுக்கான பதிவுக்கான இரண்டு இணையவழி பிரயோகங்கள், ஏற்றுமதி அபிவிருத்தி சபை திறந்த நாளுக்கான இணையவழி பதிவு நுழைவாயல், ஏற்றுமதி அபிவிருத்தி சபை . CRM இல் வாடிக்கையாளர் கண்காணிப்பு தொகுதிகளை இற்றைப்படுத்தியமை
- இணையவழி ஏற்றுமதியாளர் சுயவிபர இற்றைப்படுத்தல் செயலி
- பணியாளர் பயிற்சி முகாமைத்துவ முறைமையின் புதுப்பித்தல்
- ஏற்றுமதி அபிவிருத்தி சபை . கையடக்க தொலைபேசி செயலி தயாரிக்கப்பட்டமை
- நிதிப் பிரிவுக்கான கடன் அறிக்கை தயாரிக்கப்பட்டமை
- பணியாளர்கள் பயிற்சி விவரங்கள் அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளமை
- புதுப்பிக்கப்பட்ட பணியாளர் முகாமைத்துவ முறைமை
- ஏற்றுமதி அபிவிருத்தி சபை . ஊழியர்களின் ஊதியச் சீட்டு பரிவர்த்தனை முறைமை மறுசீரமைப்பு
- ஏற்றுமதி அபிவிருத்தி சபை . பார்வையாளர் கண்காணிப்பு முறைமை புதுப்பிப்பு
- ஏற்றுமதி அபிவிருத்தி சபை . ஸ்லிப் கொடுக்கல்வாங்கல் தரவுத்தளத்தைப் புதுப்பிப்பு
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள் பற்றிய இரண்டு சான்றிதழ் பாடநெறிகள் (தொகுதி 162 மற்றும் 163) மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் தொழிற்பாட்டு அம்சங்கள் (தொகுதி 94) பற்றிய ஒரு பாடநெறி என்பன கற்றல் முகாமைத்துவ முறைமையின் உதவியுடன் இணையவழியாக நடத்தப்பட்டன

**கொள்கை மற்றும் மூலோபாய திட்டமிடல் பிரிவு**

## 10. குறுங்கால மற்றும் நடுத்தரகாலத்தில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளின் சுருக்கம் (2022 -2023)

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது ஏற்றுமதி வருமானங்களை அதிகரிப்பதையும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு இலங்கையின் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கும் வளர்ப்பதற்கும் விருத்திசெய்வதற்குமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றது. சட்டத்தினால் ஆணை வழங்கப்பட்ட அதி உயர் வர்த்தக ஊக்குவிப்பு அமைப்பு என்றவகையில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது அனைத்து சர்வதேச வர்த்தகம் தொடர்பான விடயங்களில் மத்திய நிலையமாக செயற்படுகின்றது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது கொள்கை ஆலோசகராக, கண்ணகாணிப்பாளராக, வசதியளிப்பாளராக, அறிவு வழங்குறராக அதன் வகிபாகத்தை ஆற்றுவதோடு, தொடராக ஒரு ஏற்றுமதி சாதகமிக்க சூழலை உருவாக்குவதில் வசதியளித்துவருவதோடு, எற்றுமதி நட்பு சூழலை ஏற்படுத்தி தேசிய ஏற்றுமதி இலக்குகளை அடைவதற்காக புத்தாக்க உபாயமுறைகளை நடைமுறைப்படுத்துகின்றது.

1. **இலங்கை உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான உலக சந்தை அனுகலை விரிவாக்குதல்**

- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு விசேட கவனம் செலுத்தி இலக்குப்படுத்தப்பட்ட சர்வதேச வர்த்தக நிகழ்வுகளில் இலங்கையின் பங்கேற்பை ஏற்பாடுசெய்தல்
- தெரிவுசெய்யப்பட்ட சந்தைகளில் உள்ளகமற்றும் வெளியக தூதுக்குழுக்களுக்கு வசதியளித்தல்
- சந்தை புலனாய்வக்கு வசதியளித்தல்
- ஏற்றுமதியாளர்களை கொள்வனவாளர்களுடன் தொடாபுபடுத்துவதற்காக வெளிநாட்டு அமைச்சு மற்றும் இலங்கை தூதரகங்களுடன் இணைப்பை ஏற்படுத்தல்
- அடையாளங்காணப்பட்ட துறைகளுக்கான பீ 2 பீ வெபினார்கள் மற்றும் இணையவழி சந்திப்புக்களை நடாத்துதல்
- இருதரப்பு கூட்டுறவு தொடர்பான இலங்கிலுள்ள தூதரகங்களின் பிரதானிகள் மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரக பிரதானிகளுடன் கலந்துரையாடலை தொடருதல்
- தற்போதுள்ள FTAs, JECs, TIFAs/ GSP, MOUs, முதலியவற்றுடன் தொடர்பான பணிகள்

2. **இலங்கையை பிரபல்யப்படுத்தலும் இலங்கை உற்பத்திகளை சர்வதேச ரீதியாக நிலைப்படுத்தலும்**

- ‘‘தூய இலங்கை கறுவா’’ வை செயற்கை கறுவாவிலிருந்து வேறுபடுத்துவதற்கான வர்த்தக குறியீடு மேம்பாடு
- ‘‘இலங்கை வாசனைத்திரவியம்’’ தரப்பெயர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்
- பாதுகாக்கப்பட்ட புவிசார் சுட்டியொன்றாக இலங்கை கறுவாவை ஊக்குவித்தல்
- தேசிய ஏற்றுமதி தரப்பெயர் ஊக்குவிப்பு திட்டம் 2024 - 2027 ஐ நடைமுறைப்படுத்தல்

3. **வர்த்தக தகவல்களும் சந்தை நுண்ணறிவும்**

- வர்த்தக தகவல், சந்தை நுண்ணறிவு, மின்னியல் வர்த்தக சேவைகள் மற்றும் ஏற்றுமதி தொடர்பான வெளியீடுகளின் பரப்புகை.
- பிசினஸ் லங்கா சஞ்சிகை மற்றும் இலங்கை ஏற்றுமதியாளர்கள் பெயர்பட்டியலின் வெளியீடு.
- தேசிய பொதியிடல் நிலையத்தின் தாபிதமும் தொழிற்பாடும்

**4. இணையவழி இருப்பை மேம்படுத்துவதற்கான வியாபாரத்திற்கு ஆதரவளித்தல்**

- ஏற்றுமதி அபிவிருத்தி சபை இணையத்தளத்தின் மூலம் இலங்கை தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் இணையவழி விளம்பரம்.
- உலகளாவிய வர்த்தக செயற்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான சந்தை எச்சரிக்கைகளை வழங்குதல்.

**5. ஏற்றுமதியாளர் வசதியளிப்பு**

- ஏற்றுமதியாளர்களுக்கு உதவ பிரத்தியேக "உதவிக் கருமபீடத்தை" செயல்படுதல்.
- ஏற்றுமதியாளர்கள் மன்றம் மூலம் ஏற்றுமதியாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு.
- ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் மூலம் ஏற்றுமதியாளர்களுக்கான அங்கீகாரம்.
- நிறுவப்பட்ட ஆலோசனைக் குழுக்களின் கண்காணிப்பு (24)
- இறக்குமதி / ஏற்றுமதி நடைமுறைகள், சர்வதேச வர்த்தகத்தின் செயல்பாட்டு அம்சங்கள் மற்றும் ஏற்றுமதி பொதியிடல் பற்றிய பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.
- ஏற்றுமதி தொடர்பான விடயங்கள் மற்றும் தொழில்முனைவு பற்றிய விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்களை நடத்துதல்.

**6. தர மேம்பாடு.**

- பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்பு ஏற்றுமதிக்கான நிலையான அமைப்புகளை உருவாக்க, சாத்தியமான தொழில்முனைவோர்.'.ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை எளிதாக்குதல்.
- நம்பகத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் இலங்கையில் சேதன வேளாண்மை பெறுமதிச் சங்கிலியின் உருவத்தைப் பாதுகாத்தல்.
- தேசிய சேதன் கட்டுப்பாட்டு அலகு (தே.சே. க.அ) செயல்பாட்டை எளிதாக்குதல்.
- தேசிய பொதியிடல் நிலையம்

**7. ஏற்றுமதி பெறுமதி சங்கிலிக்கான பிராந்திய பங்களிபபை அதிகரித்தல்**

- பிராந்தியங்களில் உள்ள சாத்தியமான ஏற்றுமதியாளர்கள்.'.தொழில்முனைவோரை அடையாளம் காணுதல்.
- அவர்களை ஏற்றுமதியாளர்களாக வளரப்பதற்கான திறன் கட்டியெழுப்புகை.
- உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சர்வதேச தர தரநிலைகள் மற்றும் பிற நாடு.'.சந்தை தேவைப்பாடுகளுக்கு இணங்குதல்.
- ஏற்றுமதி சந்தையில் பிராந்திய ஏற்றுமதியாளர்களின் அறிமுகம்.
- புதிய ஏற்றுமதியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பெண்கள் ஏற்றுமதியாளர் அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்துதல்.

**8. ஒரு கிராமம் ஒரு தயாரிப்பு (ஒ.கி.ஒ.த) நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஏற்றுமதி வழங்கல் அடிப்படை அபிவிருத்தி**.

- உற்பத்தி அடையாளம் மற்றும் தெரிவு.
- அடையாளம் காணப்பட்ட தயாரிப்புகளுக்கு பொருத்தமான புவியியல் இருப்பிடங்களை அடையாளம் காணுதல்
- கொத்தணி மற்றும் இணைப்பு ஏற்றுமதியாளர்களின் உருவாக்கம்.
- அவர்களை ஏற்றுமதியாளர்களாக வளர்க்கும் திறனை வளர்ப்பது.

- தயாரிப்பு மேம்பாடு மற்றும் சர்வதேச தர தரநிலைகள் மற்றும் பிற நாடு.்.சந்தை தேவைகளுக்கு இணங்குதல்.

✓ **தேசிய வரவுசெலவுத் திட்டம் 2023**

- திரிலோக விஜயபத்ராவை முற்றிலும் ஏற்றுமதி நோக்கத்திற்காக தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுங்கள்.
- தற்போதைய தேசிய ஏற்றுமதி உத்தியை (தே.ஏ.உ) 2023-2024 மதிப்பாய்வு செய்து திருத்தவும்.

**கொள்கை மற்றும் மூலோபாய திட்டமிடல் பிரிவு**

## 11. 2024 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் எதிர்காலத் திட்டங்கள்

வணிகப் பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதித் துறைகளுக்கான 2024 ஆம் ஆண்டில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் நிர்ணயித்த ஏற்றுமதி இலக்கு அ.டொ 16.4 பில்லியன் ஆகும் என்பதோடு அதில் வணிகப் பொருட்கள் ஏற்றுமதியிலிருந்து நாம் அ.டொ. 12.8 பில்லியளையும் சேவைகள் ஏற்றுமதியிலிருந்து 3.6 பில்லியனையும் எதிர்பார்க்கிறோம்.

மேற்கூறிய இலக்கை அடைவதற்காக, தற்போதைய உலகளாவிய போக்கைக் கருத்தில் கொண்டு ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் உள்ளக ரீதியாக புதிய கூட்டாண்மை திட்டத்தில் உள்ள பின்வரும் மூலோபாய நோக்கங்களுடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் நடவடிக்கைகள் சீரமைக்கப்படுகின்றன.

- இலங்கை ஏற்றுமதி உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான ஒரு சிறந்த புகழுருவை உருவாக்குதல்.
- அதிக பெறுமதி சேர்ப்பு மற்றும் தரப்பெயருடன் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி பெறுமதியை அதிகரித்தல்.
- தற்போதுள்ள பிரீமியம் சந்தைகளை உறுதிப்படுத்தும் அதேவேளை வருங்கால முக்கிய சந்தைகளுக்கு ஏற்றுமதியை அதிகரித்தல்.
- சிறந்த சந்தை அனுகலுடன் பிராந்திய பெறுமதிச் சங்கிலி வலைப்பின்னலுடன் ஒருங்கிணைத்தல்.
- ஏற்றுமதித் துறைக்கான பெறுமதிச் சங்கிலி செயற்பாட்டாளார்களின் பங்களிப்பை மேம்படுத்துதல்.
- பரந்த அடிப்படையிலான ஏற்றுமதி தொகுதி மற்றும் நாட்டின் ஏற்றுமதியாளர் சமூகம்.
- திறமையான, வெளிப்படையான மற்றும் செலவு குறைந்த எல்லைக்குட்பட்ட வர்த்தகத்தை உறுதி செய்வதற்கான வர்த்தக வசதி.
- சர்வதேச ஒழுங்குவிதிகள் மற்றும் தராதரங்களுக்கு இணங்க ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கவும் மற்றும் சூழல், சமூக மற்றும் ஆளுகைக் கொள்கைகளின் (ESG) கூட்டுப் பலன்களை அடையவும்.
- பணியாளர்களின் உற்பத்தித்திறன் மற்றும் அர்ப்பணிப்புக்கு குறிப்பிட்ட முக்கியத்துவத்துடன், முக்கிய பெறுமதிகளின் அடிப்படையில், ஏ.அ.ச.இல் சிறப்பான குழுவை உருவாக்குதல்.

மேற்கூறியவற்றைத் தவிர, ஏற்றுமதிக்கு ஏற்ற சூழலை உருவாக்குவது அக்கறைமிக்க ஒரு முக்கிய பகுதியாகும்.

- 12 -

# நிதி அறிக்கை
# 2023

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**விரிவான வருமானக் கூற்று**
**2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்பு | இ.நி.அ.த 31.12.2023 ரூ. | இ.நி.அ.த 31.12.2022 ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருமானம் | (3) | 628,648,002 | 478,466,579 |
| ஏனைய வருமானம் | (4) | 85,718,546 | 101,573,893 |
| மொத்த வருமானம் | | 714,366,548 | 580,040,472 |
| செலவினம் | | | |
| ஏற்றுமதி அபிவிருத்திச் செலவுகள் | (5) | 317,891,972 | 145,840,677 |
| நிர்வாக செலவுகள் | (6) | 400,232,173 | 356,889,269 |
| 'முதலீடுகள் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளுக்கான குறைபாடுகளுக்கான ஏற்பாடுகள் | (7) | 2,550,431 | (137,446,488) |
| தோழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான செலவினம் மீதான வருமானம் | | (6,308,028) | 214,757,014 |
| நிதி செலவு | (8) | 115,321 | 133,224 |
| செலவுக்கு மேல் வருமானம் அதிகம் | | | |
| சாதாரண நடவடிக்கைகளில் இருந்து | | (6,423,349) | 214,623,790 |
| இணை நிறுவனத்தின் பங்கு இலாபம்.׃. (இழப்பு) | | 90,189,877 | 4,233,297 |
| | | 83,766,528 | 218,857,087 |
| ஏனைய விரிவான வருமானம் | | | |
| - சொத்து, பொறித்தொகுதி மீள்மதிப்பீடு மீதான பெறுகை | | - | 85,996,927 |
| நிதி சொத்துக்கள் | | | |
| உண்மையான மதிப்பீடு பெறுகை.׃இழப்பு | | (6,108,802) | 9,475,227 |
| ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானம | | (6,108,802) | 95,472,154 |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | | **77,657,726** | **314,329,241** |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**நிதி நிலைமை கூற்று**
**2023 டிசம்பர் 31, இல் உள்ளவாறு**

| | குறிப்பு | இ.நி.அ.த 31.12.2023 ரூ | இ.நி.அ.த 31.12.2022 ரூ |
|---|---|---|---|
| ஆதனங்கள் | | | |
| நடைமுறை அல்லாத ஆதனங்கள் | | | |
| சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள், நிகர | (9) | 87,928,377 | 101,407,909 |
| அசையா சொத்துக்கள் (நிகரம்) | (10) | 3,853,702 | 145,298 |
| இணைநிறுவனங்களில் முதலீடுகள் - மேற்கோள | (11) | 1,341,453,480 | |
| | | 1,433,235,559 | 1,352,816,810 |
| ஏனைய நடைமுறை அல்லாத ஆதனங்கள் | (12) | 201,322,635 | 202,472,821 |
| மொத்த நடைமுறை அல்லாத ஆதனங்கள | | 1,634,558,194 | 1,555,289,631 |
| **நடப்பு சொத்துக்கள்** | | | |
| பொருட்பட்டியல்கள் | (13) | 3,508,758 | 3,225,364 |
| வர்த்தகம் மற்றும் ஏயை பெறுகைகள் | (14) | 9,675,963 | 12,397,592 |
| முற்பணம் மற்றும் முன்கொடுப்பனவுகள் | (15) | 78,489,048 | 38,116,012 |
| காசு மற்றும் காசு சமனிகள் | (16) | 183,450,373 | 121,808,990 |
| | | 275,124,142 | 175,547,958 |
| **மொத்த ஆதனங்கள்** | | **1,909,682,336** | **1,730,837,589** |
| **ஒப்புரவு மற்றும் பொறுப்புகள்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்குகள்** | | | |
| பெறப்பட்ட மானியங்கள் - ஒப்புரவு பங்களிப்பு | (17) | 10,014,284 | 10,014,284 |
| செலவுக்கு மேல் திரட்டப்பட்ட வருமானம் | | 1,632,017,200 | 1,554,359,474 |
| **மொத்த ஒப்புரவு** | | 1,642,031,484 | 1,564,373,758 |
| **மானியங்கள்** | | | |
| பெறப்பட்ட மானியங்கள் - ஏனையவை | (18) | 22,264,655 | 14,933,725 |
| | | 22,264,655 | 14,933,725 |
| **நடப்பு அல்லாத பொறுப்புகள்** | | | |
| ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பொறுப்புகள் | (19) | 175,431,634 | 58,373,071 |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | (20) | 33,998,835 | 27,771,814 |
| | | 209,430,469 | 86,144,885 |
| **நடப்பு பொறுப்புகள்** | | | |
| ஏனைய செலுத்த வேண்டியவை | (21) | 35,955,728 | 65,385,221 |
| | | 35,955,728 | 65,385,221 |
| **மொத்த ஒப்புரவு மற்றும் பொறுப்புகள்** | | **1,909,682,336** | **1,730,837,589** |

பக்கம் 11 முதல் 23 வரையிலான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் பக்கங்கள் 24 முதல் 40 வரை உள்ள குறிப்புகள் இலங்கை கணக்கீட்டு தரநிலைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவதற்கு முகாமைத்துவமும் பணிப்பாளர் சபையும் பொறுப்பாக உள்ளன.. நிதிசார் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிட்டுள்ளது,

| | | | |
|---|---|---|---|
| கலாநிதி கிங்ஸ்லி பெர்னார்ட். | திரு.கே.ஏ.விமலேந்திரராஜா | திருமதி ரேனுகா எம் வீரகோன் | திரு கே.டி. பெரேரா |
| **தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர்** | **சபை உறுப்பினர்** | **சபை உறுப்பினர்** | **பணிப்பாளர் - நிதி** |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**ஒப்புரவு மாற்ற கூற்று**
**2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | ஒப்புரவு பங்களிப்பு | திரண்ட இலாபம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை** | 10,014,284 | 1,241,833,712 | - | 1,251,847,996 |
| வருமானம் மீதான மேலதிக செலவு | - | 228,332,313 | 85,996,927 | 314,329,240 |
| முன்னைய அண்டு சீராக்கல்கள் | - | (1,803,478) | | (1,803,478) |
| **2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை** | **10,014,284** | **1,468,362,547** | **85,996,927** | **1,564,373,758** |
| வருமானம் மீதான மேலதிக செலவு | - | 77,657,726 | - | 77,657,726 |
| முன்னைய ஆண்டு | - | - | | - |
| **2023 டிசம்பர் 31 உள்ளவாறான நிலுவை** | **10,014,284** | **1,546,020,273** | **85,996,927** | **1,642,031,484** |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**காசுப் பாய்ச்சல் கூற்று**
**2023 டிசம்பர் 31.இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்புகள் | 2023 ரூ | 2022 ரூ |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பய்ச்சல்** | | | |
| வரி விதிப்புக்கு முன்னரான ஆண்டிற்கான மிகை | | 77,657,726 | 314,329,241 |
| ***சீராக்கல்கள்*** | | | |
| நிலையான சொத்துகளின் தேய்மானம் | | 21,732,900 | 10,586,350 |
| கற்புலனாகாத சொத்துக் கழிப்பனவு | | 475,357 | 67,500 |
| முதலீடுகளிலிருந்து வருமானம் (பங்கிலாபம், வட்டி, இலாபப் பங்கு) | | (160,734,162) | (102,639,316) |
| மோட்டார் வாகனங்கள் மீதான மீள்மதிப்பீட்டு பெறுகை | | - | (85,996,927) |
| உண்மை மதிப்பீடு பெறுகை.'.இழப்பு | | 6,108,802 | (9,475,227) |
| முன்னைய ஆண்டு சீராக்கம் | | - | (1,803,478) |
| அரசாங்க கொடைகளின் கழிப்பனவு | | (6,371,198) | (6,113,619) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 7,029,764 | (24,525,105) |
| பணியாளர் கடன் தள்ளுபடி | | 4,427,352 | 3,519,821 |
| ஆர்வத்தைத் தணித்தல் | | (8,167,658) | 3,656,960 |
| சில்லரை சொத்துக்களின் கொள்வனவு | | - | 81,121 |
| நிலையான சொத்துக்களின் விற்பனை | | - | (415,449) |
| மதிப்பில் குறைபாட்டிற்கான ஏற்பாடு | | 2,550,431 | (137,446,488) |
| **செயல்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்.'.(இழப்பு).** | | **(55,290,686)** | **(36,174,616)** |
| பொருட்பட்டியல்களில் (அதிகரிப்பு).'.குறைவு | | (283,394) | (567,308) |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறுகைகளில் (அதிகரிப்பு).'. குறைவு | | 1,110,603 | 3,931,801 |
| முற்பணம் மற்றும் முன்கொடுப்பனவுகள் (அதிகரிப்பு).'. குறைப்பு | | (40,373,036) | (15,112,268) |
| ஏற்பாடு மற்றும் ஏனைய பொறுப்புகளில் அதிகரிப்பு.'.(குறைவு). | | 117,058,563 | 21,322,875 |
| ஏனைய செலுத்த வேண்டியவற்றில் அதிகரிப்பு.'.(குறைவு). | | (29,429,493) | (10,542,428) |
| **தொழில்பாடுகளில் இருந்து உருவாக்கப்பட்ட காசு** | | **(7,207,443)** | **(37,141,944)** |
| செலுத்தப்பட்ட நிதி செலவுகள் | | | - |
| செலுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட நலன் திட்ட செலவுகள் | | (6,911,545) | (6,452,434) |
| **தொழில்பாட்டு நடவடிக்கைளிலிருந்து நிகர காசு** | | **(14,118,988)** | **(43,594,378)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| ஏற்றுமதியாளரின் கடன் மீட்பு | | 146,492 | 626,500 |
| கடன் மீட்பு | | 3,804,595 | 1,190,418 |
| நிலையான சொத்துக்களின் விற்பனை | 3 | - | 415,449 |
| சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை கையகப்படுத்துதல் | 9 | (8,253,368) | (2,150,900) |
| கணினி மென்பொருளை கையகப்படுத்துதல் | 9 | (4,183,761) | |
| பெறப்பட்ட பங்கிலாபம் | 4 | 58,193,884 | 90,668,264 |
| பெறப்பட்ட வட்டி | 4 | 12,350,401 | 7,737,755 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் நிகர பணம்** | | **62,058,243** | **98,487,486** |
| **நிதியிடல் செயல்பாடுகளிலிருந்து.'.(பயன்படுத்தப்படும்) நிகர காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| அரசாங்க மானியம்.'. பெறப்பட்டது GIZ நிதி | | 13,702,128 | 2,150,900 |
| நிதயிடலி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் நிகர பணம் | | **13,702,128** | **2,150,900** |
| **காசு மற்றும் காசு சமனிகளில நிகர அதிகரிப்பு.'.(குறைவு)** | | **61,641,383** | **57,044,007** |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசு சமனிகளும | | **121,808,990** | **64,764,983** |
| ஆண்டின் இறுதியில் ெ காசு மற்றும் காசு சமனிகளும | | **183,450,373** | **121,808,990** |
| ***காசு மற்றும் காசு சமனிகளின் பகுப்பாய்வு*** | | | |
| கையில் உள்ள காசு | 16 | 1,864 | 1,000 |
| வங்கியில் உள்ள பணம் - சாதகமானது | 16 | 183,448,509 | 121,807,990 |
| | | **183,450,373** | **121,808,990** |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**
**பொதுத் தகவல்களும் கணக்கீட்டுக் கொள்கைகளும்**
**2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கானது**

## நிதிசார் அறிக்கையிடல் அதிகாரத்தின் முகாமைத்துவ பொறுப்புடமைக் கூற்று

1979 ஆம் அண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் (பகிரங்க கூட்டுத்தாபனங்களின் (நிதிசார் கட்டுப்பாடு) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரயோகம்) முகாமைத்துவ சபையானது பின்வருவன தொடர்பில் பொறுப்பைக் கொண்டுள்ளது:-

I. வருமானம் மற்றும் செலவினங்கள் கணக்குகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அதிகாரசபையின் ஏனைய அனைத்து நிதிசார்கொடுக்கல்வாங்கள் தொடர்பான உரிய புத்தகங்களை பேணுதல்.

II. சபையின் உண்மையான மற்றும் நியாயமான நிதிசார் செயலாற்றுகை மற்றும் நிதி நிலைமைகளை முன்வைக்கும் நோக்கதிற்காக 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தராதரங்களின் கீழான இலங்கை பட்டய கணக்காளார்கள் நிறுவகத்தினால் பின்பற்றப்பட்ட இலங்கை கணக்கிட்டு தராதரங்களுடன் இயைந்ததாக கணக்குகளை தயாரித்தல்.

III. சபையின் ஆதனங்களை பாதுகாக்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தலும் மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளை தடுத்து, அவற்றை கண்டறிவதற்கான பொருத்தமான உள்ளக கட்டுப்பாடுகளை தாபித்தல்.

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**
**பொதுத் தகவல்களும் கணக்கீட்டுக் கொள்கைகளும்**
**2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கானது**

# 1. பொதுத் தகவல்கள்

## 1.1 முகவரியும் சட்ட அமைப்பும்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது 1979 ஆம் ஆண்டின் 40 இலக்க சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையில் அதன் முகவரியை கொண்டுள்ளது. சபையின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமானது கொழும்பு 02, நவம் மாவத்தையில் 42 ஆம் இலக்கத்தில அமைந்துள்ளது.

## 1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது பிரதானமான இலங்கையின் ஏற்றுமதிகளை விருத்திசெய்வதற்கும் மேம்படுத்துவதற்குமாக ஈடுபட்டு வருவதோடு அதெனோடு தொடர்பான விடயங்களைஏற்பாடுசெய்வதற்கும் அல்லது அதற்கு இடைநோ ்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்கும் ஈடுபட்டு வருகின்றது.

## 1.3 வழங்குவதற்கான அதிகாரமளிப்பு திகதி

2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் நிதிசார் கூற்றானது 2024 ஏப்ரல் 18 ஆம் திகதியன்று பணிப்பாளர் சபையினால் அங்கிகரிக்கப்பட்டிருக்கின்றது.

## 1.4 இணக்கக் கூற்று

2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான சபையின் நிதிசார் கூற்று நிலைமை, விரிவான வருமானம், ஒப்புரவில் மாற்றங்கள், காசுப்பாய்ச்சல் மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகளுக்களின் சுருக்கம் (நிதிசார் கூற்றுக்கள்) என்பனவற்றுடன் இணைந்த குறிப்புக்கள் என்பன இலங்கை கணக்கிட்டு தராதர சபையினால் வழங்கப்பட்ட சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் (ச.நி.அ) தராதரங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இலங்கை பட்டய கணக்காளார்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கிட்டு தராதரங்களுடன் (இ.நி.அ.த மற்றும் இ.க.த) இயைந்ததாக தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

## 1.5 நிதிசார் கூற்றுக்களுக்கான பொறுப்புடமை

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் முகாமைத்துவமானது நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்வைப்புக்குமான பொறுப்பைக் கொண்டுள்ளது.

## 1.6 அளவீட்டின் அடிப்படை

நிதிசார் கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்களின் கீழ் நியாயமான பெறுமதி தொடர்பில் செய்யப்பட்ட பொருத்தமான வெளிப்படுத்தல்கள் தவிர வரலாற்று செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன இயற்கை தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டிருப்பதோடு அவற்றின் ஒப்பீட்டு திரவத்தன்மையை பிரதிபலிக்கின்றவாறு வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

## 1.7 தொடந்துசெல்லல் அக்கறை

நிதிசார் கூற்றுக்களை தயாரிக்கின்றபோது முகாமைத்துவமானது சபையின் ஆற்றிலை தொடந்துசெல்லல் ஆக்கறையின் தொடர்திருத்தல் அடிப்படையில் மதிப்பிட்டிருக்கின்றது. முன்னோக்க்கூடிய எதிர்காலத்திற்கான தொழிற்பாட்டு இருப்பில் தொடர்ந்திருப்பதற்கு போதிய மூலவளங்களை சபை கொண்டிருக்கின்றது என்பது முகாமைத்துவத்தின் நியாயமான எதிர்பார்ப்பாகும். சபையானது எதிர்காலம் குறித்து காணப்படுகின்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு, ஒழித்துக்கட்டுவதற்கான அல்லது தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கான தேவைப்பாட்டை எதிர்வுகூறவில்லை. இதன் பிரகாரம், சபையானது நிதிசார் கூற்றுக்களை தயாரிப்பதில் தொடர்ந்து செல்லல் அக்கறையை தொடர்ந்தும் பின்பற்றுருகின்றது.

## 1.8 முக்கிய கணக்கீட்டு தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

சபையின் நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் அறிக்கையிடல் திகதியில் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், நிபந்தனையுடனான பொறுப்புக்களின் வெளிப்படுத்துகைகளின் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கையில் தாக்கம்செலுத்துகின்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை செய்வதற்கு தேவைப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், இந்த ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்றதன்மையானது எதிர்காலத்தில் தாக்கம் செலுத்தத்தக்க சொத்துக்ள்மற்றும் பொறுப்புக்களின் கொண்டுசெல்லர் தொகைக்கான பொருண்மைசார் சீராக்கமொன்றுக்கு தேவைப்படுத்துகின்ற விளைவுகளில் செல்வாக்கு செலுத்தமுடியும். இந்த காரணிகள் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் என்பவற்றை உள்ளடக்கமுடியும்.

## 1.9 மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான எதிர்காலம் குறித்த பிரதான ஊகங்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைகளின் ஏனைய பிரதான மூலங்கள் அடுத்த நிதிசார் ஆண்டினுள் சொத்துக்ள மற்றும் பொறுப்புகளின் கொண்டுசெல்லல் தொகைகளுக்கான பொருண்மைநார் சீராக்கஅமான்றில் முன்னியமான ஆபத்து தாக்கமொன்றை கொண்டிருப்பது கீழே கலந்துரையாடப்படுகின்றது.

### (அ) நிதிசார் சாதனங்களின் நியாயமான பெறுமதி

ஐந்தொகையில் பதியப்பட்ட நிதிசார் கொத்துதகக்ள் மற்றும் நிதிசார் பொறுபக்பக்ளின் நியாயமான பெறுமதி முனைப்பான சந்தைகளிலிருந்து பெறமுடியாதபோது கழிவுவழுங்கப்'பட்ட காசுப்பாய்ச்சல் மாதிரி அத்துடன் அல்லது பொருண்மைசார் மாதிரிகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட விலைமதிப்பு உத்திகளின பயன்பாட்டினால் தீர்மானிக்கப்படுகின்றது . இந்த மாதிரிகளுக்கான உள்ளீடுகள், சாத்தியமானபோது அவதானிக்கத்தக்க சந்தை தரவுகளிலிருந்து பெறப்பட்டதோடு, அவதானிக்கத்தக்க சந்தை தரவுகள் காணப்படாதபோது நியாயமான பெறுமதியை தாபிக்க தீர்ப்பு தேவைப்படுகின்றது.
இந்த காரணிகள் பற்றிய ஊகங்களில் மாற்றங்கள் நிதிசார் சாதனங்களின் அறிக்கையிடப்பட்ட நியாயமான பெறுமதி மீது தாக்கம்செலுத்தமுடியும்.

### (ஆ) வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் விலைமதிப்பிட

ஓய்வூதிய நலன் திட்டத்தின் அட்டுறு பொறுப்புக்கள் மற்றும் தற்போதைய சேவை செலவு ஆகியவற்றை தீர்மானிப்பதற்கு திட்டமிடப்பட்ட அலகு கடன் முறைமை

பயன்படுத்தப்படவேண்டுமென இலங்கை கணக்கீட்டு தராதரம் 19 தேவைப்படுத்துகின்றது. இந்த முறைமையின் நோக்கம் யாதெனில் பல்வேறுபட்ட அட்டுறு ஊகங்களை கவனத்திற்கொண்டு அவை அதிகரிக்கின்றவாறு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊழியரதும் நலன்களுக்கு செலவழிப்பதாகும். ஓய்வூதியம், இராஜினாமா, இறப்பு மற்றும் நிரந்தர அங்கவீனம் என்பவற்றின் காரணமாக ஒவ்சொரு தனிப்பட்ட அங்கத்தவருக்கும் செலுத்தப்படும் அட்டுறு பெறுமதி நலனனை மதிப்பிடுவதற்கு இங்கு அனுகுமுறை பயன்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு அங்கத்தவருக்குமான மதிப்பிடப்பட்ட அட்டுறு நலன்கள் பின்னர் விலை மதிப்பு திகதியில் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட நலனின் உண்மையான தற்போதைய பெறுமதியை கணிப்பிடுவதற்கு சோ◌்க்கப்படுகின்றது. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடொன்றின் தற்போதைய பெறுமதியானது நடப்பு மற்றும் முன்னைய காலங்களில் ஊழியர் சேவையிலிருந்து விளைகின்ற கடப்பாட்டை தீர்ப்பதற்கு தேவையான எதிர்பார்க்கப்படும் எதிர்கால கொடுப்பனவுகளின் உண்மையான தற்போதைய பெறுமதியாகும்.

வரையறுக்கப்பட்ட நலன் ஓய்வுறீதிய திட்டங்களின் செலவானது 2023.12.31 இல் உள்ளவாறான செய்யப்பட்ட உண்மை வழலப்பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் ஐந்தொகை திகதியில் உள்ளவாறான சுமந்துசெல்லும் பெறுமதியானது ரூபா 33,998,835 தொகை ஆகும்.

## (இ) நியாயமான பெறுமதி

நியாயமான பெறுமதி என்பது செயற்படுவதற்கு எந்தவொரு கடமைப்பாட்டின் கீழ் இல்லாத தொடர்பற்ற அறிவுசார்ந்த, விரும்புகின்ற தரப்புக்களுக்கிடையே உடன்படுகின்ற கவனத்திற்கொள்ளப்படுகின்ற தொகையாகும். ஆரம்ப கட்டத்தில் ஒரு நிதிசார் சாதனம் அங்கீகரிக்கப்படுகின்றபோது இதன் நியாயப் பெறுமதி என்பது பொதுவாக கவனத்திற்கொள்ளப்படுகின்ற செலுத்தப்பட்ட அல்லது கிடைக்கப்பெற்ற பெறுமதியாகும். ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து செயற்பாட்டு சந்தையொன்றில் மதிப்பிடப்பட்ட நிதிசார் சொத்தொன்றின் நியாயமான பெறுமதியானது பொதுவாக கேள்விப்பத்திர விலையாகும் அத்துடன் செயற்பாட்டு சந்தையொன்றில் மதிப்பிடப்பட்ட நிதிசார் பொறுப்பொன்றின் நியாயமான பெறுமதியானது பொதுவாக கோரப்படும் விலையாகும். காசுசமனிகள் மற்றும் குறுங்கால முதலீடுகள் போன்ற நிதிசார் சாதனங்களைப் பொறுத்தவரையில் அவை குறுங்காலத்தை கொண்டவையாக இருப்பதோடு இந்த சாதனங்களின் கொண்டுசெல்லும் பெறுமதியானது அதன் அண்ணளவான நியாயமான பெறுமதியாகும்.

## 2. குறிப்பான கணக்கீட்டு கொள்கைகள்

### 2.1 அவற்றின் விலைமதிப்புக்கான ஆதனங்களும் அடிப்படைகளும்

ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்ட ஆதனங்கள் காசும் வங்கி நிலுவைகளுமாகும் அத்துடன் சாதாரண தொழிற்பாட்டு சுற்றொட்டத்தில் அல்லது ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் எது குறுகிய காலத்தை கொண்டதோ அக்காலப்பகுதியில் காசாக மாற்றப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.2. நிதிசார் சாதனங்கள்

2.2.1. நநிதிசார் சொத்துக்கள (பெறுதயியல்லாதவை)
நிதிசார் சொத்துக்கள் இ.நி.அ.த.09 இன் அடிப்படையில் பின்வரும் வகுதிகளாக வகைபிரிக்கப்படுகின்றன:

### 2.2 நிதிசார் சாதனங்கள்

### 2.2.1 நிதிசார் ஆதனங்கள் (பெறுதியல்லாதவை)

இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தராதரங்கள் 09 இன் அடிப்படையில் அதைத்தொடர்ந்து தேய்மான செலவில் ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதி அல்லது இலாபம் அல்லது நட்ட ஆகிய ஊடான நியாயப் பெறுமதியில் பின்வரும் வகுதிகளாக வகைப்படுத்தப்படுகின்றன :

**(அ)** நிதிசார் ஆதனங்களை முகாமைசெய்வதற்கான அமைப்பின் வியாபார மதிரி மற்றும்

(ஆ)) நிதிசார் ஆதனத்தின் ஒப்பந்தசார் காசுப்பாய்ச்சல் பண்புகள்.

ஆரம்ப அங்கீரத்தில் முகாமைத்துவத்தினால் வகைப்படுத்தலானது நிர்ணயிக்கப்படுவதோடு முதலீடுகள் எந்த நோக்கத்திற்காக பெறப்படுகின்றன என்பதில் தங்கியுள்ளன.

### 2.2.2 வகைப்படுத்தல், அங்கீகாரமளிப்பு மற்றும் அளவீடு

(i) பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்திசெய்யப்பட்டால் நிதிசார் ஆதனம் குறைக்கப்பட்ட செலவில் அளவிடப்படும்.

(அ) ஒப்பந்ததார்ர் காசுப்பாய்சல்களை திரட்டுவதற்காக நிதிசார் ஆதனத்தை வைத்திருப்பதை நோக்கங்கொண்ட வியாபார மாதிரியொன்றினுள் நிதிசார் ஆதனத்தை வைத்திருத்தல் ;

(ஆ) காசுப் பாய்ச்சலுக்கான குறிப்பான திகதிகள் தொடர்பில் நிதிசார் ஆதனத்தின் ஒப்பந்த நியதிகளுக்கு உயர்வொன்றை வழங்குவதோடு அவை பிரதான மற்றும் பிரதான நிலுவை தொகைமீதான வட்டியின் கொடுப்பனவுகளாக உள்ளன.

(ii) பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்திசெய்யப்பட்டால் ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயமான பெறுமதியில் ஒரு நிதிசார் ஆதனம் அளவிடப்படலாம்:

(அ) ஒப்பந்ததாரர் காசுப்பாய்சல்களை திரட்டுவதற்காக நிதிசார் ஆதனத்தை வைத்திருப்பதை நோக்கங்கொண்ட வியாபார மாதிரியொன்றினுள் நிதிசார் ஆதனத்தை வைத்திருத்தல்;

(ஆ) காசுப் பாய்ச்சலுக்கான குறிப்பான திகதிகள் தொடர்பில் நிதிசார் ஆதனத்தின் ஒப்பந்த நியதிகளுக்கு உயர்வொன்றை வழங்குவதோடு அவை பிரதான மற்றும் பிரதான நிலுவை தொகைமீதான வட்டியின் கொடுப்பனவுகளாக உள்ளன.

(iii) ஒரு நிதிச் சொத்து, ஏனைய விரிவான வருமானத்தின் மூலம் கடனீட்டுச் செலவில் அல்லது நியாய பெறுமதியில் அளவிடப்படாவிட்டால், இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதியில் அளவிடப்படும்.

### 2.2.3 நியாயமான பெறுமதியைத் தீர்மானித்தல்

கடன் தரம், திரவத்தன்மை மற்றும் செலவுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்படி உடன்பட்ட காசுப் பாய்ச்சல்களின் அடிப்படையில் தற்போதைய பெறுமதி மாதிரியைப் பயன்படுத்தி கடன்கள் மற்றும் முன்பணங்களின் நியாயமான பெறுமதிகள் மற்றும் பொறுப்புகள் தீர்மானிக்கப்படுகின்றன.

வர்த்தக வரவுகள் மற்றும் செலுத்த வேண்டியவைகளின் சுமந்து செல்லும் மதிப்பு குறைவான ஏற்பாடு அவற்றின் நியாயமான பெறுமதிகளை தோராயமாக மதிப்பிடுவதாக கருதப்படுகிறது.

### 2.2.4 மீள்வகைப்படுத்தல்

ஆதனங்துகளை முகாமைசெய்வதற்கான வியாபார மாதிரியை சபை மாற்றும் போது,மட்டுமே, மேலே உள்ள நிதிச் சொத்துக்களின் வகைகளுக்கு ஏற்ப பாதிக்கப்பட்ட அனைத்து நிதிச் சொத்துகளையும் மீளவகைப்படுத்த வேண்டும்.

### 2.2.5 குறைபாடு

(அ) நிதிச் சொத்துகள் படிப்படியாக குறைந்துசெல்லும் செலவில் மேற்கொள்ளப்படும் சபையானது அறிக்கையிடல் காலத்தின் ஒவ்வொரு முடிவிலும் ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துகளின் தொகுதி பலவீனமடைந்துள்ளதற்கான நோக்குசார் சான்று உள்ளதா என்பதை மதிப்பிடுகிறது. நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துகளின் தொகுதி பலவீனமடைகிறது மற்றும் சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பிறகு (ஒரு "இழப்பு நிகழ்வு") ஏற்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக குறைபாடுக்கான நோக்குசார் சான்றுகள் இருந்தால் மட்டுமே குறைபாடு இழப்புகள் ஏற்படும். இழப்பு நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) நிதிச் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலில் அல்லது நம்பகத்தன்மையுடன் மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்துகளின் தொகுதியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது ஒரு நிதிச் சொத்து அல்லது சொத்துக்களின் தொகுதி பலவீனமடைந்துள்ளது என்பதற்கான நோக்குசார் சான்று, பின்வரும் நிகழ்வுகளைப் பற்றி சபையின் கவனத்திற்கு வரும் அவதானிக்கத்தக்க தரவுகளை உள்ளடக்கியது:

- வழங்குபவர் அல்லது கடனாளியின் குறிப்பிடத்தக்க நிதிச் சிக்கல்
- பணம் செலுத்துவதை தவிர்த்தல் அல்லது செலுத்தாமை போன்ற ஒப்பந்த மீறுகை
- வழங்குபவர் அல்லது கடனாளி வங்குரோத்தடைதல் நிலை அல்லது பிற நிதியில் மீள்கட்டமைப்பு போன்ற சாத்தியமான நிலை
- நிதிச் சிக்கல்கள் காரணமாக அந்த நிதிச் சொத்துக்கான செயற்பாட்டு சந்தையொன்று இன்மை அல்லது

- நிதிச் சொத்துக்களின் தொகுதியொன்றிலிருந்து அந்த சொத்துக்களின் ஆரம்ப அங்கீகாரம் காரணமாக மதிப்பிடப்பட்ட எதிர்கால கசோட்டத்தில் அளவிடக்கூடிய வீச்சியொன்று இருப்பதைக் சுட்டிக்காட்டக்கூடிய அவதானிக்கத்தக்க தரவுகள்

தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்த நிதி சொத்துக்களுக்கு தனித்தனியாக குறைபாடுக்கான சுயாதீன சான்றுகள் உள்ளதா என்பதை சபை முதலில் மதிப்பிடுகிறது. தனித்தனியாக மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்திற்கு, குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், குறைபாடுக்கான சுயாதீன சான்று இல்லை என்று சபை தீர்மானித்தால், அது ஒரே மாதிரியான கடன் இடர் பண்புகளைக் கொண்ட நிதிச் சொத்துகளின் குழுவில் உள்ள சொத்தை உள்ளடக்கியது மற்றும் அவை குறைபாட்டிற்காக கூட்டாக மதிப்பிடுகிறது. குறைபாட்டிற்காக தனித்தனியாக மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் மற்றும் குறைபாடு இழப்பு அல்லது தொடர்ந்து அங்கீகரிக்கப்படும் சொத்துக்கள் குறைபாட்டின் கூட்டு மதிப்பீட்டில் சேர்க்கப்படுவதில்லை.

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளில் ஒரு குறைபாடு இழப்பு ஏற்பட்டதற்கான நோக்குசார் சான்று இருந்தால், இழப்பின் அளவு சொத்தின் சுமந்து செல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதைய மதிப்புக்கும் (ஏற்படத்தக்க எதிர்கால கடன் இழப்புகளைத் தவிர்த்து) உள்ள வித்தியாசமாக அளவிடப்படுகிறது. நிதிச் சொத்தின் மூல பயனுள்ள வட்டி விகிதத்தில் தள்ளுபடி செய்யப்படுகிறது. கொடுப்பனவு கணக்கைப் பயன்படுத்துவதன் மூலம் சொத்தின் சுமந்து செல்லும் தொகை குறைக்கப்படுகிறது, மேலும் இழப்பின் அளவு வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. குறைபாட்டின் கூட்டு மதிப்பீட்டின் நோக்கத்திற்காக, நிதிச் சொத்துக்கள் ஒரே மாதிரியான கடன் அபாயத்தின் அடிப்படையில் தொகுக்கப்படுகின்றன.

அதைத் தொடர்ந்து வரும் காலகட்டத்தில், குறைபாடு இழப்பின் அளவு குறைந்து, குறைபாடு அங்கீகரிக்கப்பட்ட பிறகு நிகழும் நிகழ்வுடன் (மேம்பட்ட கடன் மதிப்பீடு போன்றவை) நோக்குடன தொடர்புடையதாக இருந்தால், கொடுப்பனவு கணக்கை சரிசெய்வதன் மூலம் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட குறைபாடு இழப்பு மாற்றப்படும். திருப்பிச் செலுத்தும் தொகை வருமானக் கூற்றில்ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## (ஆ) ஏனைய நிதி அல்லாத சொத்துக்களின் குறைபாடு

காலவரையற்ற பயனுள்ள ஆயுளைக் கொண்ட சொத்துக்கள் படிப்படியாக குறைந்துசெல்லும் நிலைக்கு உட்பட்டவை அல்ல, மேலும் அவை குறைபாட்டிற்காக ஆண்டுதோறும் சோதிக்கப்படுகின்றன. நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் சுமந்து செல்லும் தொகையை மீட்டெடுக்க முடியாது என்பதைக் குறிக்கும் போதெல்லாம், பணமதிப்பு நீக்கத்திற்கு உட்பட்ட சொத்துக்கள் குறைபாட்டிற்காக மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. சொத்தின் சுமந்து செல்லும் தொகை அதன் மீட்டெடுக்கக்கூடிய தொகையை மீறும் தொகைக்கு குறைபாடு இழப்பு அங்கீகரிக்கப்படுகிறது. மீட்டெடுக்கக்கூடிய தொகையானது, ஒரு சொத்தின் நியாயமான மதிப்பைக் காட்டிலும் அதிகமாகும், விற்பதற்கான செலவுகள் மற்றும் பயன்பாட்டில் உள்ள மதிப்பு. குறைபாட்டை மதிப்பிடுவதற்கான நோக்கங்களுக்காக, தனித்தனியாக அடையாளம் காணக்கூடிய காசுப்பாய்ச்சல்களை கொண்டிருக்கும் (பணத்தை உருவாக்கும் அலகுகள்) குறைந்த மட்டங்களில் உள்ள சொத்துக்கள் தொகுக்கப்படுகின்றன.

### 2.2.6 அங்கீகார நீக்கம்

ஒரு நிதிச் சொத்து (அல்லது, நிதிச் சொத்தின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச் *சொத்துகளின் குழுவின் ஒரு பகுதி பொருந்தும்) பின்வருவனவற்றின் போது* அங்கீகரிக்கப்படவில்லை:

- காலாவதியான சொத்திலிருந்து பணப்பாய்ச்சலைப் பெறுவதற்கான உரிமைகள்
- சொத்திலிருந்து பணப் பாய்ச்சலைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை சபை மாற்றியுள்ளது அல்லது பெறப்பட்ட பணப் பாய்ச்சலை “கடந்துசெல்லல்“ ஏற்பாட்டின் கீழ் மூன்றாம் தரப்பினருக்கு பொருள் தாமதமின்றி முழுமையாகச் செலுத்துவதற்கான கடமையை ஏற்றுக்கொண்டது் மற்றும் ஒன்றில்

(அ) சொத்தின் அனைத்து அபாயங்கள் மற்றும் வெகுமதிகளை சபை கணிசமாக மாற்றியுள்ளது, அல்லது

(ஆ) சபையானது சொத்தின் அனைத்து அபாயங்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமாக மாற்றவோ அல்லது தக்கவைக்கவோ இல்லை, ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றியுள்ளது.

ஒரு சொத்திலிருந்து பணப் பாய்ச்சலைப் பெறுவதற்கான உரிமையை சபை மாற்றிவிட்டாலோ அல்லது கடந்துசெல்லல் ஏற்பாட்டிற்குள் நுழைந்துவிட்டாலோ, மேலும் சொத்தின் அபாயங்கள் மற்றும் வெகுமதிகள் அனைத்தையும் மாற்றவோ அல்லது தக்கவைக்கவோ அல்லது அதன் கட்டுப்பாட்டை மாற்றவோ இல்லை என்றால், சொத்து அங்கீகரிக்கப்படுகிறது. சபை அதில் தொடர்ந்து ஈடுபடும் அளவிற்கு. அந்த விடயத்தில், சபை தொடர்புடைய பொறுப்பையும் அங்கீகரிக்கிறது. மாற்றப்பட்ட சொத்து மற்றும் தொடர்புடைய பொறுப்பு ஆகியவை சபை தக்கவைத்துள்ள உரிமைகள் மற்றும் கடமைகளை பிரதிபலிக்கும் அடிப்படையில் அளவிடப்படுகிறது. மாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதத்தின் வடிவத்தை எடுக்கும் தொடர்ச்சியான ஈடுபாடு, சொத்தின் உண்மையான சுமந்து செல்லும் தொகை மற்றும் சபை திருப்பிச் செலுத்த வேண்டிய அதிகபட்ச அளவு கருத்தில் கொள்ளப்படுகின்றது.

**2.2.7** நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஈடுசெய்யப்படுகின்றன மற்றும் நிகரத் தொகை நிதி நிலை அறிக்கையில் சமர்ப்பிக்கப்படும் போது, மற்றும் மட்டுமே, தொகைகளை ஈடுசெய்ய நிறுவனத்திற்கு சட்டப்பூர்வ உரிமை உள்ளது மற்றும் நிகர அடிப்படையில் தீர்க்க விரும்புகிறது. சொத்து மற்றும் பொறுப்புகளை சமகாலத்தில் தீர்க்க நாடுகின்றது.

## 2.3 சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

### 2.3.1 அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய பொருட்கள் கொள்வனவு விலையில் அல்லது திரட்டப்பட்ட பெறுமான தேய்வு குறைப்பின் அடிப்படையில் கூறப்பட்டுள்ளது செலவானது சொத்தின் கையகப்படுத்துதலுக்கு நேரடியாகக் காரணமான செலவினங்களை உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்ணயிக்கப்பட்ட சொத்தின் விலையானது பொருட்கள் மற்றும் நேரடி உழைப்பு மற்றும் ஆகியவற்றின் விலையை உள்ளடக்கியது. சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை பழுதுபார்த்தல் அல்லது பராமரித்தல் ஆகியவற்றிற்கான அவற்றின் உத்தேசித்த

பயன்பாட்டுச் செலவுக்காகச் செயல்படும் நிலையில் இருக்கும் சொத்துக்கள், சொத்துக்களில் இருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பொருளாதாரப் பலன்களை மீட்டெடுக்க அல்லது பராமரிக்கச் செய்யப்படும் போது ஏற்படும் செலவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 2.3.2 அடுத்தடுத்த செலவுகள்

தனித்தனியாகக் கணக்கிடப்படும் சொத்து, போறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒரு கூறுகளை மாற்றுவதற்குச் செய்யப்படும் செலவு, பெரிய ஆய்வு மற்றும் மாற்றியமைக்கும் செலவுகள் உட்பட, குத்தகைக் காலத்தில் மூலதனமாக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்படுகிறது. அந்த பகுதிக்குள் பொதிந்துள்ள எதிர்காலப் பொருளாதாரப் பலன்கள் வாரியத்திற்குப் பாயும் மற்றும் அதன் செலவை நம்பகத்தன்மையுடன் அளக்க முடிந்தால் மட்டுமே பிற அடுத்தடுத்த செலவினங்கள் மூலதனமாக்கப்படும். சொத்து, போறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் தினசரி சேவைக்கான செலவு வருமான அறிக்கையில் ஏற்படும் செலவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 2.3.3 தேய்மானம்

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விலை.்.மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் தேய்மானத்திற்கான ஏற்பாடு நேர்கோட்டு முறையில் கணக்கிடப்படுகிறது. நிலத்தைத் தவிர மற்ற அனைத்து சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள வாழ்க்கையின் மீது இத்தகைய தொகைகளை இரத்துச் செய்வதற்காக பின்வரும் சதவீதங்களில் ஆண்டுதோறும் தேய்மானம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 10 ஆண்டுகளுக்கு குறைவான மோட்டார் வாகனங்கள் | 10% | 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மோட்டார் வாகனங்கள் | 20% |
| கணினிகள் | 20% | | |
| கணினி உபகரணங்கள் | 25% | டிவி உபகரணங்கள் | 10% |
| தொலைபேசி பொருத்துகை | 20% | துளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 10% |
| குடியிருப்பு தொலைபேசி | 10% | அலுவலக உபகரணங்கள் | 10% |
| பிஏடீஎக்ஸ் முறைமை | 10% | கியோஸ்க் சிஸ்டம் | 20% |
| மற்ற உபகரணங்கள் | 33 1/3% | | |

நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யும் திகதியிலிருந்து தேய்மானம் ஆரம்பிக்கப்படுகிறது. மீளாய்வின் கீழான ஆண்டில், சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பொருளாதார ஆயுட்காலம் ஆகியவை இ.க.த 16 ஆல் தேவைப்படும் சிறந்த தகவல்களின் அடிப்படையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டன. இதன் விளைவாக, சில சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கான தேய்மான விகிதங்கள் மாற்றப்பட்டன. சொத்துக்களின் பொருளாதார ஆயற்கால மாற்றத்தின் விளைவாக ஏற்படும் தாக்கம் 2012 முதல் தொடங்கும் நிதிநிலை அறிக்கைகளில் சீர்செய்யப்படுகிறது.

### 2.3.4 அங்கீகாரம் நீக்கம்

சொத்து மற்றும் உபகரணங்களின் பொருட்கள் அகற்றப்படும்போது அல்லது எதிர்காலத்தில் அதன் பயன்பாட்டிலிருந்து பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அங்கீகாரம் நீக்கப்படும். சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒரு பொருளை அங்கீகரிப்பதில் ஏற்படும் இலாபம் அல்லது இழப்புகள் விற்பனை வருமானத்திற்கும் சொத்தை எடுத்துச் செல்லும் தொகைக்கும் உள்ள வித்தியாசமாக தீர்மானிக்கப்படுகிறது அத்துடன் வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 2.3.5 கற்புலுனாகும் சொத்துக்களின் குறைபாடு

ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும், அந்தச் சொத்துக்கள் குறைபாடு இழப்பைச் சந்தித்ததற்கான ஏதேனும் அறிகுறி உள்ளதா என்பதைத் தீர்மானிக்க, அதன் கட்புலனாகும்ன சொத்துகளின் சுமந்து செல்லும் அளவுகளை சபை மதிப்பாய்வு செய்கிறது. அத்தகைய அறிகுறி ஏதேனும் இருந்தால், குறைபாடு இழப்பின் அளவை (ஏதேனும் இருந்தால்) தீர்மானிக்க சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய அளவு மதிப்பிடப்படுகிறது. ஒரு தனிப்பட்ட சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய தொகையை மதிப்பிட முடியாத பட்சத்தில், அந்தச் சொத்தின் பணத்தை உருவாக்கும் அலகுக்கு மீட்டெடுக்கக்கூடிய தொகை தீர்மானிக்கப்படுகிறது.

ஒதுக்கீட்டின் நியாயமான மற்றும் நிலையான அடிப்படையை அடையாளம் காண முடிந்தால், சொத்துக்கள் தனிப்பட்ட காசு-உருவாக்கும் அலகுகளுக்கும் ஒதுக்கப்படுகின்றன, இல்லையெனில் அவை ஒரு நியாயமான மற்றும் நிலையான ஒதுக்கீடு அடிப்படையை அடையாளம் காணக்கூடிய காசு-உருவாக்கும் அலகுகளின் சிறிய குழுவிற்கு ஒதுக்கப்படுகின்றன.

மீட்டெடுக்கக்கூடிய தொகை என்பது நியாயமான மதிப்பை விட அதிகமாகும், விற்கும் செலவுகள் அல்லது பயன்பாட்டில் உள்ள பெறுமதி. பயன்பாட்டில் உள்ள பெறுமதியை மதிப்பிடுவதில், மதிப்பிடப்பட்ட எதிர்கால பணப் பாய்ச்சல், வரிக்கு முந்தைய கழிவு விகிதத்தைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதியில் தள்ளுபடி செய்யப்படுகிறது, இது பணத்தின் நேர மதிப்பின் தற்போதைய சந்தை மதிப்பீடுகள் மற்றும் எதிர்கால பணப் பாய்ச்சலின் மதிப்பீடுகள் சொத்துக்கான குறிப்பிட்ட அபாயங்களை பிரதிபலிக்கிறமை சீர்செய்யப்படவில்லை.
ஒரு சொத்தின் (அல்லது காசை உருவாக்கும் அலகு) மீட்டெடுக்கக்கூடிய தொகை அதன் சுமந்து செல்லும் தொகையை விட குறைவாக மதிப்பிடப்பட்டால், சொத்தின் சுமந்து செல்லும் தொகை (பணத்தை உருவாக்கும் அலகு) அதன் மீட்டெடுக்கக்கூடிய தொகையாக குறைக்கப்படும். ஒரு குறைபாடு இழப்பு வருமான அறிக்கையில் உடனடியாக அங்கீகரிக்கப்படும், தொடர்புடைய சொத்து மீள்மதிப்பீட்டுத் தொகையில் கொண்டு செல்லப்படாவிட்டால், இந்தச் சந்தர்ப்பத்தில் குறைபாடு இழப்பு மீள்மதிப்பீடு குறைவாகக் கருதப்படுகிறது.

### 2.3.6 பொருளற்ற நடப்பு அல்லாத சொத்துகளின் விலை மீண்டும் மீண்டும் வரும் செலவினங்களாக பதிவு செய்யப்படுகிறது (நானாவித சொத்துகள்)

சொத்து போறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கான இலங்கை கணக்கியல் தரநிலை (இ.க.த 16) "உதிரிப் பாகங்கள் மற்றும் சேவை உபகரணங்கள் பொதுவாக சரக்குகளாக எடுத்துச் செல்லப்படுகின்றன மற்றும் நுகரப்படும் போது லாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன" என வழிகாட்டுகிறது.
ஏ.அ.ச ஆனது பராமரிப்புச் செலவுகள்.'. த.தொ உதிரிப் பாகங்கள் உள்ளிட்ட அனைத்து சிறிய மதிப்புச் செலவினங்களையும், செலவு ஏற்படும் போது பல்வேறு சொத்துக்களின் விலையாகப் பதிவுசெய்கிறது, நிலையான சொத்துகளின் விலையின்

ஒரு பகுதியாக அல்ல, நிலையான சொத்து மதிப்புகளுடன் ஒப்பிடும்போது அவை முக்கியமற்றவை.

## 2.4 இணை நிறுவனங்களில் முதலீடுகள்- டெவலப்மெண்ட் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டில்

ஒரு அசோசியேட் நிறுவனத்தில் முதலீடானது ஆரம்பத்தில் செலவில் அங்கீகரிக்கப்படுகிறது மற்றும் கையகப்படுத்தும் திகதிக்குப் பின்னர் முதலீட்டாளரின் இலாபம் அல்லது நட்டத்தில் சபையின் பங்கை அங்கீகரிக்க, சுமந்து செல்லும் தொகை அதிகரிக்கப்படுகிறது அல்லது குறைக்கப்படுகிறது ஒப்புரவு முறை). சுமந்து செல்லும் தொகையில் ஏற்படும் மாற்றங்கள் (சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு அல்லது அந்நியச் செலாவணி மாற்ற வேறுபாடுகளால் ஏற்படும் மாற்றங்கள்) 2013 ஆம் ஆண்டு முதல் முதலீட்டாளரின் மற்ற விரிவான வருமானத்தில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படும் முதலீட்டாளரின் விகிதாசார வட்டியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 2.5 கட்புலனாகாத சொத்துக்கள்

ஒரு கட்புலனாகாத சொத்து அங்கீகரிக்கப்பட்டால்,
சொத்துக்களுக்குக் காரணமான சேவை ஆற்றலின் எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பொருளாதாரப் பலன்கள் நிறுவனத்திற்குப் பாயும் என்பது சாத்தியம் மற்றும்

(அ) சொத்தின் செலவு அல்லது நியாயப் பெறுமதி நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும்.
இ.க.த. 38 இன் படி கட்புலனாகாத சொத்துக்களை அடையாளம் காண சபை செலவு மாதிரியைப் பயன்படுத்துகிறது. மேலும் கணினி மென்பொருள் கட்புலனாகாத சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் தேய்மானத் தொகையானது அதன் பயனுள்ள வாழ்நாளில் முறையான அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. கடனீட்டு விகிதம் 25மூ பொருந்தும்.

## 2.6 பொருட்பட்டியல்கள்

அனைத்து பொருட்பட்டியல்களும் குறைந்த விலையில் அல்லது நிகர உணரக்கூடிய பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன. முதலில் வந்து முதலில் செல்லல் அடிப்படையில் செலவு தீர்மானிக்கப்படுகிறது. (FIFO)

## 2.7 ஏனைய சொத்துக்கள்

ஏனைய கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள், முன்பணம், வைப்புத்தொகை, முன்பணம் செலுத்துதல், பெறத்தக்க வரிகள் ஆகியவை ஏனைய சொத்துக்களில் உள்ளடக்கப்படுகின்றன.
(அ) முன்பணம், வைப்புத்தொகை, முன்செலுத்திய செலவினம்
ஒன்றுக்கு மேற்பட்ட நிதியாண்டுகளுக்கு நன்மை அல்லது தொடர்பைக் கொண்டதாகக் கருதப்படும் செலவு முன்பணங்கள், வைப்புத்தொகைகள் மற்றும் முன்கொடுப்பனவு செலவுகள் என வகைப்படுத்தப்படுகிறது. அத்தகைய செலவினங்கள் கால விகிதாசார அடிப்படையில், அது தொடர்புடைய காலப்பகுதியில் தள்ளுபடி செய்யப்படுகிறது.

(ஆ ஏனைய கடன்பட்டோர்
ஏனைய கடன்பட்டோர் குறைந்த பாதிப்பு இழப்பில் அங்கீகரிக்கப்படுகிறார்கள்.

## 2.8. காசும் காசு சமனிகளும்

காசும் காசு சமனிகளும் மற்றும் கையில் உள்ள காசு மற்றும் குறுகிய கால அதிக திரவ முதலீடுகளை உள்ளடக்கியது, அவை அறியப்பட்ட பணத்திற்கு உடனடியாக மாற்றக்கூடியவை மற்றும் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களின் சிறிய ஆபத்துக்கு உட்பட்டவை. குறுகிய கால பணப் பொறுப்புகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக இவை நடத்தப்படுகின்றன.

காசுப்பாய்ச்சல் அறிக்கையின் நோக்கத்திற்காக, காசும் மற்றும் காசு சமனிகளும், நிலுவையில் உள்ள வங்கி மேலதிக பற்றுகளுக்கு நிகராக கையில் உள்ள பணம் மற்றும் வங்கிகளில் வைப்புத்தொகை ஆகியவற்றைக் கொண்டிருக்கும். குறுகிய முதிர்வு கொண்ட முதலீடுகள் அதாவது கையகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான முதலீடுகளும் பணத்திற்கு சமமானவைகளாக கருதப்படுகின்றன. ஒருங்கிணைக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில், நடப்புப் பொறுப்புகளில் உள்ள கடன்களுக்குள் வங்கி மேலதிக பற்றுகளுக் காட்டப்படுகின்றன.

## 2.9 நிதி பொறுப்புகள்

### 2.9.1 நிதி பொறுப்புகளின் வகையீடு

பின்வருவனவற்றைத் தவிர: ஏ.அ.ச அனைத்து நிதிப் பொறுப்புகளையும
. வகைப்படுத்தியுள்ளது,

(அ) பின்னர் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் பொறுப்புகள் உள்ளிட்ட இலாபம் அல்லது நட்டம் போன்ற அத்தகைய பொறுப்புகள்மூலம் நியாய பெறுமதியில் உள்ள நிதிப் பொறுப்புகள்
.

(ஆ) நிதிச் சொத்தின் மாற்றத்தின்போது எழுகின்ற நிதிப் பொறுப்புகள தொடர்ந்து ஈடுபடுத்தும் அணுகுமுறை பொருந்தும் போது அல்லது அங்கீகாரமற்றதாக்க தகுதி பெறாதபோது ஏற்படும் நிதிப் பொறுப்புகள்.
(இ) நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள்.
(ஈ)சந்தை வட்டி விகிதத்திற்கு குறைவான அளவில் கடனை வழங்குவதற்கான உறுதிப்பாடுகள்.

அதன்படி, இ.நி.அ.த 09 இன் எல்லைக்குள் உள்ள நிதிப் பொறுப்புகள், இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதியில் அல்லது தகுந்தபடி கடனீட்டுச் செலவில் நிதிப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதிப் பொறுப்புகளின் வகைப்பாட்டை சபை தீர்மானிக்கிறது.

சபையின் நிதிப் பொறுப்புகளில் வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளைா உள்ளடக்குகின்றன..

### 2.9.2 ஏனைய பொறுப்புகள்

ஏனைய பொறுப்புகளில் திரட்டப்பட்ட செலவுகள் அடங்கும். இவை அவற்றின் நியாயமான பெறுமதியாகக் கருதப்படும் அவற்றின் வரலாற்று பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 2.10 அரசாங்க மானியங்கள்

மானியங்கள் நிதிநிலை அறிக்கைகளில் அவற்றின் நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. மானியம் ஒரு செலவினத்துடன் தொடர்புடையதாக இருந்தால், அது ஒரு முறையான அடிப்படையில் ஈடுசெய்யும் நோக்கத்துடன் செலவினங்களுடன் பொருத்துவதற்குத் தேவையான காலப்பகுதியில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகிறது.

சொத்துக்கள் தொடர்பான மானியங்கள் பொதுவாக நிதி நிலை அறிக்கையில் ஒத்திவைக்கப்படுகின்றன மற்றும் சொத்தின் பயனுள்ள வாழ்க்கையின் விரிவான வருமான அறிக்கைக்கு வரவு வைக்கப்படும்.

இ.க.த 20 - அரசாங்க மானியங்களுக்கான கணக்கியல் மற்றும் அரசாங்க உதவியை வெளிப்படுத்துதல் ஆகியவற்றின் படி, 2016 ஆம் ஆண்டு முதல், அரசாங்க நிதியைப் பயன்படுத்தி சபையின் அபிவிருத்தி வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் நிலையான சொத்துக்களை வாங்குவதற்கான செலவு அரசாங்க மானியக் கணக்கிற்கு மாற்றப்பட்டு, திருப்பிச் செலுத்தப்படும். அவர்களின் பயனுள்ள வாழ்நாள் முழுவதும் (தேய்மான விகிதத்திற்கு சமம்).

அரசாங்க மானியத்தின் மதிப்பு, சபை உருவாகும் போது பின்வரும் நிறுவனத்திலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் சபைக்கு கொள்வனவு செய்த சொத்துக்கள் ஆகியவற்றை பிரதிபலிக்கிறது.

| | |
|---|---|
| அரசாங்க பங்களிப்பு | ரூ. 7,904,002 |
| ஐ.நா.அ.தி பங்களிப்பு | ரூ. 2,110,282 |
| அரசாங்க மானியம்- - மோட்டார் வாகனங்கள் | ரூ. 3,162,227 |
| அரசாங்க மானியம் - மற்றவை | ரூ. 19,102,428 |
| மொத்தம் | ரூ. 32,278,939 |

## 2.11 பணியாளர் நலன்கள்

### வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்

ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே.நி) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ஊ.ந.நி) பங்களிப்புகளுக்கு அந்தந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய பணியாளர்கள் தகுதியுடையவர்களாவர். ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே.நி) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கு ஊழியர்களின் மொத்த ஊதியத்தின் நிலையான பங்களிப்புகளை அதிகாரசபை செலுத்துவதோடு மேலதிக தொகைகளை செலுத்துவதற்கு சட்டப்பூர்வ அல்லது ஆக்கபூர்வமான கடமை இல்லை

### வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள் என்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் தவிர்ந்த வேலைவாய்ப்புக்குப் பிந்தைய திட்டங்களாகும். 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடையை செலுத்துவதற்கு ஏ.அ.ச. பொறுப்புடையதாகும். வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களுக்கான கணக்கீடு சிக்கலானது, ஏனெனில் கடப்பாடு மற்றும் செலவுகளை

அளவிடுவதற்கு கணிப்பீட்டு அனுமானங்கள் தேவை, மேலும் கணிப்பீட்டு அனுமான பெறுகைகள் மற்றும் இழப்புகளுக்கான வாய்ப்பு உள்ளது. மேலும், ஏனைய கடப்பாடுகள் தள்ளுபடி அடிப்படையில் அளவிடப்படுகின்றன, ஏனெனில் ஊழியர்கள் தொடர்புடைய சேவையை வழங்குவதற்கு பல ஆண்டுகளுக்குப் பிறகு அவை தீர்க்கப்படலாம்.

கணிப்பீட்டு மதிப்பீடானது ஸ்மைல்ஸ் குளோபல் (பிரைவேட்) லிமிடெட், தொழிலசார் ஆலோசனை நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகிறது. நிறுவனமானது தள்ளுபடி விகிதத்தை 13%, ஆகவும் சம்பள பணவீக்கத்தை 2மூ, ஆகவும் இறப்பு விகிதம் யு67.:.70 ருடவ அட்டவணைகள், திரும்பப் பெறும் விகிதம் 6மூ ஆகவும் இருக்குமென்ற அனுமானங்களை எடுத்துள்ளது.

## 2.12 வருமான வரி

1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 18 இன் பிரகாரம்,

(அ) சபையின் இலாபம் மற்றும் வருமானம் மற்றும்

(ஆ) நிதியிலிருந்து மானியமாக அல்லது கொடையாக எந்தவொரு நபருக்கும் சபையால் செலுத்தப்படும் எந்தவொரு தொகையும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

## 2.13 வருமான அங்கீகாரம்

### அ. அரசாங்க கொடை

இது அரசாங்க திறைசேரியிலிருந்து பெறப்பட்ட நிதியைக் பிரதிபலிக்கின்றது. ஏதிர்வுகூறப்பட்ட பணப் பாய்ச்சல் தேவைகளின் அடிப்படையில், திறைசேரி சபைக்கு தேவையான நிதியை வழங்குகிறது. எனவே, இது நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்ட சபையில் பெறப்பட்ட செலவு தொடர்பான மானியத்தைப் பிரதிபலிக்கிறது.

### ஆ. ஏனைய வருமானம்

சேவைகளை வழங்குவதன் மற்றும் தகவல் மூலம் பெறப்படும் வருமானம் தொடர்புடைய சேவைகள் செய்யப்படும் காலப்பகுதியில் பெறப்பட்ட விலைப்பட்டியல்களின்படி பெறப்பட்ட அல்லது பெறத்தக்க கருத்தில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகிறது.

### இ. வட்டி வருமானம்

அனைத்து வட்டி-தாங்கும் நிதி சாதனங்ளுக்கான வட்டி வருமானம் பயனுள்ள வட்டி விகித முறையைப் பயன்படுத்தி தவணையைத் திருப்பிச் செலுத்தும் நேரத்தில் வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### ஈ. பங்கிலாப வருமானம்

கட்டணத்தைப் பெறுவதற்கான சபையின் உரிமை நிறுவப்படும் போது பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

## 2.14 செலவுகள் அங்கீகாரம்

அனைத்து செலவுகளும் கொடுக்கப்பட்ட கருத்தில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன மற்றும் அந்த செலவுகள் தொடர்புடைய காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் பயனுள்ள வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் பொதிந்துள்ள எதிர்காலப் பொருளாதாரப் பலன்களின்

எதிர்பார்க்கப்படும் நுகர்வு முறை ஆகியவை தேய்மான காலத்தை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்பட்டு கணக்கியல் மதிப்பீட்டின் மாற்றமாகக் கருதப்படுகின்றன.

### 2.15 கடன்பெறும் செலவுகள்

கடன் பெறும் செலவுகள் என்பனது நிதிகளை கடனுக்கு பெறுவது தொடர்பில் சபைக்கு ஏற்படும் வட்டி மற்றும் ஏனைய செலவுகள் ஆகும். கடன் பெறும் செலவுகள் அவை ஏற்படும் காலத்தில் ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.16 வெளிநாட்டு நாணய மாற்றம் / கொடுக்கல்வாங்கல்கள்

செயற்பாட்டு நாணயத்தைத் தவிர ஏனைய நாணயங்களின் அனைத்துப் கொடுக்கல்வாங்கல்களும், கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய மாற்று விகிதங்களைப் பயன்படுத்தி, இலங்கை ரூபாயில் பதிவு செய்யப்படுகின்றன. நிதி நிலைமை திகதியின் ஒவ்வொரு கூற்றிலும், வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்ட பண சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஐந்தொகை திகதியில் நிலவும் நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாய்க்கு சமமானவைகளுக்கு மீண்டும்மாற்றப்படும். வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்ட நாணயமற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கொடுக்கல்வாங்கல் திகதியில் நிலவும் மாற்று விகிதத்தைப் பயன்படுத்தி இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படுகின்றன. பணப் பொருட்களின் தீர்வு மற்றும் பணப் பொருட்களின் மீள் மாற்றம் தொடர்பில் எழும் நாணயமாற்ற வேறுபாடுகள், அவை எழும் ஆண்டில் வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.17 தொடர்புடைய தரப்பு கொடுக்கல்வாங்கல்கள்

சபை அதன் இணை நிறுவனத்துடன் தொடர்புடைய தரப்புடன் உறவைக் கொண்டுள்ளது, அதாவது டெவலப்மென்ட் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட். சபை அது அமைந்துள்ள இடத்திற்கான மாதாந்த வாடகை மற்றும் இணை நிறுவனத்திற்கு அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின்படி கேட்போர்கூடத்திற்கான வாடகைக் கூலி கட்டணங்களையும் செலுத்தியுள்ளது.

திரு. சுரேஸ் டி த மெல் - முன்னாள் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்றுநர் 31.\.03.\.2023 வரை DHPL இன் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவராக இருந்தார் மற்றும் கலாநிதி ˙ கிங்ஸ்லி பெர்னார்ட் - தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் 03/04/2023 முதல் DHPL இன் பணிப்பாளர் சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்டார். . திரு. எஸ்.ஆர்.பி. இந்திரகீர்த்தி –மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் நிருவாகம்) திருமதி. டி.ரீ. விஜயரத்ன - சட்ட அதிகாரி மற்றும் திரு. கே.டி. பெரேரா – நிதிப் பணிப்பாளர் ஆகியோர் .\.பினான்ஸ் டெவலப்மென்ட் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையின் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் நியமன பணிப்பாளர்களாக தொழிற்படுகின்றனர்.

2023 ஆம் ஆண்டில் நான்கு சபைக் கூட்டங்கள் நடைபெற்றன. தலா ஒரு அமர்விற்கு ரூபா 10,000 அமர்வு கொடுப்பனவாக வழங்கப்பட்டது.

### முக்கிய முகாமைத்துவ அலுவலர்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு தராதரம் 24 (LKAS- 24) இன் பிரகாரம் சபையின் செயல்பாடுகளைத் திட்டமிடுதல், வழிநடத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்

ஆகியவற்றுக்கு தொடர்புடைய தரப்பு வெளிப்படுத்தல், பிரதான முகாமைத்துவப் அலுவலர்கள் அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டுள்ளனர்..

புதில் பணிப்பாளர் நாயகம் திருமதி மாலானி பத்தேகமகே,தலைவராகவும் நிதிப் பணிப்பாளர் திரு. கே.டி.பெரேரா முகாமைத்துவப் பணிப்பாளராகவும் மற்றும் பிரதிப் பணிப்பாளர் (ஏ.அ.ச) திருமதி கயானி விஜேதிலக ஆகியோர் தொடர்ந்தும் காளான் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் (MDTC) சபையில் சேவையாற்றினர். 2023 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் இரண்டு சபைக் கூட்டங்கள் நடைபெற்றன. ஒரு அமர்வுக்கு தலைவருக்கு ரூபா. 5,000 ஏனைய இரண்டு பணிப்பாளர்களுக்கு தலா ரூபா 3,500 வீதம் அமர்வு கொடுப்பனவு வழங்கப்பட்டது. மாதாந்த கொடுப்பனவு ரூபா 4,000- நிர்வாக பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது.

அரசாங்கம் அதன் 2022 ஆண்டு இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் (வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இல் 32) இன் கீழ், பொதியிடல் தொழில்துறையின் ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டை இலக்காகக் கொண்டு ஏ.அ.ச இன் இலங்கை தேசிய பொதியிடல் நிலையம் (NPC) மீண்டும் செயல்படுத்தப்பட வேண்டும் என அடையாளம் கண்டுள்ளது. தேசிய பொதியிடல் நிலையம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB), இலங்கை தர நிர்ணய நிறுவனம் (SLSI), கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI), தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERD), லங்கா நெளி அட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் (LCCMA) மற்றும் இலங்கை பொதியிடல் நிறுவனம் (SLIP).

ஏற்றுமதி அபிவிருத்தி சபையை பிரதிநிதித்துவப்படுத்தி தலைவர் டாக்டர் கிங்ஸ்லி பெர்னார்ட் தலைவராகவும், பதில் பணிப்பாளர் நாயகம் திருமதி பி.வி.ஏ.எம். பத்தேகமகே, பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் தேசிய பொதியிடல் நிலையத்திற்கு சேவைளாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப் பணிப்பாளர திரு. குசல் டி. பெரேரா தே.பொ.நிலையத்தின் கணக்காளராவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## 2.18 ஐந்தொகை திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

புணிப்பாளர்கள் நிகழ்வுகளை உன்னிப்பாகக் கண்காணித்து, பொருத்தமானதாக பிந்தைய ஐந்தொகை நிகழ்வுகள் தொடர்பாக தற்போதைய நிதிநிலை அறிக்கைகளில் தேவையான சீராக்கம் அல்லது வெளிப்படுத்தல்களை செய்துள்ளனர்.

## 2.19 தற்செயலான பொறுப்புகள்

அ) பணம் செலுத்துவது சாத்தியமில்லை அல்லது தொகையை நியாயமான முறையில் மதிப்பிட முடியாது என்றால், கடந்த கால நிகழ்வின் விளைவாக சாத்தியமான எதிர்கால பொறுப்புகள் இருந்தால் அல்லது கடந்த நிகழ்வின் விளைவாக தற்போதைய கடமை இருந்தால், தற்செயலான பொறுப்புகள் வெளிப்படுத்தப்படும்.

ஆ) சபையுடன் மேற்கொண்ட பல்வேறு கொடுக்கல்வாங்கலகள் தொடர்பில் 17 தரப்பினருக்கு எதிராக சபையானது சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் நிதிசார் கூற்றுக்ளுக்கான குறிப்புக்களின் 25 வது குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 2.20 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்று தொடர்பான இலங்கை கணக்கீட்டு தராதர இல 7 இன் பிரகாரம் மறைமுக முறையைப் பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

காசல்லாத தன்மை கொண்ட கொடுக்கல்வாங்கல்கள், காசு பெறுதல்கள் அல்லது செலுத்தல்கள் கடந்தகால அல்லது எதிர்கால ஏதாவது தாமதங்கள் அல்லது சேர்ப்புகள் மற்றும் முதலீடுதல் அல்லது நிதிவழங்கல் காசுப்பாய்ச்சலுடன் தொடர்பான வருமானம் அல்லது செலவின விடயங்கள் தாக்கத்தினால் சீரமைக்கப்பட்ட இலாபம் இல்லது நட்டத்தை மறைமுக முறைமை வெளிப்படுத்துகின்றது .

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**நிதிசார் கூற்றுக்கான குறிப்புகள்**
**2023 டிசம்பர் 31,இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்பு | இ.நி.அ.த 31.12.2023 ரூ. | SLFRS 31.12.2022 Rs. |
|---|---|---|---|
| **(3) வருமானம்** | | | |
